தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலையம்

# காதல் கொத்து

தமிழ்நாடு அரசு
கீழ்த்திசை நூலகச் சுவடி

பதிப்பாசிரியர்
திரு புலவர் ம. இராசேந்திரன் எம்.ஏ., எம்.பி.எல்.

பொறுப்பாசிரியர்
டாக்டர். இரா. நாகசாமி

வெளியீட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
1981.

First Edition : 1981
T. N. D. A. Pub. No. 74

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
Acc 10973
Date
MADRAS

© Tamilnadu State Department of Archaeology

**Kadal Kothu**

894·811 2-82

Editor
Pulavar. M. Rajendran M. A. M. Phil.,

General Editor
DR. R. NAGASWAMY

Price Rs. 4-50

Printed and Published by the State Department of Archaeology
on behalf of
Oriental Manuscripts Library, Madras.

C. ARANGANAAYGAM
Minister for Education
Government of Tamilnadu

Fort St. George
Madras-600009.
27-12-80

The Government of Tamilnadu, under a special scheme of publication of unpublished Tamil Manuscripts have come forward to undertake the printing and publishing of all the available unpublished Tamil Manuscripts in the State. Necessary funds towards the publication have been provided for the purpose. It is estimated that several hundred unpublished Tamil manuscripts dealing with native medicines, mathematics, music, fine arts, and literary compositions of various nature, are lying unpublished in different Manuscripts Libraries of this State and also in other parts of the country. Various Manuscript Libraries in the State, have been approached to make available their unpublished texts for publication. The authorities of these Manuscripts Libraries have come forward with interest and enthusiasm to afford necessary facilities for the same. Eminent Tamil Scholars, well-versed in the art of editing have been requested to take up the work of editing. Under the scheme the texts will be critically edited with suitable foot-notes and brief introductory analysis both in English and Tamil for the benefit of researchers and scholars. The selection of manuscripts, copying and editing have been entrusted to the Tamilnadu State Department of Archaeology.

So far the texts of 75 manuscripts have been copied and a number of them edited and are made available in printed form in this series. I am thankful to all the institutions and scholars who have come forward to join the Government in this venture. It is only a beginning and I do hope that all the available texts will be in the hands of scholars, educational institutions and public Libraries, so that the contribution of the Tamils through the centuries in different fields will be available for the proper understanding and comprehension of the Tamil Language, Literature and Culture.

C. ARANGANAYAGAM
27-12-80.

செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர், தமிழ்நாடு அரசு

செயின்ட்ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600009.

தமிழ்நாடு அரசு இதுகாறும் அச்சில் வெளிவராத பழம் ஓலைச்சுவடிகளைப் படி எடுத்து அச்சிட்டுப் பதிப்பிக்க ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. அதற்கு உரிய பண ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டிலும், மற்றும் நாட்டின் பிற பகுதிகளிலும், பல்வேறு சுவடி நூலகங்களில் தமிழக மருத்துவம், கணக்கு, இசை, நாட்டியம், சிற்றிலக்கியங்கள், பேரிலக்கியங்கள் இன்னபிற நூல்கள் அச்சிடாமல் இருப்பது கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு சுவடி நூலகங்களையும், அந்நிறுவனங்களில் உள்ள அச்சில் வராத நூல்களை அச்சிடும் பணிக்கு உதவுமாறு அரசு கேட்டுள்ளது. பல்வேறு நூலகத்தார்களும் தேவையான வசதிகளை அளிக்க மனமுவந்து முன் வந்துள்ளனர். தமிழ்த் துறையில் வல்லுநர்கள் இந்நூல்களை ஆராய்ச்சிக் குறிப்புடனும், முன்னுரையுடனும் பதிப்பித்துத்தர முன்வந்துள்ளனர். இந்த நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அடிக்குறிப்புக்களுடன் வெளியிடப்படும். ஓலைச்சுவடிகளைத் தேர்ந்தெடுத்துப் படி எடுத்துப் பதிப்பிக்கும் பணியைத் தொல்பொருள் ஆய்வுத்துறை, மேற்கொண்டுள்ளது.

இதுகாறும் 75 நூல்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல அச்சாகி இந்நூல் வரிசையில் வெளி வருகின்றன. அரசின் இந்தப் பணியில் ஒத்துழைக்க முன்வந்துள்ள ஆராய்ச்சி வல்லுநர்களையும், தமிழ்ப் பெரியோர்களையும், சுவடி நூலகங்களையும் நான் வாழ்த்துகின்றேன். இதுபோன்று விரைவில் அச்சில் வராத அனைத்து நூல்களும் ஆராய்ச்சியாளர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் பொது நூலகங்களுக்கும் கிடைக்கும் வகையில் வெளிவரும் என்பதில் ஐயம் இல்லை. இதன் பயனாய் காலந்தோறும் தமிழில் தோன்றிய பல்வேறு கருத்துக்களையும் பண்பாட்டையும் முழுமையாக அறிந்து கொள்ள இயலும் என்பதில் ஐயம் இல்லை.

**செ. அரங்கநாயகம்**
*27-12-1980*

# INTRODUCTION

The present collection, '*Kādal kottu*' consists of three Kadal poems,

a) Kumāralingan Kādal by Veṇbāp-puli,
b) Sivagangai Rājēndra Bhūpati Kādal, and
c) Kandar Kādal by Ponnunganapathi.

**Kumara Lingama Nayakan Kadal**

This work is on Kumāra Lingama Nāyak of Nattam, near Madurai. A manuscript dated Krodhana (1805 A.D.) in Mackenzie collection in the Government Oriental Manuscripts Library refers to Kumāra Lingama Nayak of Nattam and that he married the daughter of one Kāmākshi Nayak of Iluppur. It is possible that the hero of this poem is identical with the Kumāra Lingama of Nattam who lived towards the end of 18th century. One Kāmākshi Nayak is mentioned in the poem as the uncle of the hero. The work mentions that the hero was the chieftain of Nattam (*verse 5*).

It also refers to Candragiri (near Thiruppati) (*verse 1*) the one time capital of the Vijayanagar rulers, and to Kantamalai (V. 11, 82) Palaru (V. 12) Pāndinādu (V. 13) Erisai mānagar (V. 14, 63, 78, 411) Vadamalai (V. 20) Somagiri fort (V. 24) Erukādu, Golgonda (V. 258) Nagamangalam (V.249), Kannangudi (V.260) Kandanur (V. 261) Kuḍal (V. 261) Kongu (V. 262) Idaiyapatti (V. 262) Kalaiyanallur (V.263) and Alagāpuri (V. 267), all connected with the history of Palaiyapattus under the Nayaks. That Nattam chieftains had Garuda on their flag is alluded to in the work (V. 76). Lord Kailasanata and Goddess Shanbagaccelvi Amman of Kailasanatha temple at Nattam

(V. 309) are also mentioned. That Kumaralinga belonged to Sillavārkula is referred to (V. 410). The author of this text is called Veṇbāp-puli (Tiger among the composers of Veṇba).

**Sivagangai Rajendra Bhupati Kadal on Rajendra Bhupan of Sivaganga.**

The second work on Rājendra Bhūpan of Sivaganga included in this collection is also from a single manuscript preserved in the Government Oriental Manuscript Library, Madras. His name is given as Bodaguru, Gaurivallabhendra. Kulandai mānagar (V. 35) Naḻukottai (V. 43, 311) Thirukoshtiyur (V. 7,9,74) Puttur (V. 15) Sivagangai (V. 20, 415) Cholapuram (V. 23) Kalaiyārkoil (V. 6,61) Kodunkunran (Piranmalai (v. 73), Danushkodi (v. 289), Sankumukam (v. 288) are some of the important historical places referred to in this text.

Bodaguru is said to be a son of Gaurivallabha (v. 63). His brother was also called Gaurivallabha (64) a title adopted by the Sivaganga rulers. He belonged to the Solar race (v. 22). An inscription found on the pillar of the front mandapa, in the Subramanya temple at Sivaganga, mentions that the mandapa was erected by Marudu Servaikkarar, serving the royalty of Bodaguru Mahārāja of Sivaganga, in the Durmati year equal to 1801 A.D. (N. Sanjeevi, Marudiruvar). Obviously the Bodaguru of Sivaganga, mentioned in this text is identical with the contemporary of Mārudu brothers. The text may be assigned to circa 1800 A.D. A few verses added at the end mentions Palaniyāndiya Pillai as *Vasal Dalam*: Vaduganambi Yogan, and one Arunachalam Servai were the prominent chiefs under him. He probably had Lakshmi Narasimhacarayar as his teacher. Other prominent men mentioned are Senapati (v. 82) Rāyasakārappillaimar (v. 82) Aṭṭavanai Pillaimār (v. 82) Mandalikas (v. 83) and Sirmai adhikāris (v. 84). He seems to have been a great patron of music for he is portrayed as constantly listening

to Vina, and Suramandali (v. 86) He was also a patron of elephant and cock fights (v. 87). A great religious benefactor, he arranged for special Kattalais at the Siva temples at Thiruchirapplli (v. 72) Madurai (v. 72) Chidambaram (v. 72) Kalahasti (v. 72) Arunagiri (v. 72) (Ten) Kasi (v. 72) Thiruvarur (v. 72) Kurralam (v. 72) Rameswaram (v. 73), Kalaiyarkoil (v. 73) Nagappattinam (v. 73) Kodunkunru (v. 73) and Thirupputtur (v. 73); in the Vishnu temples at Thirukoshtiyur (V. 74) Alagarkoil (v. 74) Srirangam (V. 74) and in the Subramanya temples at Paramkunram (V. 75) Thiruchendur (V. 75) and Palanimalai (v. 75). In all theabove places, he arranged for *Kalaisandhi Ucci Sandhi, Malai Sandhi, Ira Sandhi* and special festivals (v. 77). He went to Cennapattina (Madras, and had an audience with the Governor and obtained special previleges from the Revenue Board. The Governor of Madras mentioned in this text might be Lord Clive, who was Governor of Madras from 1798 to 1803.

**Kandar Kadal**

The third 'Kadal', text included in this text is from manuscript No. D. 208 of the Government Oriental Manuscript Library. It is on the presiding deity Lord Subhrahmanya of Thiruvallam in Gudiyattam taluk of North Arcot District. The name of the author of this text appears at the end of the work as Ponnunganapathi. Its date however is not known. Since it is also the text of the '*Kādal*' class it is included in this text. While the former two are in praise of two chieftains the present is on the God of Subramanya.

These three texts are edited by Pulavar Rajendran M. A. M., Phil, of Government Oriental Manuscripts Libraray, Madras.

R. NAGASWAMY

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மேற்கோள் விளக்கக் குறிப்பகராதி | பக்கம் |
| 2. | பதிப்பாய்வுரை | 1 |
| 3. | குமாரலிங்கவேந்தன் காதல்-உட்தலைப்புகள் | 28 |
| 4. | சிவகங்கை இராசேந்திரபூபதி காதல் | 73 |
| 5. | சிவகங்கை இரசேந்திரபூபதி காதல்-உட்தலைப்புகள் | 74 |
| 6. | கந்தர் காதல் | 121 |
| 7. | கந்தர் காதல்-உட்தலைப்புகள் | 122 |
| 8. | துணைநூற் பட்டியல் | 137 |
| 9. | உட்தலைப்புகளின் பட்டியல் | 139 |
| 10. | அருஞ்சொல் அகர வரிசை | 143 |

# மேற்கோள் விளக்கக் குறிப்பகராதி

| | | |
|---|---|---|
| கம்ப | — | கம்பராமாயணம். |
| கல்லா | — | கல்லாடம். |
| கலிங்க | — | கலிங்கத்துப்பரணி. |
| குறள் | — | திருக்குறள். |
| குமர. பிர. | — | குமர குருபரர் பிரபந்தத் திரட்டு; |
| முத்துக். பிள் | — | முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ் |
| குமரேச. சத | — | குமரேசர் சதகம். |
| கூளப்ப நாயக் | — | கூளப்ப நாயக்கன் காதல். |
| சிலப் | — | சிலப்பதிகாரம். |
| சூளா | — | சூளாமணி. |
| சேது | — | சேது புராணம். |
| த. வா. கோவை | — | தஞ்சைவாணன் கோவை. |
| தனிப்பா | — | தனிப்பாடல். |
| திருப்பு | — | திருப்புகழ். |
| திருவாலவா | — | திருவாலவாய்க் காண்டம் |
| தி. வி. புராணம் | — | திருவிளையாடற் புராணம் |
| திருவேங். சத. | — | திருவேங்கடவன் சதகம். |
| திவ். பெரிய திரு | — | திவ்யப்பிரபந்தம்; பெரிய திருமொழி. |
| திவ். முதலாயிரம் | — | திவ்யப்பிரபந்தம் முதலாயிரம். |
| தேவா | — | தேவாரம். |
| தொல். களா | — | தொல்காப்பியம் களவியல் |
| தொல். பொருளியல் | — | தொல்காப்பியம் பொருள் இயல். |
| பரிபா | — | பரிபாடல். |
| பு. வெ. மாலை | — | புறப்பொருள் வெண்பா மாலை. |
| புறம் | — | புறநானூறு. |
| பெரும்பாண் | — | பெரும்பாணாற்றுப்படை |
| மணிமே | — | மணிமேகலை. |
| யாப். காரிகை | — | யாப்பருங்கலக் காரிகை. |
| வில்லி. பாரதம் | — | வில்லிபுத்தூரார்பாரதம். |

# பதிப்பாய்வுரை

## இலக்கியம்

தன்னைச் சுற்றியுள்ள இயற்கை, தான் வாழும் சமுதாயம் பற்றிய தனது கருத்துக்களையும், அவைபற்றித் தன்னிடம் எழுந்த கற்பனைகளையும், அவைதன்னைப் பாதிக்கும் போது ஏற்படும் உணர்வுகளையும் வெளிப்படுத்துவதே இலக்கியமாகும்[1]. அவை அழகுணர்ச்சியோடு வெளிப்படுத்தப்பட்டாலும் அவற்றிற்கென்று நோக்கும் இருந்துவருகிறது. அதனால் தான் இலக்கு+இயம் (குறிக்கோளைக் கூறுவது)- இலக்கியம் என்றனர். எனவே வாழ்வின் மேலான குறிக்கோள்களுக்கு ஈடுபடுத்திக் கொள்ள நமக்கு வலிமையூட்டும் வகையில் இலக்கியங்கள் விளங்குகின்றன.

ஒவ்வொரு காலச் சமுதாய அமைப்பும் உறவுகளுமே அவ்வக்கால இலக்கியத்தின் இலக்குகளைத்தீர்மானிப்பதால் முக்காலத்திற்கும் இலக்கியத்தின் இலக்குகள் ஒன்றாகவே இருப்பதில்லை.

சங்ககால இலக்கியத்திற்கு, போரும் காதலும் இலக்காக இருந்தன. அச்சமுதாய அமைப்பில், போர் தவிர்க்க முடியாததாக இருந்ததால் 'களிறெறிந்து பெயர்தலே காளைக்குக் கடனாக இருந்ததென்று புறநானூறு குறிப்பிடுகிறது. சங்கம் மருவிய காலத்தில், பௌத்த சமண சமயங்களின் தாக்குரவால் அறவொழுக்கங்களை இலக்காகக் கொண்ட பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் எழுந்தன.

பல்லவர் காலத்தில் (கி.பி. 600-800) சமயப்போராட்டங்களின் தீவிரத்தன்மையால் பக்தியை இலக்காகக் கொண்ட தேவார திருவாசகங்களும், திவ்யப்பிரபந்தங்களும் தோன்றின.

---

1. 'இயற்கையைச் சாயல் பிடிப்பதே இலக்கியம் என்பர். அதாவது இலக்கியம் உலகத்தை, உலகம் அறிந்த சமுதாயத்தை, உலகம் உணர்ந்த மக்கள் வாழ்க்கையை, மனித மனத்தைப் பிரதிபலிக்க வேண்டும்.'

—தெ. பொ. மீ., 'தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்' முன்னுரை ப. XIII.

சோழர் காலத்தில் (கி. பி. 800-1200) தமிழ்ப் பேரரசு தோன்றி, தமிழகத்தை மட்டுமின்றி தென்கிழக்கு ஆசியா முழுவதிலும் ஆதிக்கம் செலுத்தி அரசாண்டது. இக்காலத்தில் பேரரசர்களைப் போன்றவர்களைப் பாட்டுடைத்தலைவர் களாகக் கொண்ட பெருங்காப்பியங்களும் சிறு காப்பியங் களும் போர்பற்றிய பரணி உலா போன்ற சிற்றிலக்கியங் களும் தோன்றின.

நாயக்கர் காலத்தில் (கி. பி. 1200-1600) சிற்றரசர்களே இருந்ததால் அவர்களைத் தலைவர்களாகவும், அவர்களைப் போன்றவர்களைத் தலைவர்களாகவும் கொண்ட சிற்றிலக் கியங்கள் மிகுதியாகத் தோன்றின.

ஐரோப்பியர் காலத்திலும் (கி. பி. 1600-1946) சிற்றரசர் களை ஒத்த ஜமீன்தார்களும், வள்ளல்களும் தமிழ்ப்பற்றாளர் களாக வாழ்ந்தனர். இவர்களைப் பற்றியும் சிற்றிலக்கியங்கள் எழுந்தன. பிற்காலத்தில் விடுதலை உணர்வும் இலக்கியங் களுக்கு இலக்காக அமைந்தன.

விடுதலை அடைந்த இந்தியாவில் தோன்றும் இலக்கியங் களின் இலக்குகளும் மாறியிருப்பதை நாமறிவோம். எனவே கால ஓட்டத்தில், இலக்கியங்களின் இலக்குகளும் மாறி வந்திருக்கின்றன எனலாம்.

## வகைகள்

உள்ளடக்கமே வடிவத்தைத் தீர்மானிப்பதால் இலக்குகள் மாறுகின்றபோதே வடிவங்களும், இலக்கிய வகைகளும் புதிது புதிதாகத் தோன்றுவது இயல்பாகும்.[2] சங்ககால இலக்கியம் பொருள் அடிப்படையில் அகம் புறம் என்று பிரிக்கப்பட்டது. பின்னர் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு, பெருங்காப்பியம், சிறுகாப்பியம், திருமுறை, திவ்யப் பிரபந்தங்கள், சிற்றிலக்கியம் என்றெல்லாம் பகுக்கப்பட்டன.

---

2. 'இலக்கியப் பாகுபாடு மொழிக்கு மொழி, பண்பாட்டுக்குப் பண்பாடு, மாறுபடுந்தன்மையது. பாகுபாட்டுத் தன்மையும் எண்ணும் அவ்வாறே மாறு படும் இயல்பின. மொழிக்கு மொழியேயன்றி ஒரு மொழிக்குள்ளும் காலவகை யான் இப்பகுப்பும் அதன் தன்மைகளும் மாறுபடுதல் இயற்கை. வடமொழி

## சிற்றிலக்கியம்

சிற்றிலக்கியம் பேரிலக்கியம் எனும் சொல்லாட்சிகள் தனித் தமிழ் இயக்கம் வலுவடைந்த பிற்காலத்தில் தான் வழக்கில் வந்திருக்கின்றன.[3] சிற்றிலக்கியங்களாவன தமிழ் மொழியில் வழங்கும் சிறுபிரபந்தங்களாகும்.[4] பிரபந்தங்கள் என்பது நன்றாகக் கட்டப்பட்டது என்னும் பொருள்தரும் வடசொல் ஆகும். யாப்பு, செய்யுள் என்பன அப்பொருள் தரும் தமிழ்ச் சொற்களாகும். எழுத்து, அசை முதலிய பலவகை உறுப்பு களால் அகமும் புறமுமாகிய பொருள்களுக்கு இடமாகஇயற்றப் படுவதால் இவை இப்பெயர் பெற்றன.

'பிரபந்தம்' என்ற சொல்லும் மிகவும் பிற்காலத்தில்தான் தமிழில் வந்தது. ஆனால் பிரபந்தங்களின் கூறுகள் பழைய காலம்முதலே இருந்து வந்திருக்கின்றன. அகக்கூற்றுக்கு உரிய உருக்கள் இருபத்தெட்டு என்று கூறுமிடத்துச் சிலப்பதிகார உரைகாரர் இருவரும், 'கந்த முதலாகப் பிரபந்த உருஈறாக இருபத்தெட்டும்' என்று இச்சொல்லை ஆட்சி செய்கின்றனர். அடியார்க்கு நல்லார் மட்டும் 'பிரபந்தம் என்றது அடிவரை யறையின்றி பல தாளத்தால் வருவது' என்று குறிப்பிடுகிறார். இதனால் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கூட பிரபந்தம் என்ற சொல் இன்று நாம் கருதுகின்ற ஓர் இலக்கியப் பிரிவாக, சிற்றிலக்கியம் என்ற பொருள் உடையதாக அமையவில்லை[5] என்று பிறர் கூறினாலும் வழக்கில் வந்துவிட்ட காரணத்தால் ஏற்றுக் கொள்ளலாம்.

---

வாணர் தம் இலக்கியத்தைத், 'திருஷ்ய காவியம்', சிராவ்ய காவியம் என இரு வகையாகப் பகுப்பர். (A.V.S. ப. 21) இப்பாகுபாடு அவையை நோக்கியது. ஆங்கில இலக்கிய அறிஞர்கள் தற்சார்புக் கவிதை (Subjective Poetry), தற்சாராக் கவிதை (Objective Poetry) என இரு கூறாகக் கருதுவர்.

—அ. அ. மணவாளன், சங்க இலக்கியக் கொள்கை இலக்கியக் கொள்கை தொகுதி-2. பக். 27-28.

3. டாக்டர் முத்து சண்முகம், நிர்மலா மோகன், 'சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வகையும்' ப. 44.

4. பிரபந்தங்கள் என்பதற்குச் சரியான மொழி பெயர்ப்பாகச் சிற்றிலக்கியம் அமையவில்லை - மு. அருணாசலம், 'பிரபந்தமரபியல்' முன்னுரை, ப. 6.

5. மு. அருணாசலம், '10 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு' பக். 211 - 213.

புதிய இலக்கியங்களின் தோற்றத்திற்குத் தொல்காப்பியர் தம் காலத்திலேயே,

'............விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே'

என்று வழி கூறியுள்ளார். குறிப்பாகச் சிற்றிலக்கியங்களை இந் நூற்பாவிற்குப் பேராசிரியர் தம் உரையில் எடுத்துக்காட்டு கிறார்.

## சமுதாய வரலாற்றுப் பின்னணி

கி.பி. ஏழாம் நூற்றாண்டைச்சேர்ந்த நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் மீது பாண்டிக்கோவை இயற்றப்பட்டது. இதுவே தனித்து எழுதப்பட்ட முதல் சிற்றிலக்கியமாகும்.[6] ஆனால் சிற்றிலக்கியங்களின் வளர்ச்சி பன்னிரண்டாம் நூற் றாண்டிற்குப் பின்னர்தான் தொடங்குகிறது. 16, 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் மிகுதியாகத் தோன்றுகின்றன.[7]

சிற்றிலக்கியம் தோன்றத் தொடங்கிய காலமும், அது பல்கிய காலமும் ஏறத்தாழ தமிழக அரசியல் ஒரே தன்மை யில் நிலவியது. பேரரசுகள் இன்றி வேற்று நாட்டார் அல்லது சிற்றரசர்களின் கீழே நாடு சிதறுண்டு கிடந்தது. பெருங்காப்பியங்கள் தோன்றுதற்குரிய சமுதாய நிலைமை யில்லாததால் சிற்றிலக்கியங்கள் தோன்றலாயின.

## சிற்றிலக்கியக் கொள்கை

சோழப்பேரரசர்கள் காலத்தில் தோன்றிய சிற்றிலக் கியங்கள் சிலவே. அவற்றின் பாடு பொருள்களும் வீரமாகவும், அரசனின் வெற்றி உலாவாகவும் அமைந்தன; என்றாலும் அவற்றிலும் காமப்பகுதியைக் கடைதிறந்து உலாவர விட்டார்கள்.

---

6. மு. அருணாசலம், '11ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு' ப. 358.

7. 'தொல்காப்பியத்தையும் சங்கத் தொன்னூல்களையும் படிக்கவும், பரப்ப வும் வேண்டும் என்ற வேணவா இடைக் காலத்துத் தீக்கொழுந்து போலப் பற்றியது. உரை ஒருவகை முயற்சி. சார்பிலக்கண நூல்வகை ஒரு முயற்சி. சிற்றிலக்கிய வகை ஒரு வகை முயற்சி. இம்மூவகை முயற்சியாலும் தொன்னூல் கள் இடைக்காலத்துப் பரவின, படிக்கப்பெற்றன. சிற்றிலக்கிய முயற்சியே பிரபந்தங்களின் எழுச்சியாயிற்று!'

—டாக்டர். வ. சுப. மாணிக்கம், 'சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள்', தொகுதி 4. தலைமையுரை, ப. 16.

பிற்காலத்தில் சிற்றரசர்கள், வள்ளல்கள் ஆகியோரின் விருப்பமாகிய காதலும், அவர்களின் வீரச்செயலாகிய வேட்டை யாடுதலும் சிற்றிலக்கியத்திற்குக் கருவாயின. இந்தத் தாக் குரவிற்கு அக்காலத்திய கடவுள் பற்றிய சிற்றிலக்கியங்களும் தப்பமுடியவில்லை. சிவப்பிரகாசர்கூட சிற்றிலக்கியச் சிற்றின் பக் கொள்கையை உடைய கோவையை, பேரின்பப் பெருங் கடவுளுக்கும், திருவெங்கைக் கோவை என்று படைத்தார். இதற்கு முன்னோடியாகவிருந்த, மாணிக்கவாசகரின் 'திருக்கோ வை கூட' 'காமஞ்சான்ற ஞானப்பனுவல்' என்று அழைக்கப் படுகிறது. ஆனால் பக்திக் காலத்தில் நாயக, நாயகி முறையில் இறைவனைப் பற்றிப்பாடப்பட்டதிருமுறைகளாகிய 'பிரபந்தமாலை' 'திவ்யப்பிரபந்தம்' ஆகியவற்றில் கடவுள் பற்றிய செய்திகளுக்கு முதலிடமும், காதலுக்கு இரண்டா மிடமும் இருந்தன. சிற்றிலக்கியங்களில் அத்தன்மை சற்று மாறி இருக்கிறது.

## யாப்பும் இலக்கண நூல்களும்

சிற்றிலக்கியங்கள் இந்த யாப்பில் தாம் வருமென்பதில்லை. ஆசிரியப்பா முதலாக கலிவெண்பா முடிவாக அனைத்துப் பாவிலும் பாடப்படலாம். குறிப்பாகச் சில சிற்றிலக்கியங்கள் தாம் யாப்பு வரையறையை ஏற்றுக் கொள்கின்றன.[8]

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் மரபாக லின், சிற்றிலக்கியங்கள் பெருகப்பெருக, அவைபற்றிய இலக்கண நூல்களும் தோன்றலாயின. பன்னிருபாட்டியல் முதலாக வீரமாமுனிவரின் சதுரகராதி வரை, சிற்றிலக்கியங் களின் இலக்கணங்களைக் கூறுகின்றன.

## இலக்கண நூல்களும் சிற்றிலக்கிய நூல்களும்

பழைய இலக்கியங்களிலிருந்து ஒரு சில துறைகளை எடுத் துக்கொண்டு தனித்தனிச் சிற்றிலக்கியங்கள் படைக்கப்பட்ட

8. 'It may be in any type of metre, form Asiriyam to Virutham or the long drawn out Kalivenba; the number of verses in a Poem may also be anything; yet some literatures have specified the number of verses as 5, 8, 20, 40, 70 and even up to 400'.

—M. Arunachalam, "*An Introduction to the history of Tamil literature*" p. 238.

தால், கணக்கற்ற சிற்றிலக்கியங்கள் தோன்றலாயின. பின்னர் வந்த இலக்கண நூல்களும் அவ்வரையறையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் பாட்டியல் நூல்களில் கூட ஒருமித்த எண்ணிக்கையைக் காண முடியவில்லை.

| | | | |
|---|---|---|---|
| கி.பி. 12ஆம் நூற்றாண்டிற்கு முன் எழுதப்பட்ட | | பன்னிரு பாட்டியலில் | - 61 |
| கி. பி. 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட | | வெண்பாப் பாட்டியலில் | - 55 |
| ,, 14 | ,, | நவநீதப்பாட்டியலில் | - 44 |
| ,, 16 | ,, | சிதம்பரப்பாட்டியலில் | - 63 |
| ,, 16 | ,, | பிரபந்தமரபியலில் | - 96 |
| ,, 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்ட | | இலக்கண விளக்கப் பாட்டியலில் | - 63. |

என்று சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை இடம் பெறுகின்றன.

### இலக்கியத்தில்

சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவில்,

'தொண்ணூற்றாறு
கோலப் பிரபந்தங்கள் கொண்டபிரான்'[9]

என்ற தொடர் காணப்படுகிறது. இலக்கியச் சான்றாக இவ்வரையறையை முதன்முதலில் இந்த நூலில்தான் காணமுடிகிறது.

ஒவ்வொரு இலக்கண நூலும் கூட ஒரே சிற்றிலக்கியத்தின் பெயரை வெவ்வேறு பெயரில் குறிப்பிடுகின்றன. பெயர்களை மட்டும் வைத்துக் கொண்டு பார்த்தால் பாட்டியல் நூல்களில் காணப்படும் சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை 151 ஆக இருக்கிறது. எனினும் சைவ சாத்திரங்கள் 96 என்பதைப்போல சிற்றிலக்கியங்கள் 96 என்ற வரையறையே பலரும் அறிந்த ஒன்றாக இருக்கிறது. இவ்

9. டாக்டர் இரா. நாகசாமி. [பதி.] 'சிவந்தெழுந்த பல்லவராயன் உலா, 104', கல்வெட்டு - 6, ப. 22.

வெண்ணிக்கையைக் கடந்தும் பல சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் காதலும் ஒன்றாகும்.

## காதல்

காதல் என்பதற்கு அன்பு, காமவிச்சை, பத்தி, வேட்கை, ஆவல், பிரபந்தவிசேடம், கொல்லுகை, தாக்குகை, தறிக்கை ஆந்தை முதலியவற்றின் ஒலி, எதிராப்பு, எனப் பன்னிரண்டு பொருள்களைத் தமிழ் லெக்சிகன் குறிப்பிடுகிறது.[10]

மேற் குறிப்பிட்ட அனைத்துப் பொருள்களிலும் இச்சொல் இலக்கியத்தில் ஆட்சி செய்யப் பட்டிருப்பினும், ஒருவனும் ஒருத்தியும் கண்டு விழைந்து, 'நிலத்தினும் பெரிதாக வானினும் உயர்ந்ததாக, நீரினும் ஆரளவின்றாக அன்பு கொண்டு, 'யாயும் ஞாயும் யாராகியரோ, எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்' என்று வியப்புற்று உணர்ந்து வாழும் நிலையையே சிறப்பாகக் குறிக்கலாம் எனினும் இங்கு பிரபந்த வகையே எடுத்துக் கொள்ளப்படுகிறது.

சங்ககால இலக்கியத்தின் அகத்திணை பகுப்புகளாகிய களவு, கற்பு இரண்டனுள் களவொழுக்கத்தின் மரபுகளைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது 'காதல்' சிற்றிலக்கியம். இது சிற்றிலக்கிய வரலாற்றில் மிகவும் பிற்பட்டதாகும். காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல், ஊர் / பேர் வினாதல், மெய் தொட்டுப் பயிறல் போன்ற கோவை மரபுகளும், தலைவி தலைவனைப்பற்றிக் கூறி தூது அனுப்பும் தூதுமரபுகளும், வீதியில் செல்லும் வேந்தனைக் கண்டு காமுற்றப் பெண்கள் புலம்பும் உலாமரபுகளும் நிறைந்து காணப்படுகின்றன. எனவே கோவை, தூது, உலா போன்ற சிற்றிலக்கியங்களுக்குப் பின்னாலே இவை எழுந்துள்ளன என்று துணியலாம்.

இலக்கண நூல்கள் உலாவைப் 'பவனிக் காதல்' என்று குறிப்பிடுகின்றன.[11] பவனிக்காதலுக்கும், காதல் சிற்றிலக்கியத்

10. Tamil Lexicon vol. II, Part II, P. 861.

11. 'பவனிக் காதல் குறத்திப் பாட்டே
உழத்திப் பாட்டு ஊசல்எழு கூற்றிருக்கை'
—பொருட்தொகை நிகண்டு, ப. 192.

திற்கும் வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன. 'உலா இலக்கியம், பவனிக்காதலாகிப் பிறகு 'காதல்' சிற்றிலக்கியமாக மாறிஇருக்கிறது.* பவனிக்காதல் 96 என்ற வரையறைக்கு உட்பட்டதாகும்.

## தனித்தன்மைகள்

காதல் உணர்வுகள் மற்ற இலக்கிய மரபுகளின் வரம்பு மீறிப் பாடப்பட்டுள்ளன. இதற்கு முற்பட்ட இலக்கியங்களில் வேட்டைக்குச் சென்றதைச் சிறப்பித்துப் பாடியதாகச் செய்தியில்லை. 'போர்முகத்து எவர்வரினும் புறங்கொடாத பருவயிரத் தோளெங்கே' என்று பைரவியைக் கேட்கும் பாவையரைப் படைத்துக் காட்டும் பரணி. ஆனால் 'காதல்' ஆசிரியர்கள் வள்ளல்கள், ஜமீன்களின் வாழ்க்கையிலே போர்இன்மையால் வேட்டைக்குச் செல்வதை வியந்து பாடியிருக்கிறார்கள்.

## காதல் சிற்றிலக்கியங்கள்

திருமலை நாயக்கரின் மைத்துனனாகிய கூளப்பநாயக்கன் மீது பாடப்பெற்ற 'காதல்' சிற்றிலக்கியமே முதலில் எழுதப் பட்டதாகும். கி.பி. 1705-31-ல் வாழ்ந்திருந்த வீரமாமுனிவரின் ஆசிரியராகிய சுப்ரதீபக்கவிராயர் இயற்றியது. இவர் மதுரை விஜயரங்கச் சொக்கநாத நாயக்கன் காலத்தவர்.

அறியமுடிகின்ற பிற காதல் சிற்றிலக்கியங்களாவன :—

1. கொங்கு நாட்டைச் சேர்ந்த பழைய கோட்டை நல்ல தம்பி சர்க்கரை மன்றாடியார்மீது வீரபத்திரக் கவிராயர் பாடிய காதல்.

2. இராசவல்லிபுரத்தில் சிறந்த வள்ளலாயிருந்த முத்துசாமிப்பிள்ளை மீது அழகிய சொக்கநாதபிள்ளை பாடிய காதல்

3. சரவணப்பெருமாள் இயற்றிய வைரவநாடார் காதல்.

4. வள்ளல் பெத்தாச்சி செட்டியார் மீது பெரியசாமி சேர்வை இயற்றிய கர்த்திர மஞ்சரி.

---

* 'பவனிக்காதல் - உலாக் காட்சியில் எய்திய காம மிகுதியால், அவை பிறரொடும் உரைத்து வருந்துவது'

—வீரமாமுனிவர், 'சதுரகராதி' தொகையகராதி, ப. 348.

5. பெரிய சரவணக்கவிராயர் இயற்றிய முத்திருளப்பப் பிள்ளை காதல்

6. க. இராமச்சந்திரன் இயற்றிய கதிர்காமக்காதல்

7. தெய்வச்சிலையாபிள்ளை இயற்றிய மநுநீதி காதல்

8. அழகிய சொக்கநாதர் இயற்றிய காதல் தனிப்பாடல்

9. ஆரைமாநகர் சாமிநாதபிள்ளை பாடிய இரண பெருமாள் காதல்

10. அழகிய சொக்கநாதர் பாடிய திருமலைக் கறுப்பன் காதல்

11. விராலிமலை வேலவர் காதல்

12. கந்தர் காதல்

13. பழனிக் காதல்

14. சுப்பிரமணியர் பேரில் காதல்

15. சிவகங்கை இராசேந்திரபூபதி காதல்

16. குமாரலிங்கவேந்தன் காதல்

17. கருப்பண்ணசாமி பேரில் காதல்

18. விரசைநகர் கண்ணன் காதல்

19. குன்றக்குடி குமரன் பேரில் காதல்

20. சீதரன் பேரில் காதல்

21. வேங்கடாசலப் பெருமாள் பேரில் காதல்

22. சென்னிமலை யாண்டவர் காதல்

23. கொடுமணல் கந்தசுவாமி காதல்

24. ஆந்தைக் காதல்
25. தும்மற் காதல்
26. கௌளிக் காதல்

} இவை சோதிடம் பற்றியவை.

**எடுத்துக் கொண்டவை**

குமாரலிங்கவேந்தன் காதல், சிவகங்கை இராசேந்திர பூபதி காதல், கந்தர் காதல் ஆகிய மூன்றும் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. இவற்றுள் பழனியில் உள்ள முருகன்மீது

பாடப்பெற்ற 'கந்தர் காதல்' ஒன்று தொல்பொருள் ஆய்வுத்துறையில் உள்ளது. ஆனால் அதிலிருந்து இத் தொகுப்பில் இடம்பெறும் கந்தர் காதல் முற்றிலும் வேறுபட்ட தாகும்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில், ஓலைச் சுவடியாகக் கிடைத்தவற்றுள் முற்றுப்பெற்றதும் அதிகம் சிதை வில்லாததுமாகிய குறிப்பிட்ட மூன்று சுவடிகளும் பதிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இப்பதிப்பிற்கு உதவியாக, குமாரலிங்கவேந்தன் காதலில் மூன்று (ஆர்: 5134 ஆர்: 5151, ஆர்: 5160) சுவடிகளும், இராசேந்திரபூபதி காதலில் இரண்டு (ஆர். 5000.ஆர். 5338) சுவடிகளும் கிடைத்தன. கந்தர் காதலில் மட்டும் (டி. 208) கிடைத்த ஒரே சுவடியோடு தஞ்சை சரசுவதி மகால் நூலகச்சுவடி ஒப்பிட்டுப் பார்க்கப் பயன்பட்டது.

## ஆசிரியர் வரலாறு

குமாரலிங்க வேந்தன் காதலின் ஆசிரியர், நூலின் இறுதியில் தன்னை வெண்பாப்புலி (411) என்று அழைத்துக் கொள் கின்றார். நல்ல வரலாற்றறிவு உடையவர். சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதைத் தவிர நூலாசிரியர் பற்றிய வேறு குறிப்பு தெரியவில்லை.

பிற காதல் நூலின் ஆசிரியர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் ஏதும் கிடைக்கவில்லை.

## காலம்

இக்காதல் சிற்றிலக்கியங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின தாக இருக்கலாம்.

## 'காதல்' தலைவர்களும் வரலாற்றுச் செய்திகளும்

### குமாரலிங்க வேந்தன்

கி. பி. 1565-ல் தலைக்கோட்டைப் போரில் தோற்ற விசயநகர அரசர்கள் தலைநகரை மாற்றத் தொடங்கினர்.[12]

12. கலைக்களஞ்சியம், தொகுதி 4. சந்திரகிரி. ப. 425.

கி. பி. 1572 இல் திருமலை, பேரரசை மூன்று மண்டலங்களாகப் பிரித்துத் தன் மூன்று புதல்வர்களையும் அம்மண்டலங்களுக்கு அரசர்களாக ஆக்கினான். முதல்மகன் முதலாஞ்சீரங்கன் பெனுகொண்டாவைத் தலைநகராகக் கொண்டு தெலுங்கு நாட்டையும், இரண்டாம் புதல்வன் இராமன் சீரங்கப்பட்டணத்திலிருந்து கன்னட நாட்டையும், மூன்றாம் மகன் வேங்கடபதி, சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்டு தமிழகத்தையும் ஆண்டுவந்தனர். சென்னைப்பட்டணத்தை ஆங்கிலேயர்க்கு அளித்த சென்னப்பநாயக்கன், இச்சந்திரகிரித் தலைவன் மரபினனேயாவான்.[13] இவர்களில் குமாரலிங்க வேந்தனும், சந்திர கிரியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு இருக்கிறான். இவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு குமாரலிங்க வேந்தன் காதல் எழுதப் பட்டுள்ளது. இவன் குமாரலிங்க ராசேந்திரன் (184) குமாரலிங்கராசன் (5) குமாரலிங்க மகா ராசன் (304) என்றெல்லாம் அழைக்கப்பட்டுள்ளான்.

இதில் இவ்வரசன், திருமாலின் பக்தன்(3) (சிவபெருமானையும் வணங்கியுள்ளான் (309)) பூமியில் எல்லோரும் புகழும் குணம் உடையவன் (10) பலம் மிக்க சேனை உடையவன் (23) சோமகிரி கோட்டைக்குச் சொந்தக்காரன்(24) (சோமகிரி-சந்திர கிரியின் மறுபெயர், நீதி முறை தவறாதவன் (31) சீர் கொடுக்கும் செங்கையான்(32) பாலாறு உடையவன்(12) கெருடக்கொடி உடையவன்(76) என்று குறிப்பிடப்படுகிறான். இவன் எறிசை என்னும் நகரிலிருந்து அரசாட்சி செய்தவன் (14, 63, 78, 411) காந்தைமலை என்னும் மலைக்குரியவன் (11, 82) எறிசை நகரிலிருந்த கைலாசநாதர் செண்பக வல்லியம்மனை வணங்குபவன்(309) எறுகாதுலிங்கயமன் என்பது இவன் தந்தை பெயர்(25) மாமன் பெயர் சின்னக் காமாட்சி (33) என்பனவும் நூலிலிருந்து தெரியவருகின்றன.

## சிவகெங்கை இராசேந்திர பூபதி

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிவகங்கை கி.பி. 1733-ல் சசிவர்ணப் பெரிய உடைய தேவர்என்பவரால்

13. புலவர் குழந்தை, 'கொங்கு நாடு'

உருவாக்கப்பட்டிருக்கிறது.[14] இச்சிவகங்கைப் பகுதியில் வாழ்ந்த சிறு தலைவகர்ளில் ஒருவனாக இராசேந்திர பூபதி விளங்கியிருக்கிறான். இவனைத் தலைவனாகக் கொண்ட இராசேந்திர பூபதி காதலில் இவன், 'எண்டிசை மன்னரும் பணிந்தேத்தக் கொலுவிருக்கும் மண்டலிகன்(3) இராமனை ஒத்த மநுவேந்தன்(14) சிவகங்கை யாதிக்கபூபதி(20) பொதிய மால்வரையான்(32) வையை மாநதியான்(33) குழந்தை மாநகரான்(35) முல்லை மாலிகையான்(39) நாலு கோட்டையினான் (43,311,374) அங்கர், கல்லியாணர், மலையாளத்தரசர், சிங்களர் வந்து சலாம் செய்யும் வாசலினான் (50) கொச்சியர் சீனர் குடகர் திறை கொண்டு அளக்கும் வாசலினான் (52) வள்ளல் (57) தாமோதரப் பெருமாள் (60) காளைலிங்கநாதர் இரு கஞ்சமலர்த் தாள் பணிவோன் (61) கெவுரி வல்லவமா லீன்ற புத்திரன் (63) ஆதவகுலோதையன் (65, 411) தமிழுக்கு அருளும் தன்மையன் (67) ஆகம கலாதரன் (69) முப்பத்திரண்டு அறமும் படைத்தோன் (70) சைவ வைணவக் கோயில்களுக்கு அறக் கட்டளைகள் அளித்தோன் (77) சொல்லில் அரிச்சந்திரன் (78) கொடையில் கர்ணன் (135அ) ஆசைக் கண்ணாளன், நல்ல ஆணழகன் (384) என்று பலவாறாகப் பாராட்டப்பட்டுள்ளான்.

மேலும், கருடப்பதாகையினான் (40) என்றும், வேட்டைக்குச் செல்லும் போது, வில், சேல், அனுமன், புள் ஆகிய கொடிகளை விட உயரத்தில் பறக்குமாறு சிங்கக் கொடியை வீரர்கள் தூக்கிச் சென்றனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னைக்கு வந்து கவர்னரைப் பேட்டி கண்டு, போர்டின் உத்தரவும் பெற்று பயன் அடைந்தான் என்றும் பாராட்டப் பட்டுள்ளான்[15].

முதலிரண்டு காதல்களிலும் 'கெருடக் கொடி' குறிப்பிடப் படுகிறது. மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களில் 14, 15 ஆம் நூற்றாண்டில் ஆண்ட வாணாதிராயர்களின் கொடியாக

14. The Founder of Sivaganga was Sasivarna Periya Udaya Thevar, in 1783 who was the first king of sivaganga dynasty. He was a Chieftain of Nalukottai. Dr. A. Ramasamy, (Ed.), 'Gazetteers of India,' Ramanathapuram Dist., Sivaganga, 1972.

15. சிவகங்கை இராசேந்திர பூபதி காதலின் பின்னிணைப்புப் பாடல்.

'கெருடக் கொடி' இலங்கியிருக்கிறது. இவர்களில் ஒருவனாகிய மாவலி வாணாதிராயனின் பட்டப் பெயர்களில் ஒன்று 'கருடகேதனன்' என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது.[16] கல்வெட்டுப் பாடல் ஒன்றும் இதனை உறுதிப்படுத்துகிறது.[17] எனவே அவர்களின் வழியினராகவோ அவர்களை வென்றவர்களின் வழியினராகவோ இப்பாட்டுடைத் தலைவர்கள் இருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

## திருவல்லைக் கந்தர்

திருவல்லை, வட ஆற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் வட்டத்தில், நீவா நதிக்கரையில் அமைந்துள்ளது. இதனைத் திருவல்லம் என்றும் திருவலம் என்றும் அழைக்கின்றனர்.[18]

இச்சிற்றிலக்கியத்தில், வள்ளிமலை, கஞ்சன்மலை, பாலாறு ஆகியவை உடையவன் (85, 86) பெருந்தொண்டை மண்டலத்தான், திருவல்லை மாநகரான் (87) குஞ்சரம் உடையான் (88) ஆழியுலகெல்லாம் தன் ஆணை செலுத்துபவன் (89) தந்தை கொற்றளந்தார், தாய் நேரிழையார், அண்ணன் பொன்னுங் கணபதி, (90) மாமன் மாயவன், மாமி பூந்திரு, மைத்துனர்கள் காமன், கஞ்சன் (91) மனைவியர் வள்ளி, தெய்வயானை (92) சூரனை வென்றவன் (93) சண்முக வேலாயுதர் என்னும் பெயரை உடையவன் (94) காமக்கலையில் வல்லவன் (95-98) என்று கந்தர் பாராட்டப்பட்டு இருக்கிறார்.

---

16. புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள் எண். 672.

17, சென்னிப் புலிக்கொடியும் தென்னன் கயல்கொடியும்
மின்னும் கழல்பிறையோன் விற்கொடியும் - மன்னும்
வருசைக் கொடைத்திருமால் மாவலி வாணன்தன்
கருடக் கொடிகொடியாம் காண்.

—டாக்டர். இரா. நாகசாமி, பதி. கல்வெட்டு - 6., ப. 3. 'குளத்தூர் தாலுகா குடுமியாமலைக் கல்வெட்டுப் பாடல், புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள் எண். 674.

18. 'மன்னு திருமாற் பேறணைந்து வணங்கிப் பரவித் திருவல்லம்'
—திருவல்லத்திருப்பதிகம்

'இவ்வூரில் மாரியம்மன் கோவில், ஏகவல்லி அம்மன் கோவில் போன்ற பிற கோவில்களும் உள்ளன. இவ்விடத்தினின்றும் ஆறு கல் தொலைவில் உள்ளது வள்ளிமலை. அருணகிரிநாதரின் 11 திருப்புகழ்கள் இதனைப்பற்றி உள்ளன.'
—'தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற சிவத்தலங்கள்' பக்-86-89.

## காதல் இலக்கியப் போக்கு

அரசாளும் நாளில் ஒரு நாள் பாட்டுடைத் தலைவன் வேட்டைக்குப் புறப்படுகிறான். வேட்டைக்குச் செல்வோனைக் கண்டு வீதியோரத்தில் பெண்கள் வேட்கையுற்றுப் புலம் புகிறார்கள். வீரர்கள் வஞ்சினம் கூறிக்கொண்டு விரைவாகப் போகிறார்கள். உதவிக்குக் கானவர்களும் வேட்டைக் கருவி களோடு சேர்ந்து கொள்கிறார்கள். கருடக்கொடி காற்றில் அசைவதனைக் கண்டு பக்கத்து நாட்டினர் நடுங்குகிறார்கள். சகுனம் கண்டு மகிழ்ந்து வேட்டையாடுகிறார்கள். மானைத் தொடர்ந்து சென்ற மன்னன், மலர் பறிக்க வந்த பெண்ணைக் கண்டு காமுற்று, கூடிக்கலந்து பிரிகிறான். அவளோ பிரிவில் புலம்புகிறாள். தோழியர் கண்டு பதைத்து வீட்டிற்குக் கூட்டிச் செல்கின்றனர். தாய்க்கிழவியின் அரற்றலுக்குப் பிறகு, அரசன் அனுப்பிய பல்லக்கும் வரிசையும் கண்டுமகிழ்ந்து தலைவியை அனுப்பிவைக்கின்றனர். அவர்களும்மகிழ்ச்சியாக மைந்தனைப் பெற்று வாழ்கிறார்கள். இதுவே முதலிரண்டு காதலின் கதைப்போக்காக அமைந்துள்ளது.

கந்தர் காதலில் இப்போக்கு மாறிக்காணப்படுகிறது. தோழிக்குத் தலைவி அறத்தொடு நிற்கும் துறைபோல் அமைந்து, முன் நடந்த கதையைப் பின்னோக்கு உத்தி மூலம் சொல்லப்பட்டுள்ளது. ஒருநாள் காலை, ஒப்பனை முடித்து, பூப்பறிக்க வந்து தனியாக நின்ற தலைவி, வேட்கையை உரைத்து வேண்டிநின்ற சொல்வலை வேட்டுவனுக்கு உடன் பட்டதையும், கூடிப்பிரிந்தபின் தான்படும் துன்பத்தைத் தோழியிடம் கூறி அவனை அழைத்து வருமாறு வேண்டுவ தாகவும் கதைப் போக்கு அமைந்துள்ளது.

## உவமை உருவகங்கள்

இவை இலக்கிய வரலாற்றிலேயே மிகப்பழமையான உத்திகளாகும். பின்னர் கிளைத்தெழுந்தப் பலவகையான அணிகட்கும் அடிப்படையானவையுமாகும். இவை பெரும் பாலும் இயற்கையைப் பற்றியனவாகவும், சிறுபான்மை வரலாறு, அறவியல், ஒழுக்கவியல், அறிவியல் பற்றியனவாகவும் அமைகின்றன.

இச்சிற்றிலக்கியத் தொகுப்பில் நூற்றுக்கணக்கான உவமை உருவகங்கள் இடம் பெற்றுள்ளன.[19] வலையில் சிக்கிய மானை,

'சிற்றிடையார் கண்வலைக்குள் சிக்கியுழல் வாலிபர்போல்
சுற்றியிடும் வலைக்குள் சுழன்றுசில மான்வீழ'
(சிவ. 106)

என்றும் முல்லை முகைவிரிவதை,

'நற்றமிழைப் பாடிவரும் நாவலரைக் கண்டவுடன்
முற்றுமில்லை என்பார்போல் முல்லை முகைவிரிய'

என்றும் உவமை மூலம் விளக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அக்காலத்திய புலவர்கள் புரவலர்கள் ஆகியோரின் வாழ்க்கை நிலையும் தெரியவருகிறது.

தலைவியைப் புகழ்ந்து கூறுமிடத்து

'செல்லும் கரடிபுலி சிங்கத்துக் கஞ்சேன் நான்
கொல்லும் உமதுமுலைக் குஞ்சரத்துக் கஞ்சிநின்றேன்'
(குமா.218)

என்று பெண்களின் மார்பினை யானையாக உருவகம் செய்து பாடப்பட்டுள்ளது.

## கற்பனை

புலவனுக்கு மிக இன்றியமையாது வேண்டப்படுவது கற்பனையாகும். அக்கற்பனை இயற்கைக் கற்பனை என்றும், இயற்கையிகந்த கற்பனை என்றும் இருவகைப்படும். இச்சிற்றிலக்கியத் தொகுப்பில் இரண்டு வகைக் கற்பனைகளுமே இடம் பெறுகின்றன.[20]

---

19. குமாரலிங்க வேந்தன் காதலில் வந்துள்ள உவமை உருவகங்கள் : 6, 7, 9, 53, 73, 74, 92-94, 98, 99, 101, 108-110, 117 - 133, 150, 155, 161, 165, 166, 171 - 174, 198-239, 275, 296, 297, 299, 306, 326, 334, 349, 361, 363-367, 371, 383, 390, 391, 398, 406, 409,

சிவகங்கை இராசேந்திர பூபதி காதலில் - 66, 134-145, 152-156, 165, 228, 299, 361, 402.

கந்தர் காதலில் - 22, 23, 32-34.

20. குமாரலிங்க வேந்தன் காதலில்...11, 13, 14, 15, 28, 95, 96, 105, 162, 182.

சிவகங்கை இராசேந்திர பூபதி காதலில்...160, 212, 247-273, 366.

கந்தர் காதலில்,..30, 35, 36, 38, 39.

'துட்டப் பெரும்புலியைச் சுட்ட வெடிப்புகையால்
எட்டுத் திகையும் இரவியையும் தான்மறைத்து,
வான்அம் புலியும் மாதேவன் மானுமன்றிக்
கானில் வருபுலிமான் காணஅரி தானதுவே' (குமா. 95-96)

என்று இயற்கையிகந்தும்,

'ஆரமுதே நின்முகத்துக் காற்றோமென் றோநளினம்
நீர்நிலையா யோர்தாள்மேல் நின்றுதவம் செய்வதுதான்'
(சிவ. 247)

என்று இயல்பான நிகழ்ச்சியைத் தற்குறிப்பேற்றும் கற்பனைகள் இடம் பெற்றுள்ளன.

## சொல்லாட்சி

புலவனின் இலக்கியப் புலமையை வெளிப்படுத்தும் வகையில் சொல்லாட்சிகள் அமைவதுண்டு. இத்தொகுப்பில் கற்போர் வியக்கும் வகையில் அவை இடம்பெற்றுள்ளன.

'பந்தாடு மங்கையர்கள் பாய்ந்தாட நாமாது
வந்தாட நின்று மகிழ்ந்தாடும் வாசலினான்' (குமா. 29)

'அன்னமென அல்லவென ஆமென்ன வேநடந்து
புன்னைசிறு செண்பகத்தின் புதியமலர் தானெடுத்தாள்'
(குமா. 169)

'சோர்ந்துகலை, சோர்ந்துவிழி, சோர்ந்துவளை, சோர்ந்துகுழல்
சோர்ந்துமதி, சோர்ந்துமலர், சோர்ந்துகிடக் குங்குறியும்'
(சிவ. 353)

இவை போன்று பல இடங்களில்[21] பாடப்பட்டுள்ளன.

## இரட்டுற மொழிதல்

இருபொருள்படப் பாடுதலை இச்சிற்றிலக்கியத் தொகுப்பில் பல இடங்களில் காணமுடிகின்றது. கூளப்பநாயக்கன் காதலைவிட இந்நூல்களில் சிறப்பாக இவை இடம்பெறுகின்றன.

---

21. குமாரலிங்கவேந்தன் காதலில் - 16, 29, 169, 276, 279, 298, 302. சிவகங்கை இராசேந்திர பூபதி காதலில்- 150, 177, 218, 239, 353. கந்தர் காதலில் 40.

குமாரலிங்கன் காதலில்,

'மாலெனச்செய் தாலென்னை மலையும் பிடிப்பித்து
ஆலிலையின் ஊடே அரவஅணை தாரீரோ' (குமா-244)

இங்கு திருமாலாக ஆக்கினால், கோவர்த்தன மலையைப் பிடித்து, ஆல் இலையின் மேலே கிடந்து, பாம்புப் படுக்கையிலே படுத்தல் வேண்டும், தலைவியே என்னை நீ மாலாக (மயங்க)ச் செய்தாய். அதனால் மலையைக் கொடு (மார்பகம்), ஆலிலை (அடிவயிறு) எங்கே? அரவ அணை (அல்குல்) கொடு என்று கேட்பதாக அமைந்துள்ளது. மேலும்,

'அல்குல்மணித் தேரையெனக் காயிழையீர் நீரளித்தால்
நல்குந் தனவரையை நான்வளைத்துக் கொள்ளேனோ
கான மலர்க்குழலீர் கண்வேல் எனக்களித்தால்
யானை மலைவரைபோய் யான்வேட்டை யாடேனோ
மானடியை நீங்கள் மறைத்துவிட்டால் எப்படித்தான்
யானடிகண் டேவேட்டை யாடத் துணிவதுதான்
(சிவ. 279 - 281)

எனும் இக்கண்ணிகளில் 'தனவரை', 'யானைமலை', 'மானடி' ஆகியவை இரண்டு பொருள் தரும்படியாக அமைந்து கற்போரை மகிழ்விக்கின்றன. மேலும் இவ்வாறு இத்தொகுப்பில் பல இடங்களில் பாடப்பட்டுள்ளன.[22]

## மொழிநிலை

வடமொழிச் சொற்களும் கன்னடமொழிச் சொற்களும் கலந்து வருகின்றன.[23] சந்திரகிரியைச் சேர்ந்த குமாரலிங்கன் பாட்டுடைத் தலைவனாக இருப்பதனால்,

'சுரதாண, ராவுத்த மிண்டர்' (314)
'ரஞ்சித விலாசாவளிதர' (318)

போன்ற கன்னட மொழிச் சொற்களும் கலந்து வருகின்றன.

22. குமாரலிங்கன் ... 244 - 273, 392.
சிவகங்கை ... 279 - 283.

23. குமாரலிங்கன் ... 283, 285, 320, 325, 326, 342, 343, 344, 347 356, 367, 369, 376.

பேச்சு மொழிகள் பல இடங்களில் இத்தொகுப்பில் ஆட்சி செய்யப்பட்டுள்ளன. அவையாவன: கும்பாமல் (குமா. 122) பராக் (313-314) வலுவழக்கு (347) கள்ளி செய்த காரூடச் சர்ப்பனை (381) விறுதாவில் வாயெறிந்து (396) பண்ணவில்லை (397) பூசாபலம் (299) யோகம், குபால், சபாசு (சிவ. 119) பளீரென்று (205) பொக்கிஷம், உல்லாசம் (266) சும்மா (343) மேரையல்ல (390) வேகுவிட்டு (49, 50) பையல் (52) வைப்பாட்டி (குமா. 68) அவனடிக்கும் பங்கம் (58) ஆகியவை யாகும்.

இத்தொகுப்பில்,

1. சற்றே கலகம் சதிரத்திற் போகாது (கந். 4, 70)
2. இருதலைக் கொள்ளி எறும்பு (62)
3. அக்கினியைக் கண்ட அரக்கு (63)
4. வெயிலைக் கண்ட மெழுகு (63)

போன்ற பழமொழிகளும் இடம் பெற்றுள்ளன.

### சமுதாயப் பண்புகள்

பழைய சமுதாய இலக்கிய மரபுகளினின்று முற்றிலும் விடுபடாமலும், வாழ்கால சமுதாயப் பண்புகளை விடாமலும் 'காதல்' ஆசிரியர்கள் பாடி உள்ளனர். இச்சிற்றிறக்கியத் தொகுப்பிலிருந்து ஆடை, அணிவகைகள், ஒப்பனை, வேட்டை யாடல், பயன்படுத்திய கருவிகள், இசைக் கருவிகள், கான வர்கள், பெண்கள், அவர்களின் நம்பிக்கைகள், கடவுள் கதைகள் ஆகியவற்றின் வழியே அச்சமுதாயப் பண்புகளைக் காணலாம்.

### ஆடை

தலைவர்கள், தலைவியர் ஆகியோரின் ஆடைகளே குறிப் பிடப்பட்டிருக்கின்றன. அரசன் வேட்டைக்குப் போகும்போது வேறு உடை அணிந்து கொள்வதும், கொலுவிற்கு வரும்போது வேறுவகையான உடை அணிந்து கொள்வதும், பெண்கள் பாவாடை உள்ளுடுத்திப் பட்டாடையை மேலே உடுத்திக் கொள்வதும் கூறப்பட்டுள்ளன. மேலும் நிசார், உடைப் பட்டை (50) சரிகை உடை பட்டாடை உத்தரீகம் (92)

ஆகியவை ஆண்களுக்கு உரியனவாகவும், ரவுக்கை, வெட்டுப் பாவாடை, பட்டுரவுக்கை, பாவாடை, பட்டாடை ஆகியவை பெண்களுக்குரியனவாகவும் குறிப்பிடப்படுகின்றன.[24]

## அணிகள்

தலைவர்கள், தலைவியர் அணிந்து கொள்ளும் அணிகலன்களே குறிப்பிடப்படுகின்றன.[25]

கண்டசரி, தும்பிப்பதக்கம், வாகுவலையம், கடையம், மிஞ்சி, கணையாழி, வச்சிரக்கடகம், வீரத்தண்டை, குண்டலம், அரைநாண் ஆகியவை ஆண்களுக்குரியனவாகவும் பாடகம், சூடகம், பாதசரம், சதங்கை, மாணிக்கமாலை, வயிரப் பதக்கண், ஆணிப்பொன் கடையம், கொப்பு, வாளி, கொந்தளப்பொன்னோலை, முத்துமாலை, ஒட்டியானம், அரைஞாண், விரலாழி, வளையல், சவடி, மூக்குத்தி, நித்திலப்பூஞ்சுட்டி, குப்பி, தண்டை, குழல் ரத்தினக்குப்பி, குச்சு, வச்சிரமணி, சுட்டி, முதாரி, சந்திரமுருகு, சிமிக்கி, அட்டியல், பொற்சரம், தாவடம், கட்டுவடம், சந்திரப்பிறை, சூரியப்பிறை, நெற்றிப் பரிசு, மணிப்பதக்கம், மோதிரம், மணிப்பாடகம், மிஞ்சி, மயிலடி, பீலி, காலாழி, கண்டசரம், உடுதாரம், சிலம்பு ஆகியவை பெண்களுக்கு உரியனவாகவும் பாடப்பட்டுள்ளன.

## வாழ்க்கை முறைகள்

தலைவன், தலைவி, வீரர்கள், அரசனின் உடனிருப்போர், நாட்டியமாடுவோர், தோழியர், கானவர்கள் ஆகியோரின் வாழ்க்கை முறைகளைப்பற்றி இச்சிற்றிலக்கியங்கள் குறிப்பிட்டு உள்ளன.

## தலைவன்

காலையில் எழுந்து நன்னதி நீராடியபின் வாசனைசேர் பன்னீரால் வாய், கைகால் பூசி, சந்தன சுகந்தம் மேனியில் வீச,

24. குமாரலிங்கன் ... 38, 50, 140, 152, 292, 319.
சிவகங்கை ... 92, 96, 197.
கந்தர் ... 7.

25. குமாரலிங்கன் ... 40-44, 145-154, 294.
சிவகங்கை ... 94, 95, 116-118, 192-206.
கந்தர் ... 9-12, 21, 24.

பொற்சரிகைப் பாகுகட்டி, ஆடை உடுத்து, திருமால் அடி தொழுது, அணிகலன்கள் அணிந்துகொண்டு, கருணீகர், காரியப் பேர், கருத்தர், தளகர்த்தர், உள்ளியத்தார் மெய்க்காப்பாளர் உடன்வர, கட்டியத்தார் 'பராக்' கூற, வட்டக்குடை நிழற்ற, இசைக் கச்சேரி நிகழ, கொலுவிற்குக் குமாரலிங்க வேந்தன் வருவதாகப் பாடப்பட்டுள்ளது.[26]

சேனாபதிகளும், பிள்ளைமார்களும் சூழ, காலையில் எழுந்து, தளகர்த்தர், மக்கள், மருமக்கள் உடனிருப்ப, அமைச்சர்கள், உடன் பிறந்தவர்கள், மைத்துனர்கள் அருகி லிருக்க, தம்புரா, வீணை, சாமண்டலங்கள் இசைக்க, அறிஞர்களின் சொற்பொழிவும், மற்போரும் மதகரிப்போரும், கோழிச்சண்டையும், அறிஞர்களின் சொற்போரும் கண்டு கேட்டு மகிழ்ந்து, வைகைநதியாடி, நாட்கடன்களை முடித்து, உற்றாரும் உறவினரும் சுற்றமும் உடனிருக்க உண்டு, தாம்பூலம் அருந்தி, சரிகை உடை மேல்உடுத்து, குற்றுடை வாள், சமுதாடு, வீரவாள் தரித்து, திருமால் அடிதொழுது, அணிகலன் அணிந்து, பைம்பொன் முடிகட்டி, பாகுகட்டி, உத்தரீகம் (மார்பிலும் முதுகிலும் அணியும் படங்கள் உள்ள இரு துண்டுத் துணிகள்) அணிந்து அரியணையில் சிவகங்கை இராசேந்திரபூபதி கொலுவிருந்ததாகப் பாடப்பட்டுள்ளது.[27]

இவர்களின் ஒருநாள் வாழ்க்கை கற்பனை கலந்து இவ்வாறு பாடப்பட்டுள்ளது. இவர்களின் பொழுதுபோக்கு வேட்டை யாடுதல் ஆகும்.

## வேட்டையாடல்

வெடிக்காரர் வேல் வில்லம்புக்காரர்களைக் கட்டாப்பில் அணியணியாக நிறுத்தி, வலை கட்டி, கானவர்கள் காட்டைக் கலைக்க, வெருண்டு ஓடும் விலங்கினங்களைக் குமாரலிங்கனும் வீரர்களும் வேட்டையாடினர் என்று கூறுகிறது குமாரலிங்க வேந்தன் காதல்.[28]

26. குமாரலிங்கன் ... 35-47.
27. சிவகங்கை ... 82-97.
28. குமாரலிங்கன் ... 83-96.

போரிலே பகைவர் அரண்மனையை வளைத்துக் கொள்வதைப்போல, வலைஞர்கள் வலையைச் சுற்றிக் கட்டி நிற்க, வெடிக்காரர், வேல், வில்லம்புக்காரர்கள் வளைந்து சுற்றி நிற்க, முரசுகள் முழங்க, கானவர்களும் குத்தீட்டிக்காரர்களும் காட்டைக் கலைத்துவிட, ஓடும் விலங்குகளை வேட்டையாடினார்கள் என்று சிவகங்கை இராசேந்திர பூபதி காதல் குறிப்பிடுகிறது.[29]

## கருவிகள்

மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள, தன் அறிவு வளர்ச்சிக்கேற்ப பயன்படுத்தியவை கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன. மனிதகுல வரலாற்றின் காலங்களைக் கணக்கிட்டு அறிவதற்குக்கூட இவை பயன்படுகின்றன. இச்சிற்றிலக்கியக் காலத்தில் பயின்று வந்த கருவிகளாக, சிலை, வேல், காட்டெருமைக்கொம்பு, அம்பு, தோமரம், கைவேல், வெடி, குத்துடைவாள், சமுதாடு, வாள், சவளம், பெருவலை, கவசம், தூணி, வளைத்தடி, வேட்டை நெடுங்கத்திகள், கச்சை, குலிசம் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.[30]

## இசைக்கருவிகள்

மங்கல இசைக் கருவிகளும், வீர உணர்ச்சியை எழுப்பும் இசைக்கருவிகளும் இச்சிற்றிலக்கியத் தொகுப்பில் இடம்பெறுகின்றன.[31] நாகசுரம், மேளம், ஒத்து, தம்பூரு, வீணை, சாமண்டலம், ரதிமேளம், கல்லியாணமுரசு, கொடைமுரசு, படைமுரசு, தம்பட்டம், பரி, கன்னா, பூரிகை, தாரை, சின்னம், கொம்பு, தடாரி, இரணபேரிகை, குழல், முழவு, காளம் ஆகிய பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

29. சிவகங்கை ... 126-147.
30. குமாரலிங்கன்...72, 75, 88, 90, 100, 380.
சிவகங்கை...93, 118, 122-124, 341, 378.
31. குமாரலிங்கன்...19, 54, 58, 74, 85, 304, 312, 380.
சிவகங்கை...41, 47, 86, 106, 114, 115, 378, 379
கந்தர்..,112,

## விலங்குகள்

வேட்டையாடிய விலங்குகள், வேட்டைக்குப் பயன்படுத்திய விலங்குகள் என்ற இருவகையையும் இத்தொகுப்பில் காண முடிகிறது.[32]

புலி, சிங்கம், காட்டுப்புலி, காண்டாமிருகம், யாளி, மற்றும் புல்வாய், கரடி, புன்கடமான், பன்றி,முயல், வேங்கை, மறை, ஐவாய்ப்பெரும்புலி, குளிநரி ஆகியவை வேட்டையாடும் விலங்குகளின் பெயர்களாகவும், யானை, குதிரை, நாய் ஆகியவை வேட்டைக்குப் பயன்படும் விலங்குகளின் பெயர் களாகவும் குறிக்கப்பட்டுள்ளன.

## கானவர்கள்

பழங்குடியினராக, மலை காடு போன்ற பகுதிகளில் வாழ் வோராக இச்சிற்றிலக்கியம் இவர்களைக் காட்டுகிறது. இவர் களின் தோற்றத்தைப்பற்றி, 'சிலும்பிய சிவந்த மயிர்த் தலையும் செம்மண் நிறமுடைய அழகில்லாத உடலும் பாசிப் படிந்த பற்களுமாகச் சுற்றுகவண் ஈட்டியோடும் காட்டெருமைக் கொம்போடும் வேட்டைவலைக் கட்டோடும் வாய்பொத்தி அரசனுக்கு முன்னே ஓடினார்கள் என்று குமாரலிங்கவேந்தன் காதல் குறிப்பிடுகிறது.[33] இவர்களின் சமூக நிலையை இப்பகுதி உணர்த்துகிறது.

## காதல்

பேரரசுகள் இன்றி இருந்த குழப்பமான காலத்தில், மக்களிடம் காம உணர்வுகள் மிகுந்து காணப்படுதல் இயல்பு. எனவே இக்காலச் சிற்றிலக்கியங்கள் அதனை நன்கு வெளிப் படுத்துகின்றன.

மலர்த்தவிசின் மேலே, தலைவியின் கூந்தலுக்குப் பூமுடித்து, குங்குமக் குழம்பினை மார்பில் பூசி, பேசிமகிழ்ந்து, வெற்றிலைச்

---

32. குமாரலிங்கன்...17, 55, 64-71, 87, 89, 95.
சிவகங்கை ... 36, 38, 51, 60, 112, 113, 116 - 121, 127, 159.
கந்தர் ... 88.

33. குமாரலிங்கன்.... 72-75அ.
சிவகங்கை ..., 126,

சுருள்பருகி, சேர்த்தணைத்து முத்தமிட்டு ஆலிங்கனம் ஐந்தும், தாடனங்கள் எட்டும் நடத்தி, நக, பற்குறிகள் பதியச்சுவைத்து, பட்டாடை நெகிழ்த்து, மானடிகண்டு, கெண்டை விழி புரள, மொழிபதற, கொண்டை பிடர்ச்சரிய, கண்டத்தில் புள்ளொலி யெழ, வெயர்வு அரும்ப, தண்டை வளைகள் ஓலமிட, கற்பகத் தைச் சுற்றி வளரும் காமவல்லிக் கொடிபோல மதனின் வீறடங்க மன்மதவிழா நிகழ்ந்தது என்று பாடப்பட்டுள்ளன.[34] கந்தர் காதல், திருமண உறவில் சாதியும், சொத்தும் இடம் பெறுதல் பற்றிக் குறிப்பிடுகிறது.

## பெண்கள்

இத்தொகுப்பில் இடம்பெறும் பெண்கள் தலைவியராகவும், தோழியராகவும், தாயாகவும் இருக்கிறார்கள். தலைவியரின் வாழ்க்கைமுறையே சிறப்பாகப் பாடப்பட்டுள்ளன. இத் தலைவியரிடம் அழகு மட்டுமே இருந்ததாகக் காட்டப்படுவதன் மூலம் அவர்கள் போகத்திற்குரிய பொருள்களாகவே கருதப் பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

மூன்று தலைவியர் இடம் பெறுகின்றனர். அதிரூபரேகை மின்னாள் குமாரலிங்க வேந்தன் காதலின் தலைவி. சரசகுண மாலை சிவகங்கை இராசேந்திரபூபதி காதலின் தலைவி. கந்தர் காதலில் தலைவியின் பெயர் குறிக்கப்படவில்லை.

## ஒருநாள் வாழ்க்கை

வங்காள மஞ்சளின் கலவையைச் சேர்த்து அரைத்துக் குளித்த உடலில், சந்தனம், கஸ்தூரிச்சாந்து பரிமளங்கள் மிகப்பூசி, கூந்தலுக்கு அகில் சந்தனப் புகையூட்டி, சாய்க் கொண்டை முடித்து, பூச்சூடி, அஞ்சனமைதீட்டி, திலகமிட்டு, கால்களுக்குச் செம்பஞ்சு ஊட்டி, மார்பில் மகரிகாபத்திரம் (முதலை வடிவத்தில் எழுதப்படும் தொய்யில்) இட்டு, அணி கலன் அணிந்து ரவுக்கை அணிந்து பாவாடை உள் உடுத்தி,

---

34. குமாரலிங்கன் ..288-301.
சிவகங்கை...313-326.
கந்தர்...95-102.

பட்டாடை மேல் உடுத்திக் கொண்டு தலைவியர் பூப்பறிக்கச் சோலைக்குச் செல்கின்றனர்.[35]

## தோழியர்கள்

காந்திமதி, சந்திரமதி, காமவதி, சோமவதி, சாந்தவதி, வேதவதி, தந்திரவதி, இந்திரவதி, மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி, நீலாட்சி,ஞானாட்சி,சோமாட்சி,நல்லமுர்த இந்திராட்சி, மோகவல்லி, சோமவல்லி, முத்துவல்லி, சித்திரவல்லி, நாகவல்லி, இந்திரவல்லி, ஞானவல்லி, காமவல்லி, சம்போகரத்தினம், சரச ரத்தினம், மோகரத்தினம், அம்போருக ரத்தினம் இவை தோழியர்களின் பெயர்களாக கூறப்படுகின்றன. இவர்களுள், சந்திரவதியும், சோதிரத்தினமுமே தலைவியாரின் உயிர்த்தோழியராகக் கூறப்பட்டு உள்ளனர்.[36] இவர்களின் சமூக நிலையைப் பற்றி அறிந்திட வேறு குறிப்புகள் கிடைக்கவில்லை.

## தாய்

தலைவியரின் தாயாக வருபவர்கள், தம் மகள் ஏமாற்றப் பட்டு விட்டாளே! மற்றவர்கள் இது குறித்து எவ்வாறெல்லாம் வசை பேசுவார்கள் என்று எண்ணி அரற்றுபவர்களாகவும், மகளுக்கு வாழ்க்கை கிடைக்கும்போது மகிழ்ந்து வாழ்த்து பவர்களாகவும் காட்டப் பட்டிருக்கிறார்கள்.

பொதுவாக, பெண்கள் அதிகம் பேசக்கூடாது; தனியாகப் போகக்கூடாது போன்ற விதிகள் இருந்தனவென்றும் சிற்றிலக்கியம் குறிப்பிடுகிறது[37].

## மலர்கள்

பெண்களின் பொழுது போக்காக பூப்பறித்தல் காட்டப் படுகிறது. சிற்றிலக்கியத்தில் சொல்லப்படும் மலர்கள் பொது

---

35. குமாரலிங்கன் ... 139-155.
சிவகங்கை ... 190-205.
கந்தர் ... 5-14.
36. குமாரலிங்கன் ... 157-160.
37. கந்தர் ... 78, 69-72.

வாகக் கோட்டுப்பூ, கயப்பூ, கொடிப்பூ, செடிப்பூ என நால்வகை என்றும், சிறப்பாகச் சரக்கொன்றை, காந்தள், முல்லை, மல்லிகை, இருவாட்சி, புன்னை, கோங்கு, செண்பகம் முருக்கம், செவ்வகத்தி, நீர்முள்ளி, தாமரை, செருந்தி, பன்னீர், மாதவி, பாடலம், குங்குமம், மந்தாரை, பிச்சி, நீலோற்பலம், செங்குமுதம், தளவு, வெட்சி, பாரிசாதம், வள்ளை, கஞ்சமலர், தேமா ஆகியவற்றின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.[38]

## பறவைகள்

சோலையில் உள்ள பறவைகளாகவும், காட்டில் உள்ள பறவைகளாகவும், கருங்குயில்கள், மயில்கள், பைங்கிளிகள், பருந்து ஆகியவை பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகின்றன.[39]

## நம்பிக்கைகள்

விஞ்ஞான அறிவின் வளர்ச்சிக்கேற்ப நம்பிக்கைகளின் நிலையும் முறையும் வேறுபடுகின்றன.

'நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்குஞ்
செம்முது பெண்டின் சொல்'

(புறம். 280; 6-7)

ஆகிய வேண்டிய பொருளின் விளைவு நன்கு அறிதற்குக் கேட்கப்படும் விரிச்சி முதலாக,

...மனைவயிற்
பல்லியும் பாங்குஒத்து இசைத்தன
நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே'

(கலி. 11; 20-21)

---

38. குமாரலிங்கன் ... 105, 108-110, 161, 171-173, 175-178, 286.
சிவகங்கை ... 39, 218, 219, 221, 225, 226, 230, 231, 233, 254, 255, 258, 270, 271.
கந்தர் ... 6,

39. குமாரலிங்கன்...106, 107, 124, 125, 126, 128, 129, 179, 180.
சிவகங்கை...44, 110, 130-146, 159, 170, 171, 229, 233, 332, 333.
கந்தர்...18, 89, 112.

என்று பல்லிசகுனம் பார்ப்பது வரையிலும் மக்களின் நம்பிக்கைளாக இருந்ததைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. அவ்வாறு இச்சிற்றிலக்கியங்களிலும் மக்களின் நம்பிக்கைகளப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

கெருடன் இடமாகக் கிளைகூட்ட ஆந்தையொன்று இருப்பதும், திருவனையார் பூரண கும்பத்துடன் சென்று, எதிரே வருவதும், (குமா. 79-81) ஐயன் வலப்புறத்தில் பல்லி ஒலியெழுப்புவதும், (சிவ. 100-102) நல்ல சகுனமாகக் கருதப் பட்டிருக்கின்றன.

இதில் செயற்கையாக மங்கலப்பெண்களிடம் பூரண கும்பத்தைக் கொடுத்து எதிரே வரும்படிச் செய்துள்ள செயலும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

பெண்களுக்கு இடது மார்பு, கண், தோள் துடித்தால் சுகம் கிடைக்கும் (குமா. 135-137) (சிவ. 186-187). தேவர் உலகப் பெண்களுக்குக் கால்கள் நிலத்தில் தோயா; முடித்த மலர்கள் வாடா: வெயர்வு அரும்பாது; கண்கள் இமையா (குமா.188-190; சிவ. 238-239). ஆகிய இலக்கிய மரபுகளும், கண்ணேறு வராமல் காப்பதற்குத் திட்டி சுற்றிப்போடுதல் (சிவ. 206), தெய்வக்குறை (குமா. 352) தெய்வச்செயல் (குமா. 396) விதி (சிவ. 399) ஆகிய நம்பிக்கைகளும், வேட்டையில்கூடத் தன் கருவியை வீசுவதற்குமுன் பூசையிடல் (குமா. 102), கோயில்களில் காலை சந்தி, உச்சி, மாலை, அர்த்தசாமம் ஆகிய நேரங்களில் பூசைகள் நடத்தல் (சிவ. 77) போன்ற செய்திகளும் கூறப் பட்டுள்ளன.

கந்தர் காதலில், அப்பம், அரியதரம், எள்ளுண்டை, மாங்கனிகள், மாதுளங்காய், பூங்கரும்பு, பொரி, சீனி, தேன் பாகு, ஆவினறும்பால், பலாச்சுளை, பாகு கலந்த அவல், வெள்ளரிக்காய், தேங்காய், பச்சரிசி, கத்தரிக்காய், கடலை, துவரை, விளாங்கனி, கற்கண்டு, மொந்தம்பழம், முளைப்பயறு, சர்க்கரை ஆகியவற்றை வெள்ளிக்கிழமை களிலே படைத்து விநாயகரை வழிபடுவது குறித்தும் (கந். கடவுள் வாழ்த்து 4-8) பாடப்பட்டுள்ளது.

கடவுள் பற்றிய கதைகளும், இலக்கியக் கதைகளும் சான்று காட்டும் நோக்கத்துடனும், விளக்கிக்கூறும் நோக்கத்துடனும், வருணிக்கும் நோக்குடனும் இக்கதைகள் எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன்' என்பதற்கேற்ப, சிற்றிலக்கியத் தலைவர்கள் திருமாலொடு ஒப்பிட்டும் பாடப்படுகிறார்கள். மேலும் பாற்கடல் கடைந்தது (குமா. 113) காமனைச் சிவன் எரித்தது (குமா.132) தேவர்கட்காக நளன் தூது சென்றது (குமா. 195) பாரதக் கதையை விநாயகன் எழுதியது (சிவ. 2) கல்யானை தின்னக் கரும்பு ஈந்தது (சிவ. 11) பாண்டவர்க்காக கண்ணன் தூது சென்றது (சிவ. 56) சீவகனுக்குக் காந்தருவதத்தை மாலையிட்டது (சிவ. 241) போரில் கைகேயி கைகொடுத்துக் காத்தது (சிவ. 242) விழுந்த கனி மரத்திற்குச் சென்றடைய துரோபதை கூறியது (சிவ. 243) மணவிழாவுக்கு அருந்ததி சாட்சியாவது (சிவ. 244) வண்டாகி கண்ணன் பாண்டவர்களைக் காத்தது (சிவ. 250) வள்ளித்திருமணம் (சிவ. 304) அனுத்திரன் உஷாவை மணந்தது (சிவ. 306) அருச்சுனன் சுபத்திரையை மணந்தது (சிவ. 307) ஆகியவை இச்சிற்றிலக்கியத் தொகுப்பில் இடம் பெறுகின்றன.

முடிவாக இச்சிற்றிலக்கியத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள காதல்கள் இலக்கியச் சுவை நிரம்பியதாகவும், பழைய இலக்கிய மரபுகள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றன. வரலாற்றுச் செய்திகளைப் பொறுத்திப் பார்க்கும் அளவிற்குக் குறிப்புகள் பெறமுடியவில்லை. பிற காதல் இலக்கியங்களுடன் இத்தொகுப்பு எந்த அளவிற்கு ஒத்துச் செல்கிறது என்பது நூலில் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பிற இலக்கிய மரபுகளும் எவ்வாறு பின்பற்றப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் கண்ணிகளின் எண்களைக் குறிக்கும். உட்தலைப்புகள் பதிப்பாசிரியரால் கொடுக்கப்பட்டவையாகும்.

ம. இராசேந்திரன்.

# குமாரலிங்கவேந்தன் காதல்

## உள்ளடக்கம்

(எண்கள்—கண்ணிகளின் எண்கள்)


| | |
|---|---|
| காப்பு | 1 |
| அவையடக்கம் | 4 |
| பாட்டுடைத் தலைவன் | 10 |
| உலகாளும் நாளில் ஒருநாள் | 34 |
| வேட்டைக்குப் புறப்படுதல் | 48 |
| கண்டோர் நிலை | 59 |
| உடன் வருவோரும் உரைக்கும் வஞ்சினமும் | 64 |
| வேட்டைக்குச் செல்லும் காட்சி | 73 |
| கருடக்கொடி கண்டு கலங்கும் நாட்டவர்கள் | 76 |
| சகுனமும் சகுனியும் | 78 |
| வேட்டையாடல் | 82 |
| மான் வேட்டை | 97 |
| இயற்கையின் வரவேற்பு | 103 |
| தலைவி அறிமுகம் | 112 |
| பாங்கியரோடு மலர்பறிக்கத்திட்டம் | 135 |
| ஒப்பனை | 139 |
| பூங்காவில் பாங்கியர்களுடன் | 157 |
| பூவையர் பறித்த பூக்கள் | 164 |
| பூவைத் தேடும் பூந்தோட்டம் | 170 |
| மாதவிப்'பந்தலில்... | 183 |
| காட்சி | 186 |
| ஐயம் | 187 |
| துணிவு | 188 |

| | |
|---|---|
| குறிப்பறிதல் | 191 |
| வினாதலும் புகழ்தலும் | 192 |
| வேண்டுகோள் விடுத்தல் | 241 |
| காமப்பயிர் | 248 |
| கன்னிமான் வேட்டை | 253 |
| காமச்சதுரங்கம் | 270 |
| தும்பிக்கு அழைப்பு ஏன் | 274 |
| அடையாமல் போவேனோ | 277 |
| அறிமுகம் | 281 |
| மலர்த்தவிசின் மேலே மன்மதவிழா | 282 |
| அரசனைத் தேடி | 302 |
| பட்டணம் நோக்கி | 307 |
| பூங்காவில் சிற்றிடையாள் | 328 |
| நெஞ்சொடு புலம்பல் | 336 |
| தேடிவந்த பாங்கியர்கள் | 348 |
| வீட்டிலே... | 358 |
| தோழியர் புலம்பல் | 362 |
| தாய் வினாதல் | 372 |
| தோழியரின் பதில் | 377 |
| தாயின் புலம்பல் | 382 |
| வாழ்த்துரை | 402 |
| வரிசை வரல் | 405 |
| வாழ்த்து | 410 |

# குமாரலிங்கவேந்தன் காதல்

## காப்பு

பூமிபுகழ் சந்த்ரகிரி பூபன் குமாரலிங்க
சாமிமேல் காதல் தமிழ்ப்பாடத் - தேமிலகு
செஞ்சால னோர்பவன்முன் சின்மய சுதனென்ற
கஞ்சபத குஞ்சரமே காப்பு. 1

பொன்னாரும் வேலவரைப் போற்றிப் பணிகமல
மின்னார்சேர் குமாரலிங்க வேந்தன்மேல் காதலுக்கே
மாமதுர வாக்கு மலையாமல் பாடவரம்
தாமருள வேணுமெங்கள் தந்தி முகத்தோனே. 2

கேசவரா மென்னுங்கெருடக் கிருட்டிணர் ப்ாதமதில்
நேசன் குமாரலிங்க நிருபன்மேல் காதலுக்கே
பொத்தகமு மக்குவடம் பொருந்து சரசுவதியும்
சித்திரமயில் ஏறிவரும் சேவகனே முன்நடவாய். 3

---

1. சந்திரகிரி- ஆந்திர மாநிலத்தின் சித்தூர் மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பட்டணம். திருப்பதிக்கு 11 கல் தொலைவில் உள்ளது. கி. பி. 1565-ல் தலைக்கோட்டையில் நடந்த போரில் விசயநகர பேரரசினர் தோற்றனர். வெற்றி பெற்றவர்கள் விசயநகரை அழித்தனர். எனவே விசயநகர மன்னர் திருமலைராயர் தம் தலைநகரை பெனுகொண்டாவுக்கு மாற்றிக்கொண்டார். எதிரிகள் புதிய தலைநகரையும் முற்றுகையிட்டு, அதை 1572-ல் கைப்பற்றிக்கொண்டனர். திருமலைராயரின் புதல்வர் ரங்கராயர் சந்திரகிரிக்கு ஓடி அங்கிருந்து அரசாண்டார். அதுமுதல் சந்திரகிரி தலைநகரமாயிற்று. 1646-ல் கோல்கொண்டா சுல்தான் சித்தூர் மாவட்டம் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டார். இங்குள்ள குன்றின்மேல் பழைய கோட்டை ஒன்று உள்ளது. இது 1500-ல் இம்மடிநரசிம்மனால் கட்டப்பெற்றது. குன்றின் அடிவாரத்தில் அரண்மனை இருக்கிறது. இந்நூலின் பிற இடங்களில் இச்சந்திரகிரி, சோமகிரி என்றும் பாடப்படுகிறது. (24)

இனிமை நிறைந்த வியக்கத்தகும் சிறந்த செயல்களைப் புரிந்த சிவனின் முதல் மகனாகிய அறிவைத் தந்தருளும் கணபதியின் தாமரைத் திருவடிகளே காப்பு.

2. தந்தி முகத்தோன் - யானை முகத்தோன்.

3. கேசவராமென்னும் கெருடக் கிருட்டிணர் பாதமதில் நேசன் - சிவனையும் படைப்புக் கடவுளையும் படைத்தவராகிய அழகான முடியையுடைய (கெருடவாகனத்தையுடைய) கண்ணனிடம் அன்பும் பக்தியும் உடையவன்.

## அவையடக்கம்

செந்தமிழா லந்திவண்ணன் சீர்பாடும் பாவலர்கள்
சுந்தரர்சம் பந்தரப்பர் துணையடியை நான்மறவேன் 4

நத்தங் குமாரலிங்க ராசன்மேற் காதலை நான்
வித்துவ சனர்முன்னே விளம்பத் துணிந்ததுதான் 5

மலடி ஒருத்தி மைந்தர்பெறும் பாவையர்க்குக்
குலவு மருத்துவங்கள் கூறுவது தானும்ஒக்கும் 6

புன்சொல்லே யானாலும் புதல்வர் குளறுமொழி
இன்சொல் எனத்தாய்கேட் டின்பம் உறுவதுபோல் 7

கற்றவர்கள் எல்லாமென் கவிதை வழுக்கண்டும்
குற்றமென்று சொல்லார் குணமாகக் கொள்வாரே 8

வேதனைசெய் முள்ளோ(டு) விடஅரவு செந்தாழைப்
போதிலுள்ள குற்றமெண்ணார் பூமணத்தால் வேணு
மென்பார் 9

## பாட்டுடைத் தலைவன்

பூமிசையி லாரும் புகழுங் குமாரலிங்க
சாமிபேர் வாசியினால் தாரணியோர் தள்ளாரே 10

சென்னிமதி சேர்போதில் தேனிறால் என்றுகூறக்
கன்னிமார் கைநீட்டும் காந்தைமலை வேந்தன் 11

நூலாரும் கற்ற நுவல்வேதி யர்கள்வந்து
காலாற வென்றுமுன்னே கண்டபா லாறுடையான் 12

வேதியர்க்குத் தானமிடு தாரைநீ ரோடி
மாதரையில் சாலி வளர்பாண்டி நன்னாடன். 13

---

கெருடிக் கிருட்டிணர் - சுவடியில் இவ்வாறு உள்ளது.

நிருபன் - அரசன்.

அக்குவடம்-அட்சமாலை, 'அ' முதலாக உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையுள்ள மணிமாலை இது கலைமகளின் கையில் இருப்பது.

4. அந்தி வண்ணன் - சிவன்.

5. வித்துவசனர் - புலவர் கூட்டம்.

9. விட அரவு - நச்சுப்பாம்பு.

10-19. தசாங்கம் கூறப்பட்டுள்ளது.

13. தாரை - தத்தம் செய்யும் நீர், சாலி - நெல்.

வாட்டந் தவிரவுண்ண வாவென் றழைப்பார்போல்
நாட்டு கொடியாடும் நல்லெழிசை மாநகரான் 14

இளகியிறு மாந்தெழுந்த இணைமுலைகள் தான்பாயத்
தளபமலர் கவசம் தரித்த மணிமார்பன் 15

காற்கெதிக்குக் காற்கெதியைக் காற்கெதி யதாய்க்காட்டி
மாற்கெதிக் கெல்லாமுலவி வாகைகொளும் வாம்பரியான் 16

அட்டகெச மெட்டினையும் அடர்த்தமரு ளடக்கிமிகு
கொட்டமிடும் ஓட்டலர் குடல்கிழித்த குஞ்சரத்தான் 17

சேர்ந்தார் கலியும் சேரார் நிதியமும்பின்
பாய்ந்தோடப் பற்றுகின்ற பைங்கெருட டால்வேந்தன் 18

---

14. பசியால் வாட்டமுற்று வருவாரை, உண்ண வா என்று அழைப்பது போல் கோட்டையின் கொடி காற்றில் அசைகின்ற நாட்டினை உடையவன் என்று தற்குறிப்பேற்றமாக பாடி உள்ளார். பிற இலக்கியங்களிலும் இத்தகைய தற்குறிப்பேற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

'போருழந் தெடுத்த வாரெயி னெடுங்கொடி
வாரலென் பனபோன் மறித்துகை காட்ட'

(சிலம்பு, புறஞ்சேரி. பக். 341; 342)

வராதீர்கள் என்று கோவலன் கண்ணகியைப் பார்த்து கொடி கைகாட்டியதாகவும்,

'செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக்
கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென்
றழைப்பது போன்ற தம்மா'

(கம்ப. பாலகாண்டம். ப. 526)

என்று இராமனை வரவேற்றதாகவும் பாடியுள்ளனர்.

15. தளபமலர் - தளவமலர், முல்லை மலர்கள்.

16. கெதி - கதி. குதிரையின் நடை, வேகம். தனது விரைவிற்குக் காற்றின் விரைவினைக் கால்பகுதி விரைவினதாகக் காட்டி, எட்டு திசைகளும் சென்று வெற்றி கொள்ளும் குதிரையினை உடையவன்.

17. அட்டகெசம்-எண் திசை யானைகள்; ஒட்டலர்-பகைவர்கள். குஞ்சரம்-யானை.

18. கலி - வறுமை; நிதி - செல்வம்.

கடலொலிகள் மறுகியிடு ககனமுகடு இடிபடவும்
அடையலர்கள் உடல்பதற அதிருமணி மும்முரசான் 19

மாநிலத்தில் மாலழகர் வடமலை காவலவன்
தானென்று உரைக்கத் தரித்த முடிவேந்தன் 20

நானிலத்தோர் போற்றவரு ராகவனார் அம்புஎனத்
தானிகழ்ந்தோர் நாக்கைத் தறித்துவிடும் ஆக்கினையான் 21

வேட்ட பொருள்கொடுக்கும் வேலா யுதரருளால்
நாட்டில் விசையம் நடத்திவரு செங்கோலான் 22

கைவாள் உறைவாங்கக் கருதாரைத் தேவமின்னார்
மெய்மா மணம்முடிக்க வென்றுவரும் சேனையினான். 23

பொற்கோட்டை கொண்டு பொருந்தார் தினம்பரவச்
சொற்கோட்டை கொண்டிலங்கும் சோமகிரிக்
கோட்டையினான் 24

எறுகாது லிங்க யமரீன்ற ரகுராமன்
குறுகலார் வீறடக்கும் குமாரலிங்க ராசேந்திரன் 25

மாகனகம் பற்றுமுழு மாணிக்கம் விட்டெறிக்கக்
கோகனக மாதுநின்று கூத்தாடும் வாசலினான் 26

வேதியர்கள் ஆசி மிகமுழங்க வேலவர்மேல்
கீதம் முழங்கக் கெசம்முழங்கும் வாசலினான் 27

---

21. ஆக்கினையான் - கட்டளையான்.

22. வேட்ட - விரும்பிய. விசையம் - வெற்றி.

23. கைவாள் உறையினின்றும் வெளியாக, பகைவர்கள் தேவர் உலகப் பெண்களை மணம் முடிக்கச் செய்யும் சேனையினை உடையவன். (பகைவர்களை இறந்திடச் செய்யும் ஆற்றலை உடைய சேனைகள்).

24. பொருந்தார் - பகைவர்கள். சொற்கோட்டை - புகழ்மாலைகள்.

25. குறுகலார் - பகைவர்கள். கண்ணி 25க்கும் 26க்கும் இடையில்
'அய்வர் சகாயன் அரியசில்ல வார்குலமும்,
தெய்வ மறையோர் செளிக்கவரு சீராளன்'
என்றொரு கண்ணி R. 5151ஆம் எண்ணுடைய அரசினர் நூலகச் சுவடியிலுள்ளது.

26. கனகம் - பொன். கோகனமாது - செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள்.

27. கெசம் முழங்கும் - யானை முழங்கும்.

வங்கதே சத்தார் வரவிடுத்த மங்கையர்கள்
கொங்கைகா ணிக்கைதிறை கொண்டுவரும் வாசலினான் 28

பந்தாடு மங்கையர்கள் பாய்ந்தாட நாமாது
வந்தாட நின்று மகிழ்ந்தாடும் வாசலினான் 29

பாரில் விளங்கப் பயிர்விளங்கத் திங்களில்மும்
மாரி விளங்க மனுவிளங்கும் வாசலினான் 30

வேதனுரை பொய்த்தாலும் மேருநிலை சாய்ந்தாலும்
நீதிமுறை தவறா நிருபர் சிகாமணியாம் 31

வள்ளலுக்கும் சிந்தா மணிக்கும் நவநிதிக்கும்
தெள்ளுதரு வைந்தினுக்கும் சீர்கொடுத்த செங்கையினான் 32

வன்னிப் பரியேறி வந்தவல்ல வாட்டாளன்
சின்னக்கா மாட்சிமன்னன் சீர்மாமன் எனவந்தோன் 33

## உலகாளும் நாளில் ஒருநாள்

சண்முகர்தன் தியானம் தரும்இந்திர வாழ்வென்று
உண்மை வ்ளர உலகாள வேயொருநாள் 34

நாற்றிசை யில்தீர்த்தம் நன்னதிநீர் ஆடியபின்
ஆற்றல்தரும் அஞ்செழுத்தும் ஆறெழுத்து மேசெபித்து 35

அதிதியர்கள் தன்பசியை யாற்றி யறுசுவைபால்
மதுரமைந்தர் பாச வருக்கம் அமுதருந்தி 36

வாசனைசேர் பன்னீரால் வாய்கைகால் பூசியபின்
வீசியசந் தனசுகந்தம் வீறாக் மெய்க்கணிந்து 37

---

29. நாமாது - நாமகள், கலைமகள்.

30. மனு - மனுநீதி.

31. வேதனுரை-படைப்புக் கடவுளின் உரை, நிருபர்-அரசன். சிகாமணி - முதல்வன்.

32: நவநிதி-ஒன்பது வகையான நிதிகள் : கச்சபநிதி, கற்பநிதி, சங்கநிதி, நந்தநிதி, நீலநிதி, பதுமநிதி, மகாநிதி, மகாபதுமநிதி, முகுந்தநிதி.

தெள்ளுதரு ஐந்தாவன ; அரிசந்தனம், கற்பகதரு, சந்தானம், பாரிசாதம், மந்தாரம்.

33. வன்னிப்பரி – குதிரை.

35. அஞ்செழுத்து - 'நமசிவாய' ஆறெழுத்து – சரவணபவ.

36. அதிதியர்கள் - பரதேசிகள்.

செச்சைமயில் வேலவர்தாள் செறகுமுடிக் கிசைந்த
பொற்சரிகைப் பாகுகட்டிப் பொத்ததுராய் தரித்து 38

சுருதி மறைப்பொருளும் சொற்கீதை யின்பொருளும்
பருகும் செவிக்கிசைந்த பச்சையோனடி தானணிந்து 39

கண்டகற்கு முண்டன் கண்ட குலாந்தகன்தன்
கண்டத்துக் கேற்றவச்சிர கண்ட சரிதரித்து 40

கொம்பனையார் கும்பமுலை கொண்டுகுத்து மார்பினுக்குத்
தும்பிப் பதக்கம் சோதிவிடத் தானணிந்து 41

கோகுலத்தை வேதியரைக் குவலயத்தைத் தாங்கவந்த
வாகு வலையத்தை மணிப்புயத்தில் தானணித்து 42

வித்துவ சனங்களுக்கும் வேதியர்க்கும் தானமிடும்
அத்தந்தனில் கடையம் அழகாய் அலங்கரித்து 43

அஞ்சினார் தம்மை அபயமெனக் காத்தருளி
மிஞ்சினாரைத் தேய்க்கும்விர லுக்குமிஞ்சி தானணிந்து 44

கருணீகர் காரியப்பேர் கருத்தர்தள கர்த்தர்வரச்
சுரிகைகத்தி வேல்வெடியுஞ் சற்றிவர உள்ளியத்தார் 45

கட்டியத்தார் வேத்திறத்தின் கையர் பராக்கெனவே
வட்டக் குடைநிழற்ற வந்தான் மணிமுகப்பில் 46

மேலான சங்கீத வித்தியா விநோதமொடு
மாலாம் இவனென வந்து கொலுவிருந்தான்; 47

---

38. செச்சைமயில் - அழகியமயில்.

39. சுருதி - வேதம். ‘சுருதி நாயகன் வரும் வரும்’ (கம்ப. சுந்தர). பச்சையோன் - திருமால்.

40. கண்டகன் - தொல்லை தருபவன். முண்டன் - அழிப்பவன். கண்டன் - தலைவன், வீரன். கண்டத்திற்கு-கழுத்திற்கு. கண்டசரி-கண்டசரம், கழுத்தணி.

42. கோ குலத்தை - ஆனிரையை, பசுக்கூட்டத்தை! குவலயம் - உலகம் வாகுவலையம் - தோளணி.

43. வித்துவசனங்கள் - புலவர்கள்; அத்தம், அஸ்த்தம் - கை; கடையம் - கையணி.

45. கருணீகர் - கணக்கர்; காரியப்பேர்கருத்தர் - செயலாளர்; தளகர்த்தர் - படைத்தலைவர்; உள்ளியத்தார் - அறிஞர்கள்.

46. கட்டியத்தார் - எழுச்சி கூறுவோர், புகழ் கூறுவோர்.

47. வித்தியா விநோதம் - கல்வி வல்லமை. மால் - திருமால்.

## வேட்டைக்குப் புறப்படுதல்

அப்போது முரசம் அறைவித்தான் என்னையன்
இப்போது வேட்டைக் கெழுந்தருள வேயிசைந்து 48

தூதுவரை நோக்கித் துரிதமாய் இக்கணத்தில்
தாதவிழும் வேட்டைத் தலைவருக்குச் சொல்லுமென்றான் 49

ஆஸ்தான போசன் அரமனையி னுட்புகுந்து
சேர்த்த நிசார்மேல்த் திகழும்உடைப் பட்டைகட்டி 50

வாங்கு சுரிகைகட்டி வயிரத்தால் புட்டில்கட்டித்
தூங்குசிலை யப்புறாத் தூணிகட்டி வாள்சேர்த்து 51

கட்டாரி கட்டிக் கமலமலர் தாட்கிசைய
மெட்டான தோல்க்கவசம் வீக்கிவடி வேலெடுத்து 52

ஆனதொரு தூணில் அடங்கியெழுந் தார்ப்பரித்து
நானென்று வந்த நரசிம்மம் போலவந்தான் 53

கொட்டமிடும் ஒன்னார் குறும்படக்கும் பேரிகைதம்
பட்டம் முழங்க பலவாத் தியம்முழங்க 54

சரகதியைப் பின்னிடவே தன்கதியை முன்னடத்தி
துரகதத்தின் பாவடியைத் தொட்டு மிதித்தேறி 55

சுத்தும் பரிசனமும் துரைமக்கள் சூழநடு
நத்தம் விளங்கவரு ராசசந்திரன் எனவந்தான் 56

பெருகுதள கர்த்தர்பிர தானிசா மந்தர்வர
வருமன்னிய வரருமணிய வகைதான் வரவே 57

---

49. இக்கணத்தில் - இப்பொழுதில்.

50. நிசார் - நீண்ட காற்சட்டை.

51. சுரிகை-உடைவாள்; புட்டில்-விரலுறை; அப்புறாத்தூணி-அம்புறாத் தூணி – அம்புக்கூடு.

53 நரசிம்ம அவதாரம் - திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்று. பாதி மனித வடிவமும் மீதி விலங்கு வடிவமும் கலந்த தோற்றத்தில் திருமால் பிரக லாதனைக் காப்பாற்றும் பொருட்டுத் தோன்றியதாகப் புராணம் கூறும்.

54. ஒட்டார் - பகைவர்கள்.

55. சரகதி - அம்பின் வேகம்; துரகதம்-குதிரை.

56. சுற்றும்பரிசனம் - சூழ்ந்திருப்போர். நத்தம் - ஊர்.

57. பிரதானி - அமைச்சர்; சாமந்தர் - தோழர்.

ஊதுசின்ன மேள மொலிகேட்க நன்னகரில்
மாதரசர் எல்லாம் வகைவகையாய் வந்துநின்றார் 58

## கண்டோர் நிலை

வந்துநின்ற மங்கையரில் மாலான மங்கைசிலர்
பந்துமுலை விம்மயிடை பற்றுகலை சோர்ந்துவிட 59

மாதவனோ இந்திரனோ மாமதனோ அல்லது
சீத சரவணத்தில் செனித்தவடி வேலவனோ 60

மாதவனே யாமாகில் வளையாழி கையிலுண்டே
காதல் இராணி கணவன்கண் ஆயிரமே 61

அவ்வேளே யானால் அனங்கனென்று சொல்வாரே
செவ்வேளே யானால் திருமுகமோர் ஆறுமுண்டே 62

எறிசையா னென்றுசின்னம் ஏற்றவறிந் தாயிழைமார்
நெறிசெல்வா னாமவர்க்கு லட்சியமிலை யென்றுவந்தார் 63

## உடன்வருவோரும் உரைக்கும் வஞ்சினமும்

பொங்குசினப் புலிபோலப் புகழூழி யத்தர்வரச்
சிங்கத்தின் குட்டியெனச் சேருவைகள் முன்னடக்க 64

குறிக்கார ரொண்டிருப்புக் கோளரிகள் வந்துவழி
மறித்தாலும் குத்தியுயிர் வாங்குவேன் என்றுசொல்ல 65

---

58. சின்னம் - சங்கு; மாதரசர் - பெண்கள்.

59. மாலான - காமுற்ற; சோர்ந்துவிட - சோர்ந்து விழ.

60. மாதவன் - கண்ணன்; சீதசரவணம் - குளிர்ச்சி நிறைந்த சரவணப் பொய்கை.

61. வளையாழி - சங்கு சக்கரம்; காதல் இராணி கணவன் - இந்திரன். கோதம முனிவரின் மனைவி அகலிகையை சூழ்ச்சி செய்து புணர்ந்தமையால் வெகுண்ட முனிவரின் சாபத்தால் இந்திரனுக்கு ஆயிரம் கண்கள் உண்டென்பர்.

62. வேள் - காமன், மன்மதன்; அனங்கன் - உருவமிலாதவன். செவ்வேள் - ஆறுமுகன்.

63. ஆயிழைமார் - அணிகலன்களை அணிந்த பெண்கள்.

64. ஊழியத்தர் - தொண்டர்கள்; சேருவைகள் - சேர்வைகாரன்; ஒரு சாதியினர்.

65. குறிக்காற ரொண்மருப்பு - R. 5134 சுவடியில் இவ்வாறு உள்ளது. கோளரி - சிங்கம்.

காட்டுப் புலிகுத்திக் காவலன் முன்னைவைத்துப்
போட்ட சரப்பணியைப் போய்வாங்க வேணுமென்றும் 66

காண்டா மிருகத்தைக் கைவேலால் கொன்றுகுத்தி
ஆண்டவற்குக் கேடையமே யாகத் தருவனென்றும் 67

தப்பாமல் யாளி தலைமூளை கொண்டுவந்து
வைப்பாட்டி தன்னை வசப்படுத்த வேணுமென்றும் 68

கொம்பானை கொண்டுவந்து குமரர்திருச் சன்னதிக்கே
நம்புதிரு மஞ்சனநீர் நடத்திவர வேணுமென்றும் 69

வேங்கையுரி கொண்டுவந்து வேதியர்தன் பூசனைக்கே
ஆங்கமையும் ஆசனமாய் அமைக்கயினி வேணுமென்றும் 70

தந்திமருப் பைவெட்டிச் சவ்வாதுப் பாணிசெய்து
கொந்தார் குழலாட்குக் கொண்டுவர வேணுமென்றும் 71

பலபலவாய்ப் பேசியவர் பாங்காய் நடந்துவரச்
சிலைகாரர் வேல்காரர் திரண்டுவெடிக் காரர்வர 72

## வேட்டைக்குச் செல்லும் காட்சி

சேனா சமுத்திரத்தின் திகழுமிலை வேலொளி
மீனாகு மென்ன விளங்கியொளி விட்டெறிக்க 73

பேரியொலி யால்தருவின் பூவுதிரப் பின்னுபுட்ப
மாரியென ஒட்டகமும் வான்பரத தண்ணுந்துவர் 74

## கானவர்களும் கருவிகளும்

காட்டெருமைக் கொம்பும் கறங்கு துடிமுழங்க
வேட்டைவலைக் கட்டுடனே வீறான செந்துணியும் 75

---

66. முன்னே வைத்து; சரப்பணி - ஒருவகை அணிகலன், கழுத்தணி.

68. யாளி - சிங்கம், யானை போன்ற முகமுடைய மிருகம்; வைப்பாட்டி-மனையாளைப் போல் வைத்திருக்கும் மாது.

70. வேங்கையுரி - புலியின் தோல்; ஆசனம்-இருக்கை.

71. தந்தி மருப்பு - யானைத் தந்தம்.

72. சிலைகாரர் - வில்வீரர்கள்.

73. படை எனும் கடலில் வேல் எனும் மீன்கள் மின்னின.

74. பேரி - முரசு; தரு-மரம்; புட்பமாரி - பூமழை.

75. துடி - உடுக்கை.

கோளரியை யானாலும் கொன்றுயிரை வாங்கிவிடும்
ஞாளிவாய் கண்டோர் நடுக்கமுற வேநடக்க 72 (அ)

ஊளியிலே பாசம் ஒழியா திருவருக்கு
ஞாளிக் கிவர்காத்தி நற்பாச மேபிடித்து 73 (அ)

தூறுதலை மீதில் சுற்றுகவண் ஈட்டியுமுக்
கூறல்வடி செம்மண் ஒளிவிட்ட மேனியுமாய் 74 (அ)

செந்தலையும் பாசிப்பற் சீரில்லா மேனியுமாய்
வந்துபணி கானவர்கள் வாய்பொத்தி முன்னோட 75 (அ)

### கருடக்கொடி கண்டு கலங்கும் நாட்டவர்கள்

தசாதி பாசவினை தள்ள வருவதுபோல்
வீசுகெரு டத்துவச மீமிசையில் ஆடிவர 76

கலிங்க மதங்கங் கலங்கி நடுநடுங்கக்
குலிங்க மலையாளங் குடிவாங்கச் செந்தூளால் 77

### சகுனமும் சகுனியும்

சிங்க மெறிசைத் திருநகராள் செல்வனெனுந்
துங்கன் குமாரலிங்க சுமுகன் வரும்வழியில் 78

கெருடன் இடமாகக் கிளைகூட்ட ஆந்தையொன்ற
திருவனையார் பூர்ணகும்பம் சென்றெதிரே கொண்டுவர 79

கண்ட நிமித்திகனும் கைகட்டி வாய்புதைத்துக்
கொண்டல் குமாரலிங்கக் கொற்றவன்முன் கூறலுற்றான் 80

கண்ட நிமித்திகனும் காமனைப்போல் வேட்டைசெய்து
மண்டலத்தில் ராசகன்னி மணமுடிய வேணுமென்றும் 81

---

72. ஞாளி - வேட்டைநாய்.

74(அ). தூறுதலை - சிலும்பிய மயிர்த்தலை.

75(அ). பாசிப்பல்-பாசிபடிந்த பல். கானவர்கள்-காட்டில் உள்ளவர்கள்.

76. கெருடத்துவசம் - கருடக்கொடி; மீமிசை - மிகவும் உயரத்தில்.

78. துங்கன் - மேன்மையுடையவன்; சுமுகன் - அழகுடையவன்.

79. திருமகளை ஒப்பப் பெண்கள் மங்கலப் பொருள் நிறைந்த குடத்தோடு வருதல்.

80. நிமித்திகன் - சோதிடன்;

81. ராசகன்னி - அரசகன்னி,

## வேட்டையாடல்

சொன்னமொழி கேட்டுத் துரைகுமார லிங்கயமால்
மன்னன் காந்த மலைச்சாரல் வந்தனுகி 82

வெடிக்காரர் விற்காரர் வில்லம்புக் காரர்களை
அடிக்கடி கட்டாப்பில் அணியணியாய்த் தானிருத்தி 83

வலைக்கட்டுக் கட்டி வருங்கான வர்காட்டைக்
கலைக்கட்டும் என்றார் கானவரெல் லாம்நடந்தார் 84

வாசிதனை விட்டிறங்க வாகினியின் மாமுழக்கம்
ஆசை செவிடுபட அதிரக் கெடிமுரசம் 85

மாலாங் குமாரலிங்க மகாராசன் வேட்டைசெய்யக்
காலாளுங் கானவருங் காட்டைக் கலைத்துவிட்டார் 86

புல்வாய் கரடிபுலி புன்கடமான் பன்றிமுயல்
எல்லாமுந் தட்டுண் டெழுந்து கலைந்தோட 87

அம்பினால் வேலால் அருந்தோ மரத்தாலுங்
கொம்பிலே குண்டுவைத்து குத்தி நெருக்கிவர 88

ஒட்டில்வந்த வேங்கைதனை யொருவிடமும் போகவினி
விட்டுவிடோ மென்றுதரை மீதில்விழக் குத்தினரே 89

குப்பென்று எடுத்தமட்டிக் கொண்டுவரும் பன்றிதனைத்
தப்பாமல் கைவேலால் தான்குத்தி வீழ்த்தினரே 90

மரைகள்பல கரடிமுயல் வரும்மிருக மிசைஞமலி
குரவளைகள் விரைகளதிர குவிசதைகள் கவியெறிய 91

---

82. 'காந்தைமலை' சுவடியில் வேவறுபாடு.

83. கட்டாப்பு - காவல் நிலம்.

85. வாசி - குதிரை; வாகினி - படை, படையில்ஒரு தொகை; ஆசை - திசைகள்; கொடிமுரசம் - கடிமுரசம், அரசமுரசம்.

86. காலாள் - கால்நடைக்காரர்கள்.

87. புல்வாய் - கருமான், கலைமான்; கடமான் - காட்டுப் பசு; தட்டுண்டு - சிதறுண்டு.

88. தோமரம்-இருப்புலக்கை, கைவேல்;

89. ஒட்டில் - ஓரத்தில்.

90. குப்பென்று - பேச்சு வழக்கு.

91. மரைகள்-புள்ளிகளையுடைய மான்; ஞமலி-நாய்.

கல்வி மறையோர்கள் கானவர்கைச் சிக்கியபோல்
புல்வாய் நாய்க்காலில் புரண்டு விழுந்துருள 92

தந்திரன் குமாரலிங்க சாமி மடத்தில்நிதம்
வந்துண்டோர் தன்பசிபோல் மயில்கூட்டம் ஏகியதே 93

ராகவனா ரம்பதென நாற்றிசையும் தட்டாமல்
வாகைதரு கேகையங்கள் வானில் பறந்தோட 94

துட்டப் பெரும்புலியைச் சுட்ட வெடிப்புகையில்
எட்டுத் திகையும் இரவியையும் தான்மறைத்து 95

வான்அம் புலியும் மாதேவன் மானுமன்றிக்
கானில் வருபுலிமான் காணவரி தானதுவே. 96

**மான்வேட்டை**

இந்தவிதம் எங்கோன் இசைந்தாடும் வேட்டையிலே
வந்ததொரு மாரீச மான்வலையைத் தாவியதே 97

வேல்காரர் விற்காரர் வெடிகளுக்கும் எட்டாமல்
நாற்கவியைக் கண்டோடும் நாட்டிலுள்ள லோபரைப்போல் 98

பூமிசையில் ஆரும் புகழுங் குமாரலிங்க
சாமியது கண்டவுடன் தாவிக் குதிகுதித்து 99

தாவிக் குதித்தோடச் சாமி குமாரலிங்க
காவலவன் கைச்சிலையும் கணையும் விரைந்தெடுத்து 100

அறவோர் மரையுரியை அந்தகமான் கொண்டோடத்
தறுகாமல் முன்னோடுந் தனஞ்செயன்போல் தானோடி 101

---

92. கானவர் - வேடர், திருடர். புலவர்களுக்கு இத்தகைய அனுபவங்கள் உண்டென்பதனைப் பொய்யாமொழிப் புலவரின் கதை கொண்டே அறியலாம்.

94. கேகையங்கள்-மயில்கள், கேகயப்புள்.

95. எட்டுத்திகை-எட்டுத் திசை; இரவி-கதிரவன்.

96. வானத்து அம்புலியும், சிவபெருமான் கை மானும் அன்றி வேறு புலியோ மானோ அங்கில்லை.

97. மாரீசமான் - இராவணனின் மாமனாகிய மாரீசன்; இராவணனின் வேண்டுகோளுக்கு இணங்கி பொய்மான் வேடம் பூண்டு, சீதையின் மனத்தை மயக்கி, இராமனது அம்பால் இறந்தான் என்று இராமாயணம் கூறும்.

99. ஆரும் - யாரும்.

100. கைச்சிலை – கைவில்; கணை - அம்பு.

101. அந்தமான் (சு. வே); தறுகாமல் - தடைப்படாமல்.

நெட்டோட்ட மாக நெடுந்தூரம் தானோடத்
தட்டுருவி யோடும் தன்கணைக்குப் பூசையிட்டான் 102

## இயற்கையின் வரவேற்பு

பேராசை மானின் பின்தொடர்ந்து வந்தவெய்ய
நீராசை யாலே நிழல்தேடிச் செல்லவங்கோர் 103

தென்றல் மணம்கொண்டு சிறுவெயர்வு தான்துடைக்கும்
தண்டலைப் பூங்காவில் தனிச்சிங்கம் போலவந்தான் 104

நாட்டிறைவன் வந்ததினால் நான்காண வேணுமென்று
கோட்டு மலரும் கொடிமலரும் தான்சொரிய 105

காசங் கவரியிடக் கருங்குயில்கள் பாடிவர
வீசும் இறகை விரித்தாடும் மாமயில்கள் 106

வேனிலான் சந்திக்க வேளைநல்ல வேளையென்று
தானிறங்கும் பாளையம்போல் தருத்தோறும் பைங்கிளிகள் 107

ஆளுமென்று மேவார் அரிய நிதிவாரித்
தாளிற் சொரிவார்போல் சரக்கொன்றைப் பூச்சொரிய 108

சந்திரகிரிக் குமாரலிங்க சாமி சமுகமதில்
வந்தேற்போர் கைபோல வண்காந்தள் பூமலர 109

நற்றமிழைப் பாடிவரும் நாவலரைக் கண்டவுடன்
முற்றுமில்லை என்பார்போல் முல்லை முகைவிரிய 110

சாந்தன் குமாரலிங்க சாமியவர் கண்குளிர
வாய்ந்தவனச் சிங்கார வகையெல்லாம் பாத்துவரப் 111

## தலைவி அறிமுகம்

பதுமினி யிலாதி பதுமினியாஞ் சாதியிவள்
அதிரூப ரேகை அவனிதனிற் பெண்பெருமாள் 112

---

102. நெட்டோட்டம் பே. வ.; தட்டுருவி - ஊடுருவி, உட்புகுந்து.
107. பாளையம் - படை, பாசறை; தருத்தோறும் - மரங்கள் தோறும்.
108. மேவார் - பகையரசர்.
111. சிங்கார - அழகிய.
112. பதுமினியில் ஆதிபதுமினியாம் சாதியிவள். காமசாத்திரத்தில் பெண்கள் பதுமினி, அத்தினி, சித்தினி, சங்கினி என்று குணங்களின் அடிப்படையில் வரிசைப்படுத்திக் கூறப்பட்டுள்ளனர். அவர்களுள் முதல் வரிசையில் உள்ள பெண்ணாக இச்சிற்றிலக்கியத் தலைவி பாராட்டப்படுகிறாள்.

மந்தரமும் வாசுகியும் வானவரும் தானவரும்
வந்து சமர்பொருத வந்துதித்த மோகினியார் 113

காம கலைவாணி காம னயிராணி
காம னருக்காணி காமசுப கல்லியாணி 114

மாதவர்கள் வேதமந்திர மாதவர்கள் பூசையெந்திர
மாதவர்கள் ஓதுதந்திர மாதவருக்கு ஏற்றசந்திரன் 115

அமுர்த சுரதாணி அமுர்த ரசகேணி
அமுர்த குணவாணி அமுர்தசுப கல்லியாணி 116

காச்சிய மத்துருக்கிக் கருவதனில் வார்க்காமல்
ஆச்சரிய மாக அயன்வகுத்த பொற்பாவை 117

சிற்பர்கையில் தூரிகையால் தீட்டாமல் மாமதிளில்
ஒப்பமுடன் சேராது உயிர்பெற்ற சித்திரமாம் 118

கையால் எடுத்தொருவர் கட்டாமல் வாடாமல்
துய்யவண்டு வந்து சுவையா மதுமாலை 119

காயா மலைந்து கண்ணீர்த் ததும்பாமல்
தாயார் மடியில் தவழ்ந்துவளர் பூங்கமுகு 120

கட்டுண்டு வாடிக் கடையில்விலை செய்யாமல்
மட்டவிழும் பூங்குழலார் வளர்த்த மருக்கொழுந்து 121

அம்பாருங் கண்ணார் அருந்தவத்தி னாற்சமைத்துக்
கும்பாமல் நல்லபதங் கொண்ட வடிபாகு 122

---

113. அமரரும் அசுரரும் பாற்கடலை மந்தரமலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பைக் கயிறாகவும் கொண்டு கடைந்த காலத்துத் தோன்றிய மோகினி.

117-134. தலைவியின் அழகு பாராட்டப் படுகின்ற முறை நயமாக இருக்கிறது. பாரதியார்,

> 'கற்றவர்க்குச் சொல்வேன் கவிதைக் கனிபிழிந்த
> சாற்றினிலே, பண்கூத் தெனுமிவற்றின் சாரமெலாம்
> ஏற்றி அதனோட இன்னமுதைத் தான்கலந்து
> காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்
> மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்'

என்று தமது குயில் பாட்டில் பாடியுள்ள வருணனையின் முன்னோடியாகச் சிற்றிலக்கியத்தின் இப்பகுதி விளங்குகிறது.

119. காட்டாமல் என்றும் பாடம். வாட்டாமல் என்றும்பாடம்.

120. கொளுந்து என்றும் பாடம்.

122. பாகு - சருக்கரைக் காய்சிய குழம்பு.

பாங்கில் ஒருவர் பார்த்தவுட னேமயக்கும்
தூங்காமல் மஞ்சமிசை தூங்கும் பசுந்தேறல் 123

பொங்கரவு சேர்கானில் பொய்க்கலகம் காட்டாமல்
வங்காரக் கட்டிலிலே வந்துவிளை யாடுமயில் 124

காட்டில் பரவாமல் கண்ணியிலே சிக்காமல்
கூட்டில் அடையாமல் கொஞ்சும் கிளிப்பேடு 125

பின்சாயல் கண்டொருதாள் பெயர்த்துச் சிறையிருக்கும்
தன்சாயலை மயிலுக்குச் சாதிக்கும் பேடைமயில் 126

வேதனைமேற் கொள்ளாமல் விண்ணில் பரவாமல்
சாதியொரு நான்கில் முதற்சாதி யானபேடு 127

அம்பாரு மாரற்கு அருங்காள மாகிவெகு
கொம்பேறி சஞ்சரித்துக் கூவாமற் கொஞ்சுகுயில் 128

செவ்வன்ன மூக்கில் திரள்கோபம் வையாமல்
எவ்வனமும் போகாமல் இருக்கும் மயில்பேடு 129

கோர்வையிலே போகிச்சுக் கொள்ளாமல் ஆடவரைப்
பார்வையிலே போகிக்கப் பார்த்திருக்கும் ஆணிமுத்து 130

பொங்கரவம் சூடாமற் புதைந்து கிடவாமல்
தங்கச் சிமிழ்இரண்டு தாங்கிநின்ற சீவரத்தினம் 131

அங்கசனைக் கண்ணால் அரனார் எரித்துவிடும்
வங்கையெல் லாம்தீர்க்க வந்த மனவயிரம் 132

கோபவளந் தீரக் குறிஞ்சிமலர் தேனூட்ட
மாபவள வள்ளமொன்று வைத்தசித்திரப் பூம்பாவை 133

விரும்பச் சையோகமிகச் சேயாதி கேளி
யரும்பச்சை மாதுக்கு அநேகரதி யொவ்வாதே 134

---

123. தேறல் - மது.

124. பொங்காவு என்றும் பாடம்.

125. கண்ணி - வலை.

126. 'மயிலுக்கு' என்றும் பாடம்

128. மாரர்க்கு - காமனுக்கு; காளம் - எக்காளம்.

132. அங்கசன் - காமன்; அரனார் - சிவபெருமான்; வங்கை - பகை.

133. வள்ளம் - உண்கலம்.

134. சையோகம் - கலவி இன்பம்.

## பாங்கியரோடு மலர் பறிக்கத் திட்டமிடல்

தாதாரும் பூங்குழலாள் சந்திரவதிப் பாங்கியைப் பார்த்
தேதோ தெரியாது இடமார் துடிக்குதுபார் 135

இடதுகண்ணும் தோளும் இன்னம் துடிக்குதென்று
மடமானை வென்ற மதர்விழியாள் சொல்லலுமே 136

கன்னிக்கு இடம்துடித்தால் காணும் அதிகசுபம்
இன்னே மகாபுருடன் விரும்பவுனை வேணுமென்றாள் 137

வாட்டந் தவிர்த்து மனங்கிளர்ந்து பூங்காவில்
கோட்டு மலரெடுத்துக் கொண்டுவர வேணுமென்று 138

## ஒப்பனை

வங்காள மஞ்சள் வருங்கலவை சேர்த்தரைத்துத்
தங்கம் பழுத்ததெனத் தான்குளித்த மேனியின்மேல் 139

சந்தனம் கத்தூரி சாந்து பரிமளங்கள்
அந்தமிகப் பூசி அருஞ்சரிகை சேலைகட்டி 140

தாதியர்கள் வந்து சாய்கொண்டை தான்முடித்துக்
கோது சடைக்கிசைந்த கொத்துச் சரந்தரித்து 141

கஞ்சனம்போ லேயிலங்கு கண்ணிரண்டு மேகுளிர
அஞ்சனமை தீட்டி யறியத் திலகமிட்டு 142

கட்டுக் குழலுக்குக் காரகிலும் சந்தனமும்
மட்டுப்பா லின்புகையும் வாசனைசே ரப்பிடித்து 143

சேர்ந்தபத மிரண்டிற் செம்பஞ்சுச் சாயமிட்டு
வாய்ந்த முலையிரண்டில் மகரிகா பத்திரமிட்டு 144

---

135 - 137. பெண்களுக்கு இடதுபக்க உறுப்புகளும், ஆண்களுக்கு வலது பக்க உறுப்புகளும், துடித்தால் நல்ல சகுனம் என்ற நம்பிக்கையை இலக்கியங்களில் காணலாம்.

'வாட்கண் இடனாட' (பு. வெ. மாலை வெட்சிப் படலம், ப. 19.)

138. தவிள்ந்து-பாடவேறுபாடு; கோட்டுமலர் - மரத்தில் உள்ள மலர்.

142. கஞ்சனம் - கண்ணாடி.

144. மகரிகா பத்திரம் - முதலைவடிவத்தை மார்பில் தொய்யிலாக எழுதுதல்.

பாடகமும் சூடகமும் பாதசர முந்தரித்து
ஆடவர்கள் நெஞ்சம் அதிரச் சதங்கையிட்டு 145

மாணிக்க மாலையிட்டு வயிரப் பதக்கனிட்டு
ஆணிப் பசும்பொன்னால் அடித்த கடையமிட்டு 146

கொப்பிட்டு வாளியிட்டுக் கொந்தளப்பொன் னோலையிட்டு
ஒப்பிட்டுச் சொல்லவொண்ணா தோங்குமுத்து மாலையிட்டு 147

சிற்றிடையில் ஒட்டியானம் சேர்த்திறுக்கிப் பின்னலிட்டப்
பட்டை யரைஞாணும் பாங்குபெறத் தானணிந்து 148

அம்பவளம் ஈன்ற அரியபற்ம ராகமெனச்
செம்பதுமக் கைவிரலிற் சேர்ந்த நகந்துலங்க 149

திங்கள் மதன்கோயில் திறக்குமுத்திரைக் கோல்தனக்கோர்
அங்கொருபூண் கட்டுவார்போல் அங்கைவிரற்கு ஆழியிட்டார் 150

சேய்க்குவளை விழியாள் சிந்தைமகிழ்ந் தோங்கரெண்டு
கைக்கு வளையும் கடையம் பவளமிட்டார் 151

தங்கரேக் கென்னச் சமைந்த ரவுக்கைதொட்டு
மங்கை வரிக்கழுத்தை மரைத்தார் சவடியிட்டு 152

மாதெயிற்றின் மீதுபழி வைத்திடுவேன் என்றதுபோல்
கோதிலா முத்துமூக் குத்தியொன்று தானணிந்தார் 153

நெற்றிக்கு இசைந்த நித்திலப்பூஞ் சுட்டிகட்டிக்
கொத்துமலர் சூளிகையிற் றொங்கலிட்ட குப்பியிட்டு 154

பொன்னுக்குப் பொன்னுமொரு பூவுக்குப் பூவிடல்போல்
கன்னிகைக்குச் செம்பொன் கலன்கள் பலதரித்தார் 155

அந்தரதி போலும் அதிரூப ரேகைமின்னாள்
வந்து மலர்க்காவில் மலரெடுக்க வேநடந்தாள் 156

---

145. பாடகம் - பாதகடகம்; சூடகம் - கைவளை; பாதசரம் - மகளிர் காலணி வகை.

146. கடையம் - கடகம்.

147. கொப்பு, வாளி-காதணியின் வகைகள்.

149. பற்மராகம் - பதுமராகம்; நவமணியில் ஒன்று.

150. ஆழி-கணையாழி.

152. ரேக்கு - தகடு; மரைத்தார் - மறைத்தார்; சவடி-ஓர் அணி.

153. நித்திலம் - முத்து.

156. அதிரூபரேகை மின்னாள் - தலைவியின் பெயர்.

### பூங்காவில் பாங்கியர்களுடன்

காந்திமதி சந்திரமதி காமவதி சோமவதி
சாந்தவதி வேதவதி தந்திரவதி இந்திரவதி 157

மீனாட்சி காமாட்சி விசாலாட்சி நீலாட்சி
ஞானாட்சி சோமாட்சி நல்லமுர்த இந்திராட்சி 158

மோகவல்லி சோமவல்லி முத்துவல்லி சித்திரவல்லி
நாகவல்லி இந்திரவல்லி ஞானவல்லி காமவல்லி 159

சம்போக ரத்தினம் சரசரத்தினம் மோகரத்தினம்
அம்போருக ரத்தினம் ஆனவுயிர்ப் பாங்கியரும் 160

அந்தமிகு தோழிமார் அன்னம்போல் சூழ்ந்துவர
வந்ததொரு ராசஅன்னம் போலமலர்க் காவில்வந்தாள் 161

கண்களின வண்டதென்று கனிவண்டு மோதுவதைச்
செங்கையினால் வீசுவது செங்கமல மென்றுசுற்ற 162

அந்த யிடம்விட்டு அப்பால் அகன்றுவந்து
பந்து முலைகுலுங்கப் பன்மலர்கள் தானெடுத்தாள் 163

### பூவையர் பறித்த பூக்கள்

மல்லிகை முல்லை மணந்த இருவாட்சி
மெல்லியலார் வனத்தில் விரைந்து மலரெடுக்க 164

நிழல்போலும் தன்னைவிட்டு நீங்காத வண்டினங்கள்
அழகான கூந்தலைக்கண் டந்திவந்த தென்றகல 165

மாமயில்போல் வந்துநின்று மங்கை மலரெடுக்கத்
தாமக் குழலார் தனித்தனியே தானகன்றார் 166

வீசுகின்ற வாள்விழியாள் வேனிலான் வந்திறங்கும்
பாசறையில் உள்ள பலமலரெல் லாமெடுத்தாள் 167

கூடும் கலாபமயில் கூட்டத்தி லேயகன்ற
பேடை இளமயில் பேதைமலர் காவில்நின்றாள் 168

அன்னமென்ன அல்லவென்ன ஆமென்ன வேநடந்து
புன்னைசிறு செண்பகத்தின் புதியமலர் தானெடுத்தாள் 169

---

160. ரத்தினம் 'ரற்றினம்' என்றே சுவடியில் உள்ளது.
162. களிவண்டு சுவடி வேறுபாடு.
167. வேனிலான் - காமன்.

## பூவைத்தேடும் பூந்தோட்டம்

வாடாமல் மூன்று வகைப்பூவுந் தானெடுத்துக்
கோடாடு மாமலர்மேல் கொம்பன்னாள் ஆசை
கொண்டாள் 170

உந்திமலர் புன்னை ஓங்குமுலைக் கோங்கிருக்க
வந்தயொரு நாசி மலர்ச்செண் பகமிருக்க 171

புத்தமுர்தம் ஊறும் புன்முருக்குத் தானிருக்க
நெத்திதனில் செவ்வகத்தி நேரே மலர்ந்திருக்க 172

வாசனைசேர் பன்னீர் மலர்மேனி யிலிருக்க
வீசுமணங் கொண்ட முல்லைவெண் ணரும்பிருக்க 173

தூண்டா விளக்கிருக்கத் தூயவனல் தேடுவார்போல்
நீண்ட மரந்தோறும் நேரிழையாள் சென்றுசென்று 174

கண்டகமே யுந்தனையுங் கண்டகநான் பூரித்தேன்
முண்டகமே நீங்கள் முடிக்கமலர் தாரீரோ 175

செருந்தியே செண்பகமே தேடி நெடுநேரம்
வருந்தினேன் ஏழையற்கு வன்னமலர் தாரீரோ 176

பன்னீரே மாதவியே பாடலமே கோங்கினமே
என்னீர்மை நீர்கண்டு இரங்கிமலர் தாரீரோ 177

மைய்யமருங் குங்குமமே வளர்புன்னைத் தாதகியே
அய்யமென்று கேட்டவளுக் கானமலர் தாரீரோ 178

வாளகன்ற கண்ணார் வரக்காணேன் இந்நேரம்
காளகண்ட மேகுழலில் கட்டமலர் தாரீரோ 179

---

170. மூன்று வகைப் பூ-பூக்களை நான்கு வகையாகப் பிரிப்பர். கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதற்பூ இவற்றுள் கோட்டுப்பூ நீங்கலான மூன்று வகைப் பூக்கள் குறிப்பிடப்படுகின்றன. சிலர் 'நிலப்பூ' என்று ஒன்றுசேர்த்து ஐவகை என்பர். கோடாடு மலர் - கோட்டுப்பூ.

172. நெற்றிதனில்.

175. கண்டகம் – நீர்முள்ளி, 'கண்டகங்காள் முண்டகங்காள்', (தேவா. 268.2). கண்டகநான் – கண்டு அகம் நான்; முண்டகம் - தாமரை, நீர்முள்ளி.

177. பாடலம்-பாதிரிமரம்; என்னீர்மை-என்தன்மை.

178. தாதகி - அத்திமரம், ஆரமரம்.

179. காளகண்டம் - குயில்.

தஞ்சம் ஒருவரில்லைச் சலாம்செய்தேன் உங்களுக்கு
அஞ்சுகங்காள் எந்தன்முடிக் கானமலர் தாரீரோ 180

சாயாத கோட்டில் தனித்திருக்கும் சாரிகையே
நேயமலர் தாராத நெட்டூர ரானீயே 181

இந்தவிதம் புலம்ப இளங்கிளியும் மாங்குயிலும்
அந்தமொழி கேட்டுவெட்கி அவ்வனத்தை விட்டகல 182

**மாதவிப் பந்தலில்**

தாதாரும் பூங்குழலாள் தன்னந் தனியேகி
மாதவியின் நீழலிலே வந்துநின்றாள் மாமயில்போல் 183

வனத்தில் இளமுலையாள் வந்து தனித்திருக்கக்
குனித்தசிலை ராகவன்போற் குமாரலிங்க ராசேந்திரன் 184

சீராமன் தன்மனத்தில் சிந்தமலர் அம்பதனை
ஆராய்ந் தெடுக்கவரும் அங்கசன்போற் பார்த்துவர 185

**காட்சி**

தூண்டா மணிவிளக்கைச் சோதிமின்ன லின்கொடியைக்
காண்டா வனதகன்ன கண்ணாரக் கண்டுகொண்டான் 186

**ஐயம்**

பொன்னுலக மானோ பூவையோ வலது
பன்னகர்தன் னாட்டிலுறை பாவையார் தாமிவரோ 187

**துணிவு**

என்று மயங்கி யிருக்கும் தறுவாயில்
துன்றுநிலம் சேவடியைத் தோய்வதுவும் அங்கறிந்து 188

---

180. 'சலாம்' - வணக்கம்; 'மாலயன் சலாமிடு', அருணகிரிநாதர், (திருப்பு, 189) அஞ்சுகம் - கிளி.

181. நெஷ்ட்டூரரானீயே சுவடி வேறுபாடு.

184. குனித்த சிலை - வளைத்த வில்.

185. அங்கசன் - காமன்.

186. காண்டாவனம் - இந்திரவனம்; காண்டா வனதகன்ன - காண்டா வனத்தின் கண்ணே.

187. பன்னகர் - பண்ணவர், தேவர்கள்.

முடித்தமலர் வாடுவதும் முகத்தில் குறுவெயர்வும்
அடிக்கடி கண்களிரண் டழைப்பவர் போலிமைப்பும் 189

நின்ற நிலையும் நெறித்தபுரு வக்கடையும்
குன்றுமுலை தாங்காமல் கொடியிடைதள் ளாடுவதும் 190

**குறிப்பறிதல்**

கண்டான் மனக்குறிப்பைக் காளைமதன் போலடுத்துக்
கொண்டான் இளமூரல் கொட்டிமுகம் கோட்டிநின்றான் 191

**வினாதலும் புகழ்தலும்**

எவ்வூரோ எவ்விடமோ ஏதுபேர் நீருரைத்தால்
செவ்வாயில் மாமுத்துச் சிந்திடுமோ சொல்வீரே 192

மாதவரெல் லாம்வருந்த வருதாரு காவனத்தில்
சீதமதி போலவந்த செல்வியார் நீர்தாமோ 193

வில்லெடுத்த மன்மதனை மேவிச் சுகித்துநிதம்
செல்லஞ் செருக்கிவரு சேயிழையார் நீர்தாமோ 194

இந்திரற்குத் தூது இசைந்து முனம்நடந்த
அந்தநளன் மாலையிட்ட ஆயிழையும் நீர்தாமோ 195

திவ்வியமாங் கற்பதரு தேவலோ கத்திருந்து
இவ்வுலகம் பார்க்கவந்த ஏந்திழையும் நீர்தாமோ 196

பேரழகி யான பேதையர் தம்மழகை
ஓரழகாய் வேதனுமக்கு ஒப்பித்து விட்டானோ 197

வானிரவி மாமதிக்கே மறைந்தகலும் வல்லிருளும்
மானே உனது மலர்க்குழலுக்கு ஒப்பாமோ 198

---

189. 'கையா லழைப்பனபோல் இமையா நிற்கும் காரிகைக்கே' த.வா.கோ. பாடல் 3.

193. தாருகாவனத்து இருடிகளும், அவர்களின் மனைவியரும் செருக்குற்றிருந்த காலத்தில், தேவர்கள் வேண்ட சிவபெருமான் அவர்களின் செருக்கினை அடக்க, திருமாலை மோகினி வடிவத்தில் அனுப்பி வைத்ததாகப் புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

194. இரதி.

195. தமயந்தி.

197. வேதன் - படைப்புக் கடவுள்.

198. வானிரவி - வான்இரவி, கதிரவன்.

அன்பளிப்பு
GIFT
R. TIRUMA

நீரில் ஒளித்து நேர்ந்துபடும் சை[illegible]
காரிகையே உந்தன் கருங்குழலுக் கொப்பாமோ 199

நந்தைப் பிறையையுங்கள் நன்னுதற்கொப் பாயுரைத்தால்
சிந்துரரே கைத்திலதம் சேர்ந்திருக்க மாட்டாதே 200

நிறையும் நவரசமும் நிறமூன்றும் பெற்றகண்ணுக்(கு)
உறைவாளும் கைவேலும் உவமைசொல்லக் கூடாதே 201

மலையமுனி தென்னவனும் வடிவேலரு மும்முடைய
கொலைசெய்விழி யின்பகையின் குறும்படக்க வோபிறந்தார் 202

வந்தபுரு வங்கரும்பை வளைத்து மதனிரதி
இந்தீ வரக்கணையை ஏற்றிநின்ற பாவினையோ 203

நல்லநிறச் செண்பகத்தை நாசிக்கு உவமையெனச்
சொல்லில்விழி வண்டுரெண்டு சோடிருக்க மாட்டாதே 204

ஒப்பிட்ட காதுக்கு உவமைவள்ளை யென்றுசொன்னால்
கொப்பிட்டிளை யோர்மனத்தைக் கொள்ளையிட மாட்டாதே 205

வண்ணக் கபோல மதனிரதி பார்க்கவைத்த
கண்ணாடி என்றால் கலந்தணைக்க மாட்டாதே 206

முருக்க மலரிதட்கு முற்றுவமை யாயுரைத்தால்
மருக்குலவு மோதளப மாமுகையும் தாராதே 207

மந்தரமத் திமதார வரைமூன்று பெற்றிசைக்கும்
கந்தரம் பொலிந்தக் கமுகுக் கிசையாதே 208

காம னபிசேக கனககும்ப மீதிலணி
தாமமெனும் தோளைச் சரியுவமை காணேனே 209

---

199. சைவலம் - ஒருவகை நீர்ப்பாசி.

200. திலதம் - பொட்டு.

202. குலைசெயிவிழி (சு.வே.) குரும்படக்க (சு.வே.)

203. காமனின் மலர்க்கணைகள் ஐந்தனுள் ஒன்று இந்திவரம் (நீலோற் பலம்.)

206. கபோலம் - கன்னம்.

207. மலரிதட்கு-மலர் இதழுக்கு;முற்றுவமை-முழுவதுமாக உவமைகூறுதல், வினை, பயன், மெய், உரு எனும் நான்கும் பொருந்தி வந்தால் முற்றுவமை என்பர்.

208. கமுகுக் கிரையாதே - சுவடிவேறுபாடு.

கனதந்தி பெற்றமுன்னங் கைக்கிணை நான் சொல்வதற்குக்
கனதந்தி யாழின் காம்புமிணை யாகாதே 210

பாரில் கரவீர பத்திரமென் றங்கைவிரல்
ஆரு முவமை சொன்னால் அமுதநிலை காணாதே 211

பாவியற்றும் செந்தமிழோர் பண்பாய் அரிவரியை
நாவியற்றி வந்தபின்பு நாற்கவியும் பாடுதல்போல் 212

பாளை முகில்விரியாப் பைங்குரும்பை யைப்படைத்து
தாளமது நீர்க்குமிழி தன்னைப் படைத்தறிந்து 213

சீதவன சத்தரும்பைச் செவ்விளநீ ரைப்படைத்து
மாதுரதி மதனன் மணிமுடியைத் தான்படைத்து 214

தங்கக் குடத்தைச் சமைத்ததிலே கைதேறி
மங்கைக் கழகான மாமுலையைச் செய்தானோ 215

மேருமுடி யிரண்டை மின்னே உமதுதிரு
மார்பினிலே வைத்திருக்கு மலராணி யின்கறுப்போ 216

பச்சைமயில் நாக படத்தைக் கிழித்தாடும்
மச்சமுருங் காம ரூபிக்கங் கானதுபோல் 217

செல்லும் கரடிபுலி சிங்கத்துக் கஞ்சேன் நான்
கொல்லும் உமதுமுலைக் குஞ்சரத்துக் கஞ்சிநின்றேன் 218

ஆசைமத யானைநெஞ்சில் அடங்காமல் கொம்பிரண்டு
வீசியதன் கையைஉந்தி மேன்மடுவில் நீட்டியதோ 219

முன்னமத ராசன் முனிக்குறும்பர் தன்மனத்தைப்
பின்னிமுலைத் துரகம் பிணைத்திழுக்கும் பாவினையோ 220

எல்லாம் படைத்தஅயன் இடையில்மறந் தானெனவே
நல்லதொரு நாராசம் நடுநிறுத்தும் பாவினையோ 221

---

210. கனதந்தி - யானை; இசைக்கருவி.

211. கரவீரபத்திரம் - அலரித்தளிர்.

212. அரிவரி - அரிச்சுவடி

218. சொல்லும் - பா. வே. ; குஞ்சரம் - யானை.

219. மதயானை - பா. வே. விந்தி - பா. வே.

220. முனிக்குரும்பர் - சு. வே,

221. நாராசம் - இருப்பாணி, குறுக்குச்சந்து.

வந்த வலஞ்சுழியும் காரலையச் சுழியும்
உந்திச் சுழிக்குநிகர் ஒப்பாக மாட்டாதே 222

அந்தக் கடல்சுழிவீழ்ந் தனுமனள விட்டெறிந்தான்
உந்திச்சுழி யின்பெருமை ஒருவருக்கும் கூடாதே 223

தங்க மெருகிட்டுத் தருங்கீரை வித்ததனை
அங்கிறைத்த தோரோம மங்குதித்த தோஅறியேன் 224

அரசிலை யீதென்பர் ஆர வடம்என்பார்
வரையாத பொன்னால வட்டமிது தானுமென்பார் 225

சிறுமான் குளம்படியைச் செப்பலாம் செப்புதற்கு
அறல்போல குறிஞ்சித்தேன் அதிலூற மாட்டாதே 226

மோக சமுத்திரத்தில் மூழ்கிடுவோர் நீந்துகைக்கு
ஆகத் துணைதெப்ப மாமாங் குறங்கிரண்டும் 227

வாரணம்சேர் மன்மதனார் மணிமுகப்பில் நாட்டியபொன்
தோரணம்சேர் வாழையெனச் சொல்லில்மெது வாராதே 228

சீதைதனைக் கண்டேன் திண்ணமிது வென்றுசொன்ன
தூதன் வெருவுந் துலங்கலவ னோமுழந்தாள் 229

யெக்காளம் போல எழில்கெண்டைக் காலிரண்டுந்
தக்க மதன்முதுகில் தான்கட்டாத் தூணியோ 230

கடசல்மெரு குஞ்சிறந்த கடமறக்கா லோகணைக்கால்
அடவாய் இதற்குவமை யார்க்குந் தெரியாதே 231

---

222. - 223. 'சுழி' என்பதற்குப் பதிலாச் 'சுளி' என்றே வந்துள்ளது.

223. அளவிட்டெறிந்தான் - எல்லை கடந்தான்.

227. ஆகத்தனை (என்றே பாடம்) - உடலுக்குத் துணை; குறங்கு-துடை.

228. மன்மத மாளிகையின் மணிமுகப்பில் அமைக்கப்பட்டிருக்கும் பொன் தோரணவாழை என்று துடையைச் சொன்னால், துடையில் உள்ள மென்மை அதில் இல்லை என்பதாம்.

229. தூதன் - அநுமான்; சீதையைக் கண்டு இராமனிடம் கூறியவன். அலவன் - நண்டு:

'கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்' கம்ப. சுந்தர.

230. எக்காளம் - ஓர் ஊதுகுழல்; தூணி - அம்புக்கூடு;

மீதான கெண்டைவிழி விட்டேறித் தன்னிழலை
வாதாடி நின்ற வராலிணைக ளோபிறந்தாள் 232

இரதியும் மதன்மார்பில் எறிந்துவிளை யாடுதற்கு
விரைகமழும் பூப்பந்தை வீக்கிவைத்த தோகுதிகால் 233

வையகத்தில் மாமுனிவர் மாதவங்கள் இவ்வளவென்று
அய்யமற நிறுக்கும் அறிவுத் தராசிதுபோல் 234

செய்யவடி காமக்கலை சேர்த்தெழுது பொத்தகத்தை
அய்யமற வேதனுமக்கு அமைத்துவர விட்டானோ 235

ஒத்தைவிரல் தோறுமுகிர் ஒருமதிபோ தாதென்று
பத்துமதி வேதன் படைத்துவர விட்டானோ 236

தன்சாயல் ஒப்புவமை தந்தமயில் உம்முடைய
பின்சாயலுக் கஞ்சியல்லோ பிணிமுகமாய்ப் போனதுவே 237

பின்னழகைக் கண்ட பிரமனவன் இன்னமுமே
அன்னம் இறங்காது அலமந்து இருந்தானே 238

முன்னழகு பார்க்கவர முக்கண்ணார் மோகமுற்றே
அன்னமலை மகளுக்கு அஞ்சுதலை கொண்டானே 239

தன்னந் தனியே தனித்திவ் வனத்தில்வர
அன்னமே நான்முன் அருந்தவத்தைச் செய்தேனோ 240

## வேண்டுதல் விடுதல்

மாயத் திரிகரண மவசஞ்செய் தீரோர்வார்த்தை
காயத்திரி மந்திரமோ கட்டுரைத்தால் ஆகாதோ 241

---

232. பிறந்தாள் - புறந்தாள், புறம் கால்

235. பொஷ்த்தகத்தை (சு. வே.)

236. ஒத்தைவிரல் - ஒற்றைவிரல்

236. உகிர்-நகம்; பத்துமதி-பத்து நிலவு; வேதன்-படைப்புக் கடவுள்.

238. அன்னம் இறங்காது - சாப்பிட முடியாமல்; அன்னமிறங்காமலம வந்திருந்தானே, அன்னமிறங்காதலம வந்திருந்தானே - பாட வேறுபாடுகள்.

239. மோகமுற்றே என்பது 'ஐயமுற்றே' என்றும் வேறொரு சுவடியில் காணப்படுகிறது. அன்ன மலைகளுக்கு-என்றும் பாடம்.

241. திரிகரணம் – மனம், வாக்கு, காயம் என்ற மூன்று கருவிகள்; அவசம்-மயக்கம், பரவசம்; காயத்திரி மந்திரம் - காலை, நண்பகல். மாலை முதலிய மூன்று நேரங்களில், சைவர்களும் வைணவர்களும் வழிபடும் போது சொல்லுவது.

TAMIL NADU STATE ... OF ARCHAEOLOGY, MADRAS
LIBRARY
Date

செப்புகந்த மாதனத்தைச் சேர்ந்துநான் சேவித்தால்
தப்பாம லந்தத் தனுக்கோடி யாடேனோ 242

மோகவிடாய் தீரவுந்தன் முகமது தந்தாக்கால்
தேகமெல்லாம் பொற்பணியைச் செய்துமிகப் பூட்டேனோ 243

மாலெனச்செய் தாலென்னை மலையும் பிடிப்பித்து
ஆலிலையின் ஊடே அரவஅணை தாரீரோ 244

அன்னநடை மானேவுன் அரைக்காணி யாட்சிதந்து
மன்னுபண்ணைப் பார்க்க வரவழைத்தீ ராமானால் 245

கோலமிகு சரியாக கொண்டைதனித் துய்யமல்லி
வாலாய்ச் செந்தாளை வளமாய் விளைவேற்றி 246

வள்ளைக் குடிக்கே வளமான சில்லறையிற்
கல்லுவெள்ளை முத்துவெள்ளை கட்டிவைத்துப்
பாரேனோ 247

**காமப்பயிர்**

சேர்ந்தகண் வாய்க்கெல்லாம் சிவந்தசொல்லைக் கட்டிவைத்து
ஏய்ந்தக முகவட்டம் எல்லாம்பூம் பாளையிட்டு 248

நாகமங் கலக்குழத்தி நாணடவு தான்ஏற்ற
வாகான பூமங்கலம் வரிசையாய் விடுத்து 249

---

242. தனுக்கோடி - 1. இராமன் சிவபூசை செய்வதற்காகத் தன் வில்லின் நுனியால் கண்ட நீர்நிலையுடைய இடம்.
2. உடல்.

243. மோகவிடாய்-காமதாகம்; பொற்பணி - பொன் அணிகலன்கள்.

244. இரட்டுற மொழிதலாக அமைந்துள்ளது. 1. திருமாலாகச் செய்தால், அவருக்குரிய இருப்பிடங்களாகிய மலையையும், ஆலிலையையும் பாம்புப்படுக்கையையும் தாரீரோ. 2. மயக்கமுறச் செய்து எனக்கு மலைபோன்ற மார்பகத்தையும், ஆலிலை வயிற்றையும், அரவுஆகிய அல்குலையும் தாரீரோ.

245. 'மேலவைத் தெருவில் ஒருமடமும் காணியாட்சியும் கொடுத்த அளவுக்கு' (S.I.I; 124); பண்ணை - பெரும் நிலம், காடு.

246. துய்யமல்லி - நான்கு முதல் ஆறு மாதங்களில் விளையக் கூடிய சம்பா வகை.

247. வள்ளைக் கொடிக்கே - காதினைக் குறித்தது.

249. குளத்தி. (சு.வே.) நாணடவு - நடவு நடுதலைக் குறித்து வந்திருக்கலாம்.

உடம்பிடிக்கை விதையை உள்தரிசு போடாமல்
நெடுங்கண் சொரிகுரும்பை நெருங்கப் பிடித்துநட்டு 250

முந்துகின்ற வாய்க்கால் முதுநீர் ஒதுக்கிமிகு
வந்தநீர் பாய்ச்சி வளர்போகம் காட்டேனோ 251

அந்தஅரை மானிலத்தில் ஆறிரண்டு பூவிளைய
வந்து பயிரேற்றி மனமகிழ்ந்து பாரேனோ 252

## கன்னிமான்வேட்டை

மெய்யாகவே மிருக வேட்டைக்கு வந்த என்னை
செப்பமுடன் மான்வேட்டை செய்யவரச் சொன்னீரால் 253

ஆசைவலை கட்டியபின் அம்மலையிற் கைவகுத்து
நேசமுடன் கலவை நேரே முடிப்பிவித்து 254

பதிவதனில் காலாள் பதித்தமைத்து மேல்மிகவும்
அதிய குரலெழுப்பி அங்கங்கே ஊடாடி 255

இப்படியே வேட்டை இயல்பாகத் தான்முடித்து
செப்பமுடன் சோமகிரி மானைவசஞ் செய்யேனோ 256

## கூடல் அதிகாரம்

தேனே யுமதங்க தேசம் முழுவதற்கும்
தானே அதிகாரம் தந்தீரே யாமானால் 257

---

250. சொறிகுரும்பை. (சு.வே.), குரும்பை - தெங்கு, பனைகளின் இளங் காய். இதனைப் பெண்களின் மார்பகத்திற்கு உவமை கூறுவர்.

'குன்றும் குரும்பையும் வெறுத்தநின் னிளமுலை' (கல்லா. 52, 8.)

251. போகம் - 1. விளைவு, 'போகந்தரு சீர்வயல்' (தேவா. 70, 3.)

2. புணர்ச்சி இன்பம்; 'புணர்முலையார் போகத்தே மையலுற' (திருவா. 51, 3.)

252. அரைமா நிலத்தில் - 1. (அளவு) 50 குழி நிலம். 2. அவையல்கிளவி யாகிய அல்குல்.

254-256. இரட்டுற மொழிதலாக, வேட்டைக்கும், புணர்ச்சிக்கும் உரிய வாகப் பாடப்பட்டுள்ளன.

ஆசைவலை - வேட்டைவலை, மயக்கவலை; கலவை - கலைத்தல், கலவி; காலாள் பதித்தமைத்தல் - வலையைப் பூமியில் பதித்தல், புணர்ச்சியில் காலால் அழுத்தல்; அதிய குரல் எழுப்பல் - கலைக்கக் குரல் எழுப்புதல், கலவியில் குரல் எழுப்புதல்; ஊடாடுதல் - நடுவேதிரிதல், கலந்து பழகுதல்.

257. யுமதங்க தேசம்-உமது உடல் ஆகிய நாடு.

257 - 269. நாட்டை ஆட்சி செய்வதற்கும், பெண்ணைக் கூடுதற்குமாக இரட்டுற மொழிதலில் அமைந்துள்ளன.

கோலகொண்டை கட்டியகை கொள்ளாத் தளம்வகுத்து
பாலையகாட் டுக்குடனே பாளையமாய் வந்திறங்கி 258

சிந்துரங்க ளெல்லாம் சேரச் சரிபார்த்து
தந்தபவ ழக்காடு தனில்தாகச் சாந்திசெய்து 259

கண்ணங் குடியாற்குக் கடமை சிலதெழுதி
அண்ணுவள்ளை யூராற்கு அடையோலை யும்கொடுத்து 260

கண்டனூர் கட்டிக் கைகலக்கும் வேளையிலே
தண்டமிழ்சேர் தென்னன் தனிக்கூடல் உள்ளடக்கி 261

கொண்டலுறை சேரமான் கொங்கைவிடா மற்பிடிக்க
அண்டி யிடையபட்டி யார்துவண்டு தானிருக்க 262

கலையநல்லூர் வாங்கக் கனகோபம் உண்டாகி
மலையாமல் அத்தலத்தார் வந்தெதிர்க்கும் வேளைதனில் 263

காற்பெலத்தால் ஊரதனைக் கைவசமாய் செயித்தபின்னும்
மேற்பிலஞ்செய் யாமலதில் மேலுபரி யாய்நடத்த 264

பரிபுரத்தின் மேலொலியும் பாதசா லத்தொனியும்
கரிகரத்தின் சாதகத்தைக் கையிகந்து செய்கையிலே 265

உபரிசம ரீதியோ ரிக்கைஒரு வற்கொருவர்
அபரிமித மாக அனேகதளஞ் சூழ்ந்திருக்க 266

---

258. பாலையம் - பதினாறு வயதுக்குட்பட்ட பெண் ; பாளையம்-சேனை.

259. காட்டிற்தனிற் (சு. வே.) சிந்துரம் - சிந்தூரம், பொட்டு ; பவழக் காடு - இதழ்கள், உதடு; தாகச் சாந்தி - நீர் வேட்கை தணித்தல்.

260. கண்ணங்குடியார்க்கு - கண்களுக்கு, கண்ணங்குடியினர்க்கு; கடமை - ஒப்புரவு, இறை; அண்ணுவள்ளையூரார்க்கு - அருகில் உள்ள காதுகளுக்கு, அருகில் உள்ள வள்ளையூரினருக்கு; அடையோலை - காதோலை, அடமானப் பத்திரம், சாசனம்.

261. கண்டனூர்-1. சோழனூர், 2 கழுத்து; கைகலக்கும் நேரம்-1. போரிடும் நேரம், 2. புணரும் நேரம்; கூடல்-பாண்டியன் தலைநகர் - புணர்தல்.

262. கொண்டலுரை-சு.வே. கொண்டல்-மேகம்; கொங்கை-1, கொங்கு நாட்டை, 2. மார்பகத்தை; இடையபட்டியார் - 1. இடையப்பட்டி ஊர் மக்கள், 2. இடை.

263. கலையநல்லூர்-1. ஊர், 2. சீலை, உடை.

264. காற்பெலம் - கால்பலம்-1. நாலில் ஒரு பங்கு வலிமை, 2. காலினுடைய வலிமை; மேற்பலம்-மேல்பலம். பிலம் - 1. பாதாளம், கீழறை, 2. வளை.

265. பரிபுரம் - காற்சிலம்பு; பாதசாலம் - காலணி வகைகளுள் ஒன்று; கரிகரம் - கலவி விளையாட்டில் ஒன்று.

266. உபரி-மேல்; ஓரி –சேர்ந்து; சமநீதி-சமமாக.

*அளகா புரியாரை யட்டத்தி லேயொதுக்கி*
*களபமத யானைரெண்டுங் கைவசமே செய்துகொண்டு* **267**

*தானா பதிமுகமாய் சந்தோஷ மாய்ப்பேசி*
*ஆனசமா தர்னமா மனையார் செய்திடவே* **268**

*சட்டநவ சட்டஞ் சரிசரியா மென்றுசொல்லி*
*அட்டமின்னார் வாழ்த்த அதிகாரஞ் செய்யேனோ* **269**

**காமச் சதுரங்கம்**

*அரங்கிலே சிம்மா சனத்திலெனை யேற்றிநிச*
*துரங்கம்விளை யாடவரச் சொன்னீரே ஆமானால்* **270**

*ஒருகுதிரை விடுத்து உள்ளாட் பெலத்தாலே*
*பெருகு சகட்டடியில் பிசகாம லேநிறுத்தி* **271**

*முந்திபரி பிந்தாமல் முற்பெலமும் பிற்பெலமும்*
*தந்திதனை நெறிக்கிச் சகட்டடியில் தள்ளிவந்து* **272**

*உரமாய் மருகுதிரை ஓடிவரக் கண்டேநான்*
*அரசுசொல்லிக் குத்தியிரண் டானையுங்கைக் கொள்ளேனோ*
**273**

## தும்பிக்கு அழைப்பு ஏன்?

*இத்தனைநே ரந்தனியே யானுரைக்க வோர்வார்த்தை*
*அத்தி மலர்சொரிந்த தாமென்ன வேசொரிந்தால்* **274**

---

*267, அளகாபுரி - 1. ஓர் ஊர்*
*2. பெண்களின் தலைமுடி.*
*அட்டத்திலே ஓதுக்கி - 1. பகையால் ஒதுக்கிவைத்து.*
*2. மேல் பகுதியில் ஓதுக்கி வைத்து.*
*களபமதயானை - 1. யானை. 2. கொங்கை.*

*268. தானாபதி - 1. தூதன், படைத்தலைவன்; 2. அரசர்க்கும் அவர் தேவிக்கும் இடை நின்று செய்தி அறிவிக்கும் அந்தப்புரத்துத் தூதி.*

*269. சட்ட நவசட்டம் - முழுவதும், 'நான் சட்டவும்மை மறக்கினும்' (தேவா, 586. 1); அட்டமின்னார் - 1. எண்திசையில் உள்ளவர்கள்; 2. பெண்கள்.*

*270-273. சதுரங்க விளையாட்டிற்கும், புணர்ச்சிக்கும் பொதுவாய் அமைந்து இரட்டுற மொழிதலாக வந்துள்ளன.*

*270. சதுரங்கம் - ஒரு விளையாட்டு, நால்வகைச்சேனை.*

*272. முந்திபரி - முன் செல்லும் குதிரை; தந்திதனை - 1. யானையை 2. கொங்கையை; நெறிக்கி - நெருக்கி.*

பங்கே ருகத்தேன் பருகவரும் வண்டினுக்கு
எங்கேனு மோலை யெழுதி விடுவதுண்டோ 275

சாயரெட்சைத் தேடும் சகோரம்போல் யான்வருந்தும்
காயரெட்சை செய்யக் கடனுனக்குக் காரியங்காண் 276

## அடையாமல் போவேனோ

பதிமானின் பின்றொடர்ந்து பார்த்துவரும் வேளைதனில்
மதிமானைக் கண்டால் மருவாமல் போவேனோ 277

கனமான வர்கள்முன்னே கலாபமது செய்யாதே
வனமீதில் வந்த மயிலைவிட்டுச் செல்வேனோ 278

வேங்கைமல ரானாலும் மென்சுரும்பு வந்ததனில்
ஆங்கமரும் தேனை அருந்தாமல் போவதுண்டோ 279

கந்திருவர் கல்லியாணங் கார்யானை மன்னர்தொழில்
இந்தப் படிநடந்தால் ஏந்திழையே சோபனங்காண் 280

## அறிமுகம்

சோம வதனமெனுந் தோகைமயி லேயெனையுஞ்
சோமகிரி வேந்தனென சொலத்தான் அறியீரோ 281

## மலர்த்தவிசின் மேலே மன்மதவிழா

நாந்தக வாள்வீர நகுலன் குமாரலிங்க
சாந்தன் ரதிவேள் சதுரன்வனத் தில்நின்றே 282

சொன்ன தசோகத் தொடைபோல் தேடமிகவும்
அன்னவளுந் தான்மயங்கி அயலார் அறியாமல் 283

---

275. பங்கேருகம் - தாமரை.

276. சாயரெட்சை - மாலைப்பொழுது: சகோரம் - நிலா முகிப்புள் செம்போத்து; காயரெட்சை - உடல்நோய் தணிக்க.

278. கலாபம் - கலகம்; பாத்துவரும் - பார்த்துவரும்.

280. சோபனம் - மகிழ்ச்சி, சுபம்.

281. சோம வதனம் - நிலவு முகம்.

282. நாந்தகவாள் - திருமாலின் வாள். ‘நாந்தகஞ் சங்கு தண்டு’ (திவ். பெரியா. 4). சதுரன்-சமர்த்தன். ‘சதுரன் பெருந்துரையாளி (திருவா. 43, 10) தொடை - மாலை.

சோமகிரி வேந்தன் தோகைமயில் பெண்ணரசி
வாமக் கரத்தை மலர்ச்செங்கை பற்றுதலும் 284

நாண மடமச்சம் பயிர்ப்பென்னும் நால்வகையால்
காணி யெனுமந்தக் கணிசங் கடந்துநின்றாள் 285

மந்தாரை பிட்சி மல்லிகையும் செண்பகமுஞ்
செந்தா மரையிதழுஞ் சேர்த்த மலர்த்தவிசில் 286

இந்திரனுக் கிந்திராணிபோ லெங்கோன் குமாரலிங்க
சந்திர னதிரூப ரேகையெனும் தையலுடன் 287

ஏகாந்த மாக இருந்து குழல்முடிக்கே
வாகான காவின் மலர்வகையெல் லாம்முடித்து 288

நீரில் கரைத்த நிறைகுங்கு மக்குழம்பை
பூரித் திருமாந்த பூண்முலைக ளிற்பூசி 289

கற்பூரம் ஏலம் கலவைச் சுருள்பருகிச்
செப்புமுலை யழுந்தச் சேர்ந்தணைத்து முத்தமிட்டு 290

ஆலிங் கனமைந்தும் அருந்தாட னங்களெட்டும்
கோல நகதந்தக் குறிகாண வேசுவைத்து 291

பட்டாடை யைநெகிழ்க்கப் பாவைமட நாணமச்சம்
விட்டாள் மதனன் விழாவை நடத்திடவே 292

காண வகையுங் கண்டத்துப் புள்ளொலியும்
வாவு பரிசெய்ய மதிமுகத்தில் வெயர்வரும்ப 293

---

284. வாமக்கரம்-இடது கரம் 'வாமத்தாண் மேல்வர வலத்தான்மேனின்று' (திருவாலவா. 32, 8.)

285. காணி - ஒரெண், ஒன்றில் எண்பது பங்கு கொண்டது. கணிசம்- அளவு.

286. மலர்த் தவிசு - மலர்ப்படுக்கை.

287. அதிரூபரேகை - தலைவி.

288. ஏகாந்தமாக - தனியாக.

290. சுருள் - வெற்றிலைச் சுருள்.

291. தந்தம் - பல்; ஆலிங்கனம் ஐந்து - எட்டு என்று வடமொழி நூல் கூறும். ஆமோதா, முதிதா, பிரேமா, ஆனந்தா, ருச்யா, மதநா, விரோதா, லிங்கனங்களாகும்; தாடனங்கள் எட்டு - சங்கோசம், பக்கத்தம், பிரசுரிதம், முட்டி, கீலம், கர்த்தரிகை, சந்தங்கிசம், வித்தை.

293. புணர்ச்சியின்கண் மெய்யில் தோன்றும் வேறுபாடுகள்.

தண்டை யொலிகுமுற சரிவளைகள் ஓலமிடக்
கண்டிதழ்த்தே னுண்டுமுலைக் காம்புநெரு டிச்சுவைத்து 294

முந்தக் கரணம் முயற்சியொரு வற்கொருவர்
அந்தக் கரணமிரண் டொன்றா யழுந்திவர 295

கற்பகத்தைச் சுற்றிவரு காமவல்லி கொடிபோல
மெய்ப்பரிவும் ஒப்பரவும் வேறுதெரி யாமலங்கே 296

முன்னந்தி நேரம் முறுக்கவிழும் முற்பலம்போல்
என்ன அரைவிழிக்கொண் டின்சொலுரைப் பாதியுமாய் 297

ஆவலொன்ற நேமமொன்ற ஆசையொன்ற வெயர்வைமுந்த
மேவுபஞ்ச பாணதுங்கன் வீறடங்க ஆகமொன்றி 298

இந்தரதி கேளியிலே இருவருட லுந்துவண்டு
வந்தயிந் திரபோக வாரியிலே தான்மிதந்தார் 299

மகராலை யத்திலுறை மாலும் திருவுமெனச்
சுகபோக வெள்ளமதில் தோய்ந்துகரை யேறினபின் 300

சோமகிரி வேந்தன் சுனைநீ ரளாவியபின்
தாமக் குழலாளும் தாமும் தனித்திருக்க 301

**அரசனைத் தேடி**

அந்தமான் பின்னேகும் அந்தம் பாகண்டனுட
செந்தா மரையடியைச் சேனைதளம் பற்றிவந்தே 302

சீதை மணம்புணரச் சென்றசீரா மர்தன்பால்
மாதளங்கள் சென்றதுபோல் மாசேனை வந்தார்கள் 303

கன்னாவும் பூரிகையே காளமதிர் பேரிகையும்
மன்னன் குமாரலிங்க மகாராசன் காதில்விழ 304

---

294. தண்டை - காலணி.

297. உற்பலம் - குவளை மலர்.

298. பஞ்சபாணதுங்கன் - மன்மதன்.

299. யீந்தாதி - சுவடிவேறுபாடு; போகவாரி - இன்பக் கடல்.

300. மகராலயம் - பாற்கடல், கடல்; மாலும்திருவுமென - திருமாலும், திருமகளும் என.

302. பாகண்டன் - ஆடம்பரமானவன்.

304. கறன்னா என்றும் பாடவேறுபாடு; கன்னா - ஒருவகை வாச்சியம்; பூரிகை - ஊதிப்போதல்; காளம் - சிறுசின்னம்.

சந்தனப் பூஞ்சோலை தன்னிலந்த மின்னைவைத்து
வந்த தளத்தெதிரே மகாராசன் சென்றணுகி 305

நேயமலர்க் காவைவிட்டு நேர்ப்படக்கண் டோர்முகங்கள்
தாய்முகத்தைக் கண்டுமகிழ் சந்ததிபோ லானதுவே 306

## பட்டணம் நோக்கிப் பல்லக்கில் அரசன்

வல்லமைப்பிர தானிதுரை மக்கள்தள கர்த்தர்வர
பல்லக்கி லேறியய்யன் பிரதாபா விபோல்விளங்க 307

மக்கள் மருமக்கள் மன்னியவார் தன்சேனை
பக்கம் வரவெறிசைப் பட்டணத்துக் கேமுகமாய் 308

சேர்ந்த கயிலாச நாதரிரு சேவடியை
ஆய்ந்தசெண் பகச்செல்வி அம்மனையும் தான்பணிந்து 309

மாலை திருநீறு வாங்கித் தரித்தபின்பு
வேலவர்மேல் தியானம் விடாமல் நடந்துவர 310

அந்தமிகு பத்திரகேசம் அம்பாரி வைத்தேறி
இந்திரனைப் போலே யெழுந்தரு ளும்போது 311

நாகசுர மொத்து ரதிமே ளத்துடனே
காகளமும் பேரிகையும் கடல்போற் குமுறிவர 312

கட்டியத்தார் பின்னே கனசந்தம் விலக்கி
மட்டவிழுஞ் சோமகிரி மன்னா பராக்கென்றும் 313

சுத்த ரனதீர வுரிகோல சுரதாண
நத்தம் விளங்குசந்திர ராவுத்த மிண்டர் 314

---

305. தளம் - கூட்டம்.

307. பிரதானி - அமைச்சர்; 'திகழ்வடுக நாததுரை மெச்சும்பிர தானி' (தனிப்பா. i, 260) தளகர்த்தர் - படைத்தலைவர்; 'காலமுந் தன்பலமு மெண்ணியிகல் வென்றிடக் கருதுவோன் தள்கர்த்தனாம்' (திருவேங். சத. 8). பிரதாபாவி - பிரதாபி, பெருமைக்குரியவன்.

308. மன்னியவார் - மதிக்கத்தக்கவர்.

310. தியானம் - சிந்தனை (பிங்.)

311. பத்திரகேசம் - யானை; அம்பாரி - யானையின்மேல் பொருத்தப் பட்டிருக்கும் இருக்கை.

312. ரத்திமேளத்துடனே என்றும் பாடம்; காகளம் - எக்காளம்.

313. கட்டியத்தார் - கட்டியம்கூறிப் புகழ்வோர்.

314. அரசப்பட்டங்கள், கட்டியங்கள்; சுரதாண - சுல்தான், அதிபதி; ராவுத்த மிண்டர் - குதிரை வீரன்.

அங்க கலிங்க காஷ்மீர வாதிபத்திய
துங்க வகளங்கர் சோமயெச் சரிக்கையென்றும் 315

மண்டல துரங்கசது ரங்கரண மார்த்தாண்ட
மண்ட லிகர்கண்ட மன்னா பராக்கென்றும் 316

கேகய விராடதேச கேசரிய தானவத
மாகதச வுறாட்டறவுக்கிற மன்னா பராக்கென்றும் 317

ரஞ்சித விலாச வளிதா பராக்கென்றும்
கஞ்சுகியார் கைப்பிரம்பின் கைநீட்டிச் சொல்லிவர 318

வெண்கவரி பஞ்சவர்ண வெட்டுப்பா வாடையொடு
பண்குமரி மின்னார் பாதமுறை யாடிவர 319

வளைநெகிழ வோடி வருவார் சிலமடவார்
தழையவிழுங் கோதை சரியவரு கன்னியரும் 320

கண்ணும் மனமுங் காவலர் பால்விடுத்தே
வண்ணமுலைக் கன்னியர்கள் வாய்வெருவி நிற்பாரும் 321

ஏழையர் வார்த்தைசெவிக் கேறுமோ மேனியெல்லாம்
மாலையுருக் கொண்டோமே வாருமெனச் சொல்வாரும் 322

மல்லல்புய மன்னன்மேல் மாலான மங்கையர்தம்
மெல்லிதழ்மேற் பற்பதித்து மெய்மறந்து நிற்பாரும் 323

ஒருமானை வேட்டையிலே ஓடித் தொடர்ந்துவரும்
பெருமானைக் கண்டுபின்னே பெண்மா னனேகம்வர 324

---

315. ஆதிபத்தியம் - உரிமை, அதிகாரம்.

316. துரங்க-குதிரையையுடைய; சதுரங்க - நால்வகைப்படையையுடைய; ரணமார்த்தாண்ட - போரிலே கதிரவனைப் போன்ற; மண்டலிகர் - சிற்றரசர்; கண்ட - வென்ற.

317. கேகயம்-ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்றானதும் சிந்து தேசத்துக்கு அருகில் உள்ளதும் ஆகும்.

விராடம் - ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்றானதும், தற்போதைய பீகார் மாநிலப் பகுதியுமாகும்; கேசரிய – சிங்கம் போன்றவன்.

318. ரஞ்சித விலாசாவளிதா-வீரமும் அழகும் உடையவன்; கஞ்சுகியார்- அந்தப்புரத்துக் காவலர்கள்.

319. பஞ்சவர்ணம் - ஐந்து நிறம்; வெட்டுப்பாவாடை - நடனமாடும் பெண்களின் உடை; பண்குமரி - பாடும் மகளிர்.

320–324. உலா இலக்கியங்களில் சொல்லப்படும் காட்சிகள் இடம் பெறுகின்றன.

322. மாலையுரு - மயங்கிய உருவம்.

323. மல்லல்புய - வலிமை நிறைந்த புயம்.

கானிலொரு மானோடக் கண்டு தொடர்ந்தய்யன்
வேனில்கணைக் கஞ்சியமான் வெருண்டுவரப் பாராமல் 325

மலைமான் இளையகன்றை மனவலையாற் சிக்கவைத்த
பலமானது பிடித்துப் பத்திரகேசம் விட்டிறங்கி 326

மாணிக்கத் தூணும் வயிரத்தாற் போதிகைமேல்
ஆணிப்பொன் னாற்சமைத்த அரமனையின் உட்புகுந்து 327

**பூங்காவில் சிற்றிடையாள்**

மன்னன் குமாரலிங்க மகராசன் இங்கிருக்கத்
தென்னங் குரும்பைமுலைச் சிற்றிடையாள் பூங்காவில் 328

மானபரன் மன்னன் குமார லிங்க
தீன தயாபரனைத் தேடிமனம் வாடி மின்னாள் 329

தேடிப் பரிதவித்தாள் திகைத்தாள் மதிமயங்கி
மோடியோ வென்றாள் முலைமுகட்டில் முத்துதிர்த்தாள் 330

கண்டாள் உருவளியைக் கமலமலர் தாளிறைஞ்சிக்
கொண்டாள் அடியேன் குறைபொறுக்க வேணுமென்றாள் 331

காணாள் அருவழியைக் கண்டாள் உருவிலியை
நாணேறு பூங்கணையி னாலும் பறந்துவர 332

செப்புறாக் கொங்கைரெண்டுஞ் சிங்கார மன்மதனுக்கு
அப்புறாத் தூணியது வாக்கினாள் அப்போது 333

---

325. துடந்து - (சு. வே); வெரண்டு (சு. வெ); வேனில் கணை - காமனின் அம்பு, காதல் நோய்.

326. பத்திரகேசம் - யானை.

327. போதிகை - குறுந்தூண், பருந்தூண்.

329. மானபரன் - தன்மதிப்பு உள்ளவன்; 'மானபரனுக்கு மரியாதை மேனினைவு' (குமரேச சத. 9); தீன தயாபரன் - வறியவர்க்கு அருளுபவன்.

330. மோடி - வஞ்சகம்.

முலை முகட்டில் முத்துதிர்த்தாள் -

'காலாயுதக் கொடியோன் கையாயுத விழியால்
மாலாயுத மீன்ற மாமணியைத் தானுதிர்த்தாள்' (கூளப்ப.)

332. உருவிலி - காமன்; பூங்கணை - காமனின் அம்பு; பரந்து வர - பா. வே.

333. செப்புறா - சிமிழ் போன்ற; அப்புறாத்தூணி - அம்புக்கூடு.

நொந்தாள் பரிதவித்தாள் நுண்ணிடைதன் னாடிமனம்
நைந்தாள் உளம்வெதும்பி னாள்மெழுகு போலுருகி 334

காபாலி மாற்றான்தன் கையில் கொடிவழியே
மாபால ராயுதத்தின் மாமணியை வாரியிட்டாள் 335

## நெஞ்சொடு புலம்பல்

மானும் மரையினமும் வல்லியமும் சொல்லார்கள்
கானவரே யென்னாசைக் கானவரைக் காணீரோ 336

பொன்னவரைக் காவிற் பொருந்துவரைச் சோமகிரி
மன்னவரை யென்னை மணந்தவரைக் காணீரோ 337

காதலரைக் காவகத்திற் கலந்தகலக் கண்டிருந்த
தோதகத்திக் காறுதலை சொல்லாமல் போவாரோ 338

அஞ்சாம லென்மனசை யனல்மெழுக தாயுருக்கி
விஞ்சையர் கோன்என்னை மேவிப் பிரிந்தானோ 339

மதிமயக்கி யென்னை மலர்க்காவில் சேர்ந்தகலுஞ்
சதிகார ரென்றுமுன்னே சற்றறிந்தால் சம்மதியேன் 340

மேவிப் பிரியமனம் வேறொன்று வைத்தவர்தான்
காவகத்தி லென்னைவந்து கைகலக்கக் காரியமேன் 341

மாதுவள்ளி பாகன் மகிழ்ந்தருளும் சோமகிரி
யாதிபனே யென்னை யணைந்தல்லா லய்யமுண்டோ 342

தன்னெஞ்சி லென்னைத் தள்ளிவிட்ட காதலவர்
என்னெஞ்சுக் குள்ளேவந் திருந்துகொள்ளாக் காரியமேன் 343

---

335. காபாலி - சிவன்; மாற்றான் - காமன்; கொடி - மீன்கொடி, விழி மாபாலர் ஆயுதம் - சங்கு; மாமணி - முத்து, கண்ணீர்.

'காலாயுதக் கொடியோன் கையா யுதவிழியால்
மாலா யுதமீன்ற மாமணியைத் தானுதிர்த்தாள் (கூளப்ப, 262.)

336. மரையானம் - காட்டுப் பசுக்கள்.

338. தோதகத்தி - நான்கு சீர்களும் முதலெழுத்து ஒன்றிவரின் முற்று மோனை என்பர் இலக்கண நூலார்.

'காதலியைக் கானகத்தே கைவிட்ட காதலன்' —நளவெண்பா.

339. விஞ்சையர்கோன் - இந்திரன்.

341. மேவி - கூடி.

342. மாதுவள்ளிபாகன் - முருகன்.

பெண்ணாசை யாலும்நம்மைப் பேதை கலந்திருந்த
தெண்ணாததெல் லாமெண்ணி யேங்குவளென்
றெண்ணாமல் 344

ஆவியொன்றாய்க் கூடி அகல்வார் எனவறிந்தால்
மேவுதற்கு முன்னே விரைந்தாணை கொள்ளேனோ 345

சற்று மிரங்காத தன்மனது போலுமெண்ணி
யிற்றையிராத் தனியே யிருக்கநான் வல்லவளோ 346

நத்தமதி லென்னாளும் நான்பிரியே னென்றுதனி
வைத்துப் பிரித்தால் வலுவே வழக்கலவோ 347

**தேடிவந்த பாங்கியர்கள்**

இவ்வா றுரைத்தே இவள்புலம்பி மெய்சோர
வெவ்வேறு காவின்மலர் விரைந்தெடுத்த பாங்கியர்கள் 348

முற்றா முகிண்முலையை முளரித் திருவரசைக்
கைத்தாயர் ஓடிமலர்க் காவெல்லாம் தேடிவர 349

மலைத்தார் கணப்பொழுது மலர்க்காவா மல்லவென்று
சிலைக்காமன் அம்பேறுஞ் செல்வியைக்கண் டோடிவந்தார் 350

ஒருகை தலைகீழும் ஒருகை முலைமேலும்
பெருகு கலைநெகிழும் பேதைதனைக் கண்டவுடன் 351

தியக்கமோ நித்திரையோ சேடியரைக் காணாத
மயக்கமோ தெய்வகுறை வந்ததுதான் இங்குமுண்டோ 352

மனதைப் பிறம்போக்கி வருங்கவலை யுள்ளாக்குங்
கனக முலையாளைக் கையால் எடுத்தணைத்து 353

கலையும் வளையும் கனபணியும் தான்திருத்தி
சிலைநுதலில் வெயர்வையெல்லாஞ் செங்கையினா லேதுடைத்து
354

347. நத்தம் - வனத்தில்; 'பெண்கொடி யேபிரி யேன்றரி யேனிற் பிரியினுமே' (த.கோ, 23)

349. முளரித் திருவரசு-தாமரையில் வீற்றிருக்கும் திருமகள்; கைத்தாயர் - வளர்ப்புத் தாயர்.

351. கலை நெகிழும் - ஆடை நெகிழும்.

352. தியக்கம் – அறிவுக் கலக்கம்; நித்திரை - உறக்கம்.

353. பிறம் - புறம்; கனகம் – பொன்.

354. கனபணி - பொன் அணிகலன்.

வெற்றிலையால் வீசி வெயர்துடைக்க நெட்டுயிர்த்துச்
சிற்றிடையாள் மூர்ச்சை தெளிந்தேங்கி யேயிருந்தாள் 355

கோட்டுமலர் சூடியதும் கொங்கை நகக்குறியும்
காட்டியொரு வற்கொருவர் கைச்சன்னை யாற்பேசி 356

கைநெறித்துப் பாங்கியர்கள், கால்பதறிக் கைபதறித்
துய்யகள்ளி செய்தவகைச் சூதறிந்தோ மில்லையென்று 357

## வீட்டிலே

பாங்கியர்கள் எல்லோரும் பாவைதனைக் கைலாகில்
தாங்கிவள விற்கொடுபோய்ச் சய்யயிலே தாவளர்த்த 358

மாமயிலைக் காமசுரம் வருத்த வருந்தியவள்
பூமலைமேல் முத்துவடம் பொரிந்துசுண்ண மானதுவே 359

பன்னீரும் வென்னீராய்ப் பட்டீரப் பொடியாகும்
தண்ணீர்மை கண்டு சகிமார் மனந்தளர 360

பருதிகதிர்ப் பாயும்வெண்ணை பாவைநிகர் மேனியெல்லாம்
உருவிலியான் அம்புருவி யோடவிவள் உள்ளுடைந்தாள் 361

## தோழியரிடம் புலம்பல்

தத்தையனை யார்கள்செய்யுஞ் சயித்தியவுப சாரமெல்லாம்
வைத்தகா மாக்கினிக்கு வனசமிதை நெய்யாச்சே 362

செந்தழலின் கட்டியைநீர் திரட்டிக் குழைத்தெடுத்துச்
சந்தனமீ தென்றீர் சதிமானஞ் செய்தீரே 363

பூங்கணையை மெத்தையின்மேல் போதென்று நீர்பரப்பும்
பாங்கியரே நீங்கள் பழிகாரர் ஆனீரே 364

---

355. நெட்டுயிர்த்து - பெருமூச்சு விட்டு.

356. கோட்டுமலர் - மரத்தில் உள்ள மலர்.

357 கைநெரித்து - பாடம்.

358. கைலாகில் - கைத்தாங்கலில். வளவில் - வீட்டில்; சய்யயிலே - மென்மையான படுக்கையிலே.

361. உருவிலி - காமன்.

362. தத்தை-கிளி; தமக்கை; சயித்திய உபசாரம்-குளிர்ச்சிதரும் முறைகள்; காமாக்கினி-காம நெருப்பிற்கு.

363. சதிமானம்-வஞ்சனை.

தாவிவ்ரும் புலியைச் சாளரத்தை நீர்திறந்து
மேவுமிளந் தென்றெலென்றீர் நிஷ்டூரஞ் செய்தீரே 365

வெள்ளை நெருப்பை வெண்ணிலவென் றென்னுயிரைக்
கொள்ளையிட விட்டீர் குடிலமிகச் செய்தீரே 366

யிங்குமொரு வேப்பங்கா யின்சாந்தை நீர்பிழிந்து
பொங்குபா லென்றுதந்தீர் பொய்யும் படித்தீரே 367

அந்தி நிலவென்றார் அதுகேட்டு உளநடுங்கி
இந்தநில வில்லா விடந்தேடு மென்றதற்கோ 368

சிலமண் டபமாடச் சித்திரக்கூ டம்மிருக்க
நிலவரையை நீர்செய்து நெஷ்ட்டூரஞ் செய்தீரே 369

மாதுநல்லீர் இப்போதென் மாமுலைமேற் பூசியிடு
கோதிலாச் சந்தனமுங் குங்குமமும் பன்னீரும் 370

பைந்தமிழைப் பாடிப் பரிசுபெறா மல்திரும்ப'
வந்த கவிஞர் மனம்போலக் கொதிக்குதென்றாள் 371

## தாய் வினாதல்

இருந்து புலம்பும் இவள்வருத்தம் எல்லாம்போய்த்
தரும்தாயர் முன்னுரைக்கத் தாய்வெருவி யோடிவந்தாள் 372

வந்து மகளை வாரி யெடுத்தணைத்துக்
கொந்தார் குழலாள்மெய்க் குறியை யறிந்துகொண்டாள் 373

வாதசுரம் பித்தசுரம் மற்றுமொரு துன்பமல்ல
காதல்மிஞ்சிக் கன்னிகைக்குக் காமசுரம் மீறுதென்று 374

சீறி யுடன்போன சேடியர்மேல் கண்சிவந்து
தூறினாள் செங்கைவிரல் துண்டமேல் வைத்திருந்தாள் 375

பூவார் குழலாளைப் பூங்காவில் அங்கொருவர்
மேவி யணைந்ததுங்கள் வித்தைகளைச் சொல்லுமென்றாள் 376

---

367. 'பாலும் கசந்ததடி பஞ்சணையும் நொந்ததடி
கோலக் கிளிமொழியும் காதில் குத்தல் எடுத்ததடி' —பாரதியார்.

369. நெஷ்ட்டூரம்-நெட்டூரம் கொடுமை-'நெட்டூர சூரசங்கார' (திருப்போ. சந். சின்னகம். 1, 3.)

374. வாதசுரம்-வாதம்பற்றியெழும் காய்ச்சல்; பித்தசுரம்-பித்தக்காய்ச்சல்.

375. தூறினாள்-சடையைப்பற்றி இழுத்தல், திட்டுதல்.

### தோழியரின் பதில்

தேங்கமழுஞ் சோலையிலே சென்று தனித்தனியே
யாங்கள்மலர் கொய்ததுவும் அன்னந்தனி யானதுவும் 377

சந்தேக மாகித் தடம்பார்க்க ராசர்தடம்
வந்ததடம் நின்றதட மாத்திரம்நான் கண்டதுண்டு 378

பூமிபுகழ்ச் சந்திரகிரி பூபன் குமாரலிங்க
சாமி காந்தைமலைச் சாரலிலே வேட்டையென்றார் 379

துடிமுழக்க மல்லாரி தொனிமுழக்கம் பேரிகையும்
வெடியுஞ் சரவேகி வேட்டுநான் கேட்டதுண்டு 380

கற்பனையுங் காரியமும் கள்ளிசெய்த காருடச்
சற்பனையுங் கண்டாயே சந்திரவதிப் பெண்ணரசே 381

### தாயின் புலம்பல்

தாமன் குமாரலிங்க சாமி மலைச்சாரல்
பூம மெனது பூங்கரும்பை விட்டிடுமோ 382

கமல மலர்ந்தால் கானுறையும் வண்டினுக்கே
அமரும் பிரச மருத்தா திருப்பதுண்டோ 383

தேவரிலுந் தாயிற் சிறந்ததில்லை யென்றறிந்து
மாவினையாள் என்னை அறியாமல் மேவுவளோ 384

பூவில் மடவார்க்குப் புருஷரே தெய்வமென்று
காவியங்க ளெல்லாமுன் கற்றுணர்ந்தோர் சொல்லுதலால் 385

---

378. ராசதடம். சு. வே.

380. துடிமுழக்கம்-உடுக்கை எனும் பறைவகை; மல்லாரி-பறைவகை.

381. காருடம் - வித்தை; சற்பனை - சர்ப்பனை - வஞ்சனை, 'சாமங்க டோறு மிவர் செய்யும் பூசைகள் சர்ப்பனையே' (பட்டினத், பொது. 44)

382. தாமன்-கதிரவன்; பூமம்-காமன், அரசன்.

383. பிரசம்-தேன்; அருத்தாது-அருந்தாது.

384. 'தாயிற்சிறந்ததொரு தெய்வமும் இல்லை'
'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'

385. புருஷர்-புருடர்-கணவர்; காவியங்களாவன,
'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள், (குறள்),
'சோமகுண்டஞ் சூரிய குண்டந் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொருநாள்
ஆடுதுமென்ற அணியிழைக்கவ் வாயிழையாள்
பீடன் றெனவிருந்த பின்னரே' —சிலம்பு. கனாத்திறம்-59-64

கன்னிகையார் மன்னவர்சொல் கடவா திருந்தாலும்
மன்னவனா ரென்னையல்லால் மணப்பதுவுங் காரியமோ 386

குரவர்பிழை செய்தாலும் குவலயமெல் லாம்காக்கும்
அரசர்பிழை செய்தாலும் ஆர்குற்றம் என்றுசொல்வார் 387

பூவலரிற் கண்டபிழை பொருத்துவார் நன்னூலாற்
காவலரிற் கண்டபிழைக் காராலுங் கூடாதே 388

கல்லாரம் பூத்தசுனைக் காந்தைமலைச் சாரலுக்கே
செல்லாதே யென்றுசொன்னேன் சேயிழையாள்
கேட்டாளோ 389

பேய்க்கும்பேச் சாடுதுணை பெற்றபிள்ளை தானலவோ
தாய்க்கீழ்ப்பெண் ணானயிவள் தன்மூப்பாய்ச் செய்வ
துண்டோ 390

கண்ணரசை வேம்பு கலந்ததுபோல் நானீன்ற
பெண்ணரசை வாயெடுத்துப் பேசயினிக் கூடாதே 391

புதியமணங் கொண்டுவரும் பூவை யெடுத்தவளோ
புதியமணங் கொண்டுவரும் பூவை மகிழ்ந்துவந்தாள் 392

கந்தரருள் பெற்றோன் காமகலை லாடசிங்கி
வந்ததுரை யென்று மயக்கி யறியாளோ 393

அண்ணல் குமாரலிங்க அய்யன்மயல் கொண்டபெண்கள்
எண்ண முடியாதென் றிவள்கேட் டறியாளோ 394

செய்யமலர் கொய்துவரும் சேடியரெல் லாமிருக்க
மையமருங் கண்ணாளை மகிழ்ந்தணைந்து கூடியதும் 395

தெய்வச்செய லார்க்குந் தெரியாது தானிவ்ளை
வைத்து விறுதாவில் வாயெறிந்தும் ஆவதுண்டோ 396

---

387. குரவர் - தலைவர், பெற்றோர்.

388. நண்ணூலாற் - சு. வே.

389. கல்லாரம் - செங்கழுநீர்.

390. பழமொழி.

392. புதிய மணம் - 1. புது மணம், நறுமணம் 2. திருமணம்.

396. விறுதாவில் – விருதா, வீணாக. 'விருதா வலைந்துழலு மடியேன்' (திருப்பு. 102); வாயெறிந்தும் - பேசியும், திட்டியும்.

பாருக்கு ளெனையறியப் பண்ணவில்லை யென்பதல்லால்
ஆருக்கும் இதுசம்மதமோ அரிவைசெய்த காரியந்தான் 397

தங்கத்தி லேவயிரந் தான்பதித்து வைத்ததுபோல்
மங்கைக்கு வாய்த்த மணவாள னேயவராம் 398

என்னதவஞ் செய்தேனோ யென்னபூ சாபலமோ
கன்னிகையாள் செய்தெறிசைக் காவலரைக் கைகலந்தாள் 399

மெல்லிநல்லாள் காவில் விரைந்துமலர் கொய்திடப்போய்
நல்லபுட்ப ராக ராசரெத்தினம் கொண்டுவந்தாள் 400

சென்றாடுந் தீர்த்தமெதிர் வந்தாடப் பெற்றதுவும்
மன்றார் குழலாள்முன் மாதவங்கள் செய்தாளோ 401

## வாழ்த்துரை

இன்சொல் மகளை யெடுத்தணைத்து முத்தமிட்டு
அஞ்சாதே யோகம் அநேகம் வருகுதென்றாள் 402

சங்கநிதி யானயேறு தாதுலிங்க மீன்றெடுத்த
துங்கன் குமாரலிங்க சுமுகனைக்கூ டிச்சுகித்தே 403

தங்கச் சிவிகையினித் தானேறி வாழ்ந்திருந்து
பங்கமில்லா மைந்தர் பதினாறும் பெற்றிரென்றாள் 404

## வரிசைவரல்

மோகந்த விழ்க்கவரு மோகமின்னார் சூழ்ந்துவர
மாகனகத் தண்டிகையும் வந்திறங்கக் கண்டாளே 405

---

399. பூசாபலன் - பூசைசெய்த பயன்; கைகலந்தாள்-கூடினாள்.

400. புட்பராகம் - ஒன்பது மணிகளுள் ஒன்று; ராசரெத்தினம்-இராசரெத்தினம், முதன்மையான மணி.

401. தீர்த்தம் - நீர்நிலை.

402. யோகம் - அதிட்டம், ஆகூழ். 'யோகநாள் வந்ததென்று' (கம்ப. இராமா, பாலகா. 10); அநேகம் - பல.

403. சங்கநிதி-குபேரனது ஒன்பது நிதிகளுள் ஒன்று; துங்கன் - உயர்ந்தோன். 'அபிமான துங்கன் செல்வனைப் போல' (திவ். திருப்பல். 11); சுமுகன்-இன்முகம் உள்ளவன்; சுகித்து-இன்பம் அனுபவித்து.

404. சிவிகை-பல்லக்கு, 'சிவிகை பொறுத்தா னோடு' (குறள், அறன்.) சிவிகையில் தானேறி. பா.வே

405. மாகனகத் தண்டிகை - பொன்னாலான பல்லக்கு வகை. 'பொற்றண்டிகை திரள்தாங்க' (சூளா. கல். 23)

மாலை யரவிந்த மலர்வதனப் போது
காலையர விந்தமெனக் கண்டாளே காரிகைக்கு 406

மாதுநல்லாள் பூண மணிப்பணிகள் அத்தனையும்
தாதரும்புங் குழலைத் தானே அலங்கரித்தாள் 407

தண்டிகை யில்ஏறிச் சாமி குமாரலிங்க
மண்டலிகர் கண்டனெனு மன்னனைக்கூ டிச்சுகித்தே 408

அந்த வசிஷ்டன் அருந்ததியைப் போல
இந்திரனிந் திராணியைப்போல் என்னாளும் வாழ்ந்திருந்தாள் 409

ஆனினங்கள் வாழிமறை அந்தணர்கள் வாழியவே
மானபர னானசில்ல வார்குலமும் வாழியவே 410

காவலவன் தென்னெறிசைக் காதிபன் குமாரலிங்கம்
பூவுலகில் வாழிவெண்பாப் புலிதமிழும் வாழியவே 411
பார்வாழி தென்னெறிசைப் பார்த்திபன் குமாரலிங்கந்
தார்வாழி வாழியவன் சந்ததிகள் வாழியவே 412

குமாரலிங்கவேந்தன் காதல் முற்றும்

---

406. மாலை அரவிந்தம் - மாலைநேரத் தாமரை குவிந்திருப்பது வாட்ட முற்ற தலைவியின் முகத்திற்கு உவமையானது; காலை அரவிந்தம் - காலைநேரத் தாமரை மலர்ச்சியுற்றிருப்பது மகிழ்ச்சியடைந்த தலைவியின் முகத்திற்கு உவமை யானது.

407. மணிப்பணிகள்-மணிகள் இழைக்கப்பட்ட அணிகள்.

408. தண்டிகை-பல்லக்கு வகை; மண்டலிகர் - அரசர்; கண்டன் - வீரன்; சுகித்து - மகிழ்ச்சியாக அனுபவித்து.

409. வசிஷ்டன் - வேதகால முனிவர்களுள் ஒருவர்; அருந்ததி-வசிட்டரின் மனைவி. கற்புடைப் பெண்களுக்கு வழிபாட்டிற்கு உரியவள்.

410. ஆனினங்கள் - பசுக்கள்; மானபரன்-தன்மதிப்பு உள்ளவன். சில்ல வார்குலம்-வேடர் குலம் (சது.)

412. பார்வாழி - உலகம் வாழ்க; தார்வாழி-அரசன் மார்பில் அணிந்துள்ள மாலை வாழ்க; சந்ததிகள் - வழித்தோன்றல்கள்.

சிவகங்கை

# இராசேந்திரபூபதி காதல்

# சிவகங்கை இராசேந்திரபூபதி காதல்

## உள்ளடக்கம்

(எண்கள்—கண்ணிகளின் எண்கள்)


| | |
|---|---|
| காப்பு | |
| அவையடக்கம் | 28 |
| பாட்டுடைத்தலைவன் | 32 |
| கோட்டையும் கொடியும் | 40 |
| ஆற்றலும் அருளும் | 55 |
| அறக்கட்டளைகள் | 70 |
| அரசுச் சுற்றமும் அமைச்சும் | 82 |
| காலைக்கடமைகள் | 88 |
| ஒப்பனைகள் | 90 |
| கொலுவிருத்தல் | 96 |
| வேட்டையில் நாட்டம் | 98 |
| வேட்டைக்குப் புறப்படுதல் | 103 |
| கொடிகளும் பகைவர்களும் | 110 |
| வீரர்களின் விருப்பம் | 116 |
| வேட்டைக்கருவிகள் | 122 |
| காட்டிற்குள் வேட்டை | 125அ |
| வேட்டையில் விழுந்த விலங்குகள் | 130 |
| மானைத் தொடரும் மன்னன் | 148 |
| சோலையின் அழகு | 151 |
| பூங்காநோக்கிப் பூவையர்கள் | 163 |
| பூப்பறிக்கப் புறப்படுதல் | 186 |
| தலைவியின் ஒப்பனைகள் | 189 |
| தோழியர் கூட்டம் | 207 |
| பூங்காவில் பூவையர்கள் | 215 |

| | |
|---|---|
| பூவெடுத்தல் | 217 |
| கோட்டுப்பூ கேட்டல் | 225 |
| மாதவிப் பொதும்பரில் | 233 |
| காட்சி | 235 |
| ஐயம் | 236 |
| துணிவு | 238 |
| குறிப்பறிதல் | 240 |
| வேட்கையால் வேண்டுதல் | 276 |
| பெண்வேட்டை | 279 |
| சொல்வலை வேட்டுவன் | 284 |
| தான்தற்புகழ்தல் | 310 |
| மல்லிகைப் பூம்பந்தலின் கீழ் | 313 |
| மன்னனைத் தேடி | 328 |
| நினைந்தவள் புலம்பல் | 331 |
| மொய்குழலைத் தேடி | 350 |
| பார்த்துப் பதைபதைத்தார் | 353 |
| வீட்டிலே | 361 |
| தலைவியின் புலம்பல் | 365 |
| தாயின் புலம்பல் | 370 |
| தோழியர் கூற்று | 374 |
| தாயின்மகிழ்ச்சியும் ஏசலும் | 380 |
| வாழ்த்துரை | 404 |
| சித்திரமணிப் பல்லக்கில் | 408 |
| மகனுக்குத் தாயானாள் | 411 |
| வாழ்த்து | 414 |
| பின்னிணைப்பு | ... |

# சிவகங்கை இராசேந்திரபூபதி காதல்

## காப்பு

வாலமதன் போதகுரு மன்னவரா சேந்திரபூ
பாலன்மேற் காதலையாம் பாடவே-கோலமிகு
கங்கையணி வேணிக் கடவு ளருள்கருணைக்
கங்கை சுதன்பதமே காப்பு.

மணிகொண்ட கொண்டல்மணி வண்ணன் அருள்சேர்சொன்
மணிகொண்ட போதகுரு மன்னவன்மேற் காதலுக்கு 1

பாட்டா லுயர்ந்தமுது பாரதப்போர் தன்னை முன்னோர்
கோட்டாலோர் கோட்டெழுதுங் குஞ்சரன்பொற்
றாள்துணையே 2

எண்டிசையின் மன்னர்பணிந் தேத்தக் கொலுவிருக்கும்
மண்டலிகன் போதகுரு மன்னவன்மேற் காதலுக்கே 3

அந்திமதி வேணி யரனார் அளித்ததொந்தித்
தந்திமுக னுக்கிளைய சண்முகனே முன்னடவாய் 4

நாளும் மனுமுறையால் ராச்சியபரி பாலனஞ்செய்
வாழ்வீமன் போதகுரு மன்னன்மேற் காதலுக்கே 5

---

1. வேணி - சடை; கங்கைசுதன் - கங்கை மகன், முருகன், விநாயகன்.
2. குஞ்சரன் - விநாயகன்.
'வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக வங்கூர் எழுத்தாணிதன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ'
—வில்லிபுத்தூரார்-மகா பா., கடவுள் வாழ்த்து, ப. 2
3. மண்டலிகன் - அரசன்.
4. அந்திமதிவேணி அரனார் - பிறை சூடிய சிவன்.
5. வாள்வீமன் - பாடவேறுபாடு.

வான்முக டளாவுமொரு வர்ணமணிக் கோபுரஞ்சூழ்
கானையில்வாழ் செல்வர்திருக் காளைலிங்கர் தாள்துணையே 6

கார்கொண்ட கோட்டிபுரக் கண்ணனருள் பெற்றுவளர்
தார்கொண்ட போதகுரு சாமிமேற் காதலுக்கே 7

பரிவாய்நின் றாழ்வார் பதினெண் மருஞ்சொல்
திருவாய் மொழிகொண்ட தேவன்மலர்த் தாள்துணையே 8

குருபுங்க வன்பரவு கோட்டிபுர மேல்வந்
தருளுஞ் சவுமியநா ரா்யணர்பொற் றாள்துணையே 9

பூமேவு கோகனகப் போதி லரசிருக்கு
மாமேவு போதகுரு மன்னவன்மேற் காதலுக்கே 10

தென்னவன்முன் கல்லானை தின்னக் கரும்பீந்த
முன்னவனாஞ் சொக்கலிங்க மூர்த்திபதங் காப்பாமே 11

---

6. கானை - கானாடு; வெள்ளாற்றுக்குத்தெற்கே உள்ள பகுதி. சங்க காலத்தில், 'கானப்பேரெயில்' என வழங்கிவந்திருக்கிறது. திருக்கானப்பேர் என்றும் பாடல் பெற்றிருக்கிறது. சுந்தரருக்குக் காளைவடிவாக இறைவன் காட்சி தந்த தலம். மதுரைக்குக் கிழக்கே 62 கி.மீ தொலைவில் உள்ளது.

காளைலிங்கர் : இத்திருக்கானப்பேர் எனும் ஊர் 'காளையார் கோயில்' என்றும் வழங்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள இறைவர் கானக்காளையீசுரர் என்றும், காளைலிங்கர் என்றும் அழைககப்படுகிறார். கதிரவன், ரத்தினம் கொண்டு வழிபட்ட கடவுள்.

7. கோட்டிபுரக் கண்ணன் - இது திருக்கோட்டியூர் என்று அழைக்கப் படுகிறது. இங்குள்ள கண்ணனை,

'செற்றம் ஒன்றும் இலாத வண்கையினார்கள் வாழ்திருக் கோட்டியூர்த்
துற்றி ஏழுலகு உண்ட தூமணி வண்ணன்'

என்று பெரியாழ்வார் போற்றுவதை முதலாயிரத்தில் காணலாம்.

9. குருபுங்கவன் - திருக்கோட்டியூர் நம்பி, ஆளவந்தார் திருவடி சம்பந்தி. சவுமிய நாராயணர் - திருக்கோட்டியூரில் உள்ள திருமாலின் பெயர்.

10. கோகனகப்போது - செந்தாமரைப்பூ.

11. தென்னவன்முன் கல்லானை தின்னக் கரும்பீந்த கதை:-
அபிடேகப் பாண்டியன் முன் சிவனே மானுட வேடம் கொண்டு, மதுரைக் கோவிலில் நின்ற கல்லானைக்குப் பாண்டியன் கையிலிருந்த கரும்பை அருத்திய கதை.

'... கடாக்கல் யானை
மடைக்கண் திறந்து மதமூன்றும் வழிய விண்வாய்
அடைக்கும் படிவாய் திறந்தார்த்துப் புழைக்கை நீட்டித்
தொடைக்குன் றனான்கைச் சுவைத்தண்டைப் பறித்த தன்றே'

திி. வி. பு. கல்லானை. பா. 15.

காளிநிர்த்த மிட்டுக் களிப்பவந்த இராவணற்கோர்
வாளிதொட்ட போதகுரு மன்னவன்மேற் காதலுக்கே 12

மலயமுனிக் காய்த்தென் மணக்கோலங் காட்டி
யிலகுகொடுங் குன்றிறைவர் பாதங் காப்பாமே 13

தனுவேந் தயோத்தியர்கோன் தன்னையொப் பாய்வந்த
மனுவேந்தன் போதகுரு மன்னவன்மேற் காதலுக்கே 14

சென்றுபணி கமலச் செல்விக்காய்ச் சித்திரமணி
மன்றுனடஞ் செய்புத்தூர் வாசமலர்த் தாள்துணையே 15

கோற்கண்டன் போலக் குவலையமெல் லாம்புரக்கும்
மாற்கண்டன் போதகுரு மன்னவன்மேற் காதலுக்கே 16

நன்னிமலை யாவுடைய நாயகிதன் பங்கில்வளர்
கன்னிமலை மேவுங் கோளர்பதங் காப்பாமே 17

சுந்தர மிகுந்தபசுந் தோகையர்க்கெல் லாமதன்போல்
வந்தருளும் போதகுரு மன்னவன்மேற் காதலுக்கே 18

செங்கமலை நாளுஞ் சிறந்து குடியிருக்குந்
துங்கமலைக் கந்த சுவாமிபதங் காப்பாமே 19

---

13. மலயமுனி - அகத்தியர்; கொடுங்குன்று - பிரான்மலை.

14. சேதுநாட்டாட்சியைப் பெற்ற சேதுபதிகளை வைணவரெல்லாம் 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' யென்னும் முறையால் இராமனாகவும், இராமநாத மூர்த்தியாகவும் கருதிப் போற்றுதல் மரபாம். இதனை,

'சேதுபதி யென்றுநர சென்மமெடுத் தாய்கமல
மாது பதிக்குன்பேர் வாய்க்குமா - பூதலத்தில்
நீயே ரகுராமன் நின்னையே பெற்றெடுத்த
தாயே யருட்கோ சலை'

என வழங்கும் பழைய வெண்பாவானும்,

'ஆதிபதி யானமண்ட லாதிபதி வம்சபதி யரசர்க்கென்று
நீதிபதி சத்ரபதி சமஸ்தான பதிவிஜய நிறைந்தே நிற்கு
மாதுபதி துரகபதி கஜபதி நராதி பதிவளர்தென் றேவைச்
சேதுபதி தரிசனமே ராமலிங்க தரிசனமாச் செப்ப லாமே'

என்று வழங்கும் விருத்தத்தானும் அறியலாம்'

- ரா. இராகவையங்கார், சேதுநாடும் தமிழும், ப. 7.

15. புத்தூர் - திருப்புத்தூர்; சிவகங்கையிலிருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ளது.

கதிமருவு மெங்கள் சிவகங்கை யாதிக்க
பதிநீதி போதகுரு பார்த்திபன்மேற் காதலுக்கே 20

ஆவணநீண் மாடமதில் ஆலையம்பொற் கோபுரஞ்சூழ்
பூவணமேல் மேவும் புனிதர்பதங் காப்பாமே 21

இரவிகுலன் கெவுரிவல்ல வேந்திர மகாராச
வரசதுரன் போதகுரு மன்னவன்மேற் காதலுக்கே 22

அண்டரெல்லாம் போற்றவந்த ஆழியின்வாய் வாரிவிட
முண்டருளுஞ் சோழபுரத் துத்தமன்பொற் றாள்துணையே 23

கொந்துகொந்தாய் மன்னவர்கள் கொண்டுவந்து வேணதிறை
தந்துபணி போதகுரு சாமிமேற் காதலுக்கே 24

சிலைவாணி கற்குந் திருநுதற்கட் செல்வக்
கலைவாணி யுஞ்சத்த கன்னியருங் காப்பாமே 25

பாவலரும் அட்டதிக்கு பாலகரும் முப்பத்து
மூவர்களுஞ் சத்த முனிவர்களுங் காப்பாமே 26

வேணசித்தி தந்து விரும்பினரைக் காக்குநிறு
வாணஉக் கிரகால வயிரவர்பொற் றாள்துணையே 27

---

20. சிவகங்கை :- இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஒரு வட்டம், செம்மண் பூமி. வைகை ஆறு பாய்கிறது. சேதுபதிகளின் நாடு.

21. ஆவணம் - தேர்மொட்டு பொருந்திய பீடம்; பூவணம் - மதுரைக்கு அருகில் உள்ள சிவத்தலம்.

22. இரவிகுலன் - சூரிய குலத்தைச் சேர்ந்தவன்; சதுரன் - கற்றவன், நாகரிகன்,

23, அண்டர் - வானோர்.

25. கலைவாணி - கலைமகள்; சத்தகன்னியர் - அபிராமி, இந்திராணி, கவுமாரி, காளி, நாராயணி, மகேசுவரி, வராகி என்னும் ஏழு மாதர்கள்.

26. அட்டதிக்கு பாலகர் - எண்திசைக் காவலர்கள். இந்திரன் கிழக்கு; அக்கினி தென் கிழக்கு; யமன் தெற்கு; நிருதி தென் மேற்கு; வருணன் மேற்கு; வாயு வடமேற்கு: குபேரன் வடக்கு; ஈசானன் வடகிழக்கு. சத்த முனிவர்கள்-அத்திரி, ஆங்கீரசன், கௌதமன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன் என்றும், அகத்தியன், ஆங்கிரசன், கௌதமன் சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன் என்றும், அகத்தியன், ஆங்கீரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், சிவட்டன் என்றும், மரீசி, ஆங்கீரசன், புலவகன், வசிட்டன், அத்திரி, புலத்தியன், கிரது என்றும், காசிபன், அத்திரி, பரத்துவாசன், விசுவாமித்திரன், கௌதமன், சமதக்கினி, வசிட்டன் என்றும், பல வகைகளில் வரிசைப்படுத்துவர்.

## அவையடக்கம்

பூமி புகழும் புலவோர்முன் போதகுரு
சாமிமேல் காதலையான் சாற்றத் துணிந்ததுதான் 28

எவ்வித்தை யும்அறிவேன் என்றே நிலத்தினிடும்
அவ்வித்தை யேதான் அறிவித்த தொப்பாமே 29

வாரி யுவரகற்றி வையமெல்லாம் தானருந்த
மாரிநன் னீராக்கி வரிசிக்கும் வாறதுபோல் 30

கற்றகவி வாணரிந்தக் காதல்பிர பந்தமதில்
உற்றவழு வெல்லாம் உடனகற்றிக் கொண்டருள்வார் 31

## பாட்டுடைத்தலைவன்

தோடேந் துமைசிறுவன் றும்பிமுகன் போலமணிக்
கோடேந்தி நிற்குங் குளிர்பொதிய மால்வரையான் 32

பொன்னும் மணியும் புரிவளையும் பொற்கோடும்
மன்னுதலான் மாதவன்போல் மன்னுவையை மாநதியான் 33

கண்டுலகெ லாம்பரவக் கானமீரக் கண்டமொப்பாய்
மண்டலமே லோங்குசெல்வ வையைவள நன்னாடன் 34

அம்பொ னுலகுக்கும் அழகா யமைத்தரத்தினச்
செம்பொன்மணி மாடந் திகழ்குழந்தை மாநகரான் 35

கூறு மருவலர்கற் கோட்டை நெறுநெறெனச்
சாரியிட சாரிவல சாரிவரும் வான்பரியான் 36

தரியலர்தேத் தூடையங்கள் தத்தளிப்பச் சாரி
வருவிசைய கோர்உக்கிர வன்னலட்ச வா...ரியான் 37

கடல்கிழியப் பாயுங் கடும்புனல்போல் தெவ்வர்
குடல்கிழியப் பாயுமிரு கோட்டுமத குஞ்சரத்தான் 38

---

29. எல்லாவிதமான கலை(வித்தை)களையும் அறிவேன் என்று கூறிப் பின்னர் நிலத்தில் விதைக்கும் விதை (வித்தை)யை மட்டும் அறிவேன் என்பது போல.

30. வரிசிக்கும் - பொழியும்; கடல்நீரின் உப்புத் தன்மையை அகற்றி மேகம் நன்னீரை மழையாகப் பொழிவது போல்.

31. வழு - குற்றம்.

32. இது முதல் தசாங்கம் கூறப்பெறுகின்றது.

காமவெள் ளந்தன்னைக் கடப்பதற்கோர் வள்ளமெனத்
தேமுலையாட் கின்பஞ் செயுமுல்லை மாலிகையான் 39

## கோட்டையும் கொடியும்

படியிலிகல் தெவ்வர் பகையடக்கி வானக்
கடிமதின்மேற் கட்டுங் கருடப் பதாகையினான் 40

செகம்விளக்கு மெங்கோன் திருமுகப்பி னாளு
முகின்முழக்க மென்ன முழங்குமணி மும்முரசான் 41

ராசசிங்கம் போல்செனித்தே நாற்கடல்சூழ் நாற்றிசையுள்
தேசமைம் பத்தாறுஞ் செலுத்துகொடி யாணையினான் 42

விலையில் மணிகொளிக்கும் மேருவினும் மேலாய்
உலகமதில் ஓங்கி யுயர்நாலு கோட்டையினான் 43

பருந்தினுக்கும் பேய்க்கும் பகைவர்தனை வெட்டி
விருந்தளிக்குங் கோரவுக்கிர வீரவடி வாள்விசையன் 44

சாமி சமையமென்னத் தான்சொல்லு மென்றுசெம்பொன்
மாமகுட மன்னர்சிலர் வந்துநிற்கும் வாசலினான் 45

காதாடச் செம்பொன் கலனாட வண்டர்குழன்
மீதாடப் பொன்மான் விளையாடும் வாசலினான் 46

படைமுரசும் பார்புகழ்கல் லியாண முரசுங்
கொடைமுரசும் நின்று குமுறுமணி வாசலினான் 47

கொட்டமிடு மொன்னார் குடல்கிழியப் பாய்ந்துதுடை
தட்டியெதிர் செல்லும் தளநெறுங்கும் வாசலினான் 48

கலனிலங்கத் தண்டையிரு காலிலங்கப் பாய்மாக்
குலனிலங்க வேழக் குழாமிலங்கும் வாசலினான் 49

---

39. வள்ளம் - சிறு தோணி; மாலிகை - மாலை.

40 பதாகை - வெற்றிக்கொடி.

42. கெடி. பா. வே.

43. விலையில் - விலையில்லாத.

45. சமையம் - சமயம், நேரம் - மகிழ்வாக இருக்கும் நேரம்.

47. கல்யாணமுரசு - மங்கள முரசு.

48. தள நெறுங்கும் - படை நெறுங்கும்.

49. பாய்மா - பாயும் குதிரை.

அங்கத்தர்கல் யாணர்மலை யாளத் தரசருடன்
சிங்களரும் வந்துசலாஞ் செய்துநிற்கும் வாசலினான் 50

யானைத் திரளு மடுவாம் பரித்திரளுஞ்
சேனைத் திரளுந் திரளுமணி வாசலினான் 51

கொச்சியர் சீனர் குடகர்திறை கொண்டளக்கும்
வச்சிரமணிச் சோதி மணிமுகப்பு வாசலினான் 52

கொடிநெருங்கத் திங்கட் குடைநெருங்க மன்னர்
முடிநெருங்கக் கோடிதள முன்னெருங்கும் வாசலினான் 53

பொன்னும் மணியும் புனைகலனும் போற்றுதமிழ்
மன்னர்க் குதவு மணிமுகப்பு வாசலினான் 54

## ஆற்றலும் அருளும்

தேர்மேற் சினந்துவரும் தென்னிலங்கை ராவணனைப்
பார்மேல் துணியவொரு பாணம்விட்ட ராமபத்திரம் 55

அன்றுதன்சொற் கேளா அரவத்துவ சன்சமரிற்
சென்றுபஞ்ச பாண்டவர்க்குத் தேர்நடத்தும் வாலகிஷ்ண் 56

தெள்ளுதமிழ் வாணருக்குச் சிந்தா மணிபோலும்
வள்ளல்தனைப் போலுநிதி மாறா தளித்தருள்வோன் 57

நகில்வட்டப் பெண்கள் ரமணீ கனிந்த
அகிலவட்ட மெல்லாந்தான் ஆளப் பிறந்தசிங்கம் 58

---

50. கல்யாணர் - சாளுக்கியர், சலாஞ் செய்து - வணங்கி, கையை நெற்றியில் வைத்து வந்தித்து, 'குறவர் மகட்குச் 'சலாமிட்ற்' கேக்கரு குமரனை'

- மீனாட். பிள்ளைத். காப்புப். 4

'மாலயன் . . . . சலாமிடு' (திருப்பு. 189).

52. கொச்சியர் - சேரநாட்டின் ஒரு பகுதியினர்.

56. அரவத்துவசன் - பாம்புக் கொடியை உடையவனாகிய துரியோதனன்; வாலகிஷ்ண் - பாண்டவர்க்குத் தேரோட்டிய பாலகண்ணன்.

57. சிந்தாமணி - திருத்தக்கத் தேவர் இயற்றியது. படிப்போரின் சிந்தனைக்கெல்லாம் விருந்து அளிக்கும், சிந்திப்பவற்றை யெல்லாம் தரும் மணி என்பர்.

58. ரமணீகன் - வடமொழிச் சொல், அழகானவன்.

பானு மதியும் பனிவரையும் பாற்கடலும்
வானு நிலனுநிலை மாறினுஞ்சொல் மாறாதான் 59

அடுத்தோரை யெல்லாங்காத் தாதரிப்போன் மாரி
தடுத்தா னிரைபுரக்குந் தாமோ தரப்பெருமாள் 60

வேளைவென்ற முக்கண் விமலர் திருக்காளைக்
காளைலிங்க நாதரிரு கஞ்சமலர்த் தாள்பணிவோன் 61

மதித்தாம வேணி மகமேரு நேர்வந்து
எதிர்த்தாலு நெஞ்சம் அணுவேதும் அலையாதான் 62

கொண்டல் செறிமுத்தம் கொழிக்கும் திரைக்கடல்சூழ்
மண்டலம்போற் றுங்கெவுரி வல்லவமா லீன்றபுத்திரன் 63

மந்தர புயன்கெவுரி வல்லவரா சேந்திரனைச்
சொந்தத் துணைபடைத்த சோதரன் மகமேரு 64

சூரியகுல வங்கிஷ துரந்தரிகன் செம்பொன்மக
மேருவின்மே லேற்றுசுடர் போல்விளங்கு மெய்ப்புகழான் 65

தந்ததிருத் தாய்போல் சகல சனங்களையும்
வந்துலகிற் காக்கு மகிமைப் பிரதாபன் 66

அதுலன் குழந்தைக்கு அதிபன் அகளங்க
சதுரன் மதுரத் தமிழ்க்கருளு தாரகர்னன் 67

---

59. பானு - கதிரவன்; சொல்மாறாதான் - 'மாமறைநூல் பொய்த்தாலும் வாரிதிநீர் பொய்த்தாலும் சோமரவி பொய்த்தாலும் சொன்னமொழி பொய்யாதான்' - சுப்ரதீபக் கவிராயர் கூளப்பநாயக். ப. 16.

60. மாரி தடுத்து ஆனிரைபுரக்கும் தாமோதரப் பெருமாள் - கோவர்த்தனம் எனும் மலையைக் குடையாகக் கொண்டு இந்திரனின் கோபத்தினின்று ஆனிரையைக் காத்த கண்ணன். 'குன்று குடையா எடுத்தாய் குணம் போற்றி' - ஆண்டாள், திருப்பாவை. பா. எண். 24.

63. கெவுரி வல்லவன் - பாட்டுடைத் தலைவனின் தந்தை.

64. மந்தரபுயன் - மந்தர மலையைப் போன்ற தோள் (வலிமை மிக்கவன்) பாட்டுடைத் தலைவனின் சகோதரன்,

65. வங்கிஷ துரந்தரிகன் - பரம்பரையிற் சிறந்தவன்; பரம்பரையின் புகழை நிலைநாட்டுபவன்.

67. அதுலன் - தன்னேரிலாதான்; குழந்தைக்கு அதிபன் - குழந்தை மாநகரத்திற்கு அதிபன்; சதுரன் - கற்றவன், நாகரீகன்; உதாரகர்னன் - தயாளகுணம் உடையவன்.

மேவலரை வெட்டி விருதுகொண்ட சிங்கநம்புங்
காவலரைக் காக்குங் கருணை மகாமேரு 68

பரிதிகுல திலகன் பத்மா சனத்துள்
அர்சுபுரி திருப்பெண் ஆகம கலாதரன் 69

**அறக்கட்டளைகள்**

சத்திரங் கூபந் தடாகப்பிர திட்டைமுதல்
இத்தலமேல் முப்பத் திரண்டற மும்படைத்தோன் 70

வச்சிரமணி யம்பாரி வைத்தமத யானையின்மேல்
வச்சிரதரன் போற்பவனி வந்து கொலுவிருப்போன் 71

சிரகிரிதென் கூடல் சிதம்பரம் காளத்தி
அருணகிரி காசிதிரு வாரூர்குற் றாலமுதல் 72

ரர்மே சுரங்கானை நாகைகொடுங் குன்றுபுத்தூர்
பூமேல் விளங்குசிவ புண்ணியத் தலங்களுக்கும் 73

கொட்டிபுரம் அழகர் கோவில்சீ ரங்கமுடன்
இட்டமிகு விஷ்ணுதலம் என்னுந் தலங்களுக்கும் 74

பரங்குன்று செந்தூர் பழனிமலை தெவ்வர்
புரங்குன்றம் வெய்தசிலைப் புண்ணிற்கு மேகுருவாய் 75

நின்ற தலமுதலாய் நீலக் கலாபமயில்
வென்றி வடிவேலர் விளங்குந் தலங்களுக்குங் 76

காலைசந்தி மாலையுச்சிக் காலம்அர்த்த சாமம்விழாக்
காலமுமே தான்விளங்கக் கட்டளைகள் செய்தருள்வோன் 77

சொல்லில்அரிச் சந்திரனெனச் சொல்லுந் துரைகெவுரி
வல்லவரா சேந்திர மகாராசன் கண்மணியாம் 78

---

68. மேவலர் - பகைவர்கள்.

71. வச்சிரமணி - ஒருவகை இரத்தினம்; வச்சிரதரன் - வச்சிராயுதம் தரிப்போன், இந்திரன்.

72. சிரகிரி - 'தலமலை' யாக இருக்கலாம். 'தலைமலை கண்ட தேவர்' - மருதூர் அந்தாதி ஆசிரியர். அருணைகிரி - திருவண்ணாமலை.

73. நாகை - நாகப்பட்டினம், திருநாகைக்காரோணம்; கொடுங்குன்று - திருக்கொடுங்குன்றம், மதுரைக்கு வடகிழக்கே 67 கி.மீ. தொலைவு.

74. கொட்டிபுரம் - திருக்கோட்டிபுரம்.

பாங்குபெறு வென்றிப் பரசுராமன் கைவில்லை
வாங்கிநின்ற போதகுரு மன்னவரா சேந்திரதுரை 79

மகந்தழைக்க வந்த மனுகுல ராமன்போல்
செகந்தழைக்க வேயரசு செய்துவரும் நாளோர்நாள் 80

கதிரோன் இதன்பெருமை கண்டுசெம் பொற்கோட்டை
யிதுவோ யதுவோவென் றெண்ணுமணி மாளிகைமேல் 81

**அரசுச் சுற்றமும் அமைச்சும்**

உள்ளசே னாபதிகள் ஓங்குராய் சகராப்
பிள்ளைமா ரட்டவணைப் பிள்ளைமா ருஞ்சூழ 82

மிக்கமரு மண்டலிகர் மேவுதள கர்த்தருடன்
மக்கள்மரு மக்கள்துரை மக்க ளுடனிருப்ப 83

சீர்மையதி காரந் திட்டவட்டஞ் செய்யுமந்திரி
மார்கள் சகோதரர்கள் மைத்துனமார் தானிருப்ப 84

காசினியோர் யாவரையுங் காக்குந் தயாளகுண
தேசிகமய சிங்கரர் சிறந்தங்கு உடனிருப்ப 85

தம்பூரு வீணை சாமண் டலங்களுடன்
சம்பிரஞ்சேர் வித்துவப்பிர சங்கமுமே தான்முழங்க 86

மற்போர் மதகரிப்போர் வாரணப்போர் வாணர்புரி
சொற்போருங் கண்டு துதித்துமன மகிழ்ந்து 87

**காலைக்கடமைகள்**

சித்திதரு வைகைநதி தீர்த்தமது தானாடி
நித்திய வனுஷ்டான நியமத் தொழில்முடித்து 88

பந்து சனமும் பரிசனமுந் தற்சூழ
வந்து கனசட்டரச வற்கத் தமுதருந்தி 89

---

80. மகம் - யாகம், வேள்வி.

82. சேனாபதிகள் - படைத்தலைவர்கள்.

83. மண்டலிகர் - அரசர்; தளகர்த்தருடன் - படைத்தலைவருடன்.

86. சம்பிரம்-சிறப்பு; வித்துவப் பிரசங்கம்-அறிஞர்களின் சொற்பொழிவு.

87. வாரணப்போர் - சேவல்சண்டை.

88. நித்திய அனுஷ்டான நியமத்தொழில் - நாள்தோறும் செய்கின்ற செயல்கள், காலைக் கடமைகள்.

89. பந்துசனம் - உறவினர்கள்; பரிசனம் - சுற்றத்தார், சூழ்ந்திருப்போர்; வற்கத்து - வருக்கத்து.

**ஒப்பனைகள்**

செயமாதும் பொன்மாதுஞ் சென்றிருக்குஞ் செம்பொற்
புயமீது மார்மீதும் பூசுஞ்சவா துவாசமது 90

மட்டவிழுங் கற்பூர வாசமுடன் மாணிக்கத்
தட்டிலெடுத் தேந்துநறுந் தாம்பூலமு மருந்தி 91

மங்குல் இருளகற்றும் மாணிக்க மாமுகப்பின்
தங்கவரை ஞான சரிகையுடை மேல்தரித்து 92

குற்றுடைவாள் சேர்த்ததன்மேற் கொண்டுரத்தினம் இட்டிழைத்த
வெற்றிச் சமுதாடும் வீரவா ளுந்தரித்து 93

வச்சிரவோ னடிதாங்கி மணிமார்பிலங் கமாணிக்கப்
பச்சை வயிரம் பதிக்கும் பதக்கனிட்டு 94

திவ்வியநிதி போல்தமிழ்க்குத் தியாகம் சொரியுமலர்க்
கைவிரற்குத் தங்கக் கணையாழி யுந்தரித்து 95

**கொலுவிருத்தல்**

பைம்பொன்முடி மேற்கட்டிப் பாகுகட்டிப் பாரிலங்கச்
செம்பொன் உத்தரீகஞ் சிறக்கமேல் தான்அணிந்து 96

மங்காத வச்சிரமணி மண்டபத்துள் மாணிக்கச்
சிங்கா தனத்தரசு செய்துகொலு வீற்றிருந்தான் 97

**வேட்டையில் நாட்டம்**

வீற்றிருந்த வையனுமே வேட்டையின்மேல் நாட்டம்வைத்துக்
கூற்றிருந்த வேற்கைக் குமாரர்க்கு உரைக்கலுற்றார் 98

துன்றுமணிச் சிகரஞ் சூழ்பொதியச் சாரலின்வாய்
இன்றுகன வேட்டை யினியாட வேணுமென்றார் 99

அப்போது ஒருகெவுளி ஐயன்வலப் புறத்தில்
எப்போதுஞ் சொல்லும் இசைவினுக்கு மேதுடியாய்ச் 100

96. உத்தரீகம் - மார்பினும் முதுகிலும் அணியும் படங்கள் உள்ள இரு துணித்துண்டு.

100. கெவுளி - பல்லி.

சொல்லலுமே யங்கிருக்குஞ் சூட்சியுடை யோர்கேட்டு
நல்ல சவுனமிந்த ராசசவு னத்தினுக்கே 101

துயில்கணமா வன்றித் துணைமுலை மென்சாயல்
மயில்கணமான் சிங்க மருங்குனமான் கிட்டுமென்றார் 102

## வேட்டைக்குப் புறப்படுதல்

அவ்வேளை ஐயன் அகமகிழ்ந்து தானிரங்கிச்
செவ்வேளை யொப்பாய்ச் செல்வோம் பரியேறிக் 103

கோலமிகு சந்திரவட்டக் கொற்றக் குடைநிழற்ற
சால விருபுறமுஞ் சாமரைகள் வீசிவர 104

வெடிக்காரர் வாட்காரர் வேல்காரர் வெள்ளித்
தடிக்காரர் தங்கத் தடிக்கார ருஞ்சூழத் 105

தாரைசின்னங் கொம்பு தடாரிரண பேரிமுதல்
வாரியொலி பொற்பதினெண் வாத்தியமும் பார்த்துவர 106

வெட்டுப் பாவாடைசிலர் வீசிவர மஞ்சள்வர்ணக்
கொட்டுப் பாவாடைசிலர் கொண்டு முழக்கிவர 107

கோலமத வாம்பரிகள் கோட்டையிட்டார் போலவையன்
நாலு புறமும் நடாத்திமன்னர் சூழ்ந்துவர 108

வீமர் பராக்குரெகு வீரர் பராக்குசிலை
காமர் பராக்கெனவே கட்டியங்கள் கூறிவர 109

## கொடிகளும் பகைவர்களும்

விற்கொடியும் சேற்கொடியும் மேவுமனு மக்கொடியும்
புற்கொடியும் நாலு புறங்களுமே சூழ்ந்துவர 110

அக்கொடிகட் கெல்லாமென் ஐயன்சிங் கக்கொடிஎண்
திக்கும் வருமடையார் சிந்தை கலக்கிவர 111

---

101. சூட்சியுடையோர் - சூழ்ச்சியுடையோர், சோதிட வல்லுநர்; சவுனம் சகுனம்,

102. துயில்கணமா - தூங்குகின்ற விலங்கின் கூட்டம்.

106. சின்னம் - காளம் (அ) சங்கு; ரணபேரி - இரணபேரி, போர்முரசு.

111. வருமடையார் - வரும் அடையார், வரும் பகைவர்கள்,

வீரிட் டுருத்துவரும் வேழத் தொனியதுகேட் டு
ஈரற் படபடத்தங் கீழா மலையேற 112

ஆடற் பரிமா அதிர்ந்துவரும் தொனிகேட்டு
ஓடிக் குடக்கர் உடைந்து குடிவாங்க 113

ஓங்குரணை பேரி ஒலிமுழக்கங் கேட்டுமுடி
தாங்குசெக மன்னர் தளங்களுமே தத்தளிக்க 114

முழவொலியும் வீரர் முழக்கொலியும் பாய்மா
எழுமொலியும் பாய்திரையின் ஏழி னொலியடக்க 115

ஐவாய்ப் பெரும்புலியே யானாலுங் குத்தியையன்
கைவாய்த்த வச்சிரக் கடகம்வாங்க வேணுமென்றும் 116

கண்ட முயலையிரு காலினா லெற்றியையன்
கண்டசரம் வாங்கிக் கழுத்திலிட வேணுமென்றும் 117

வேலுக்கு இரையாக வெங்காயத்தை விழ்த்தி நம்மள்
காலுக்குவீ ரத்தண்டை கைக்கொள்ள வேணுமென்றும் 118

குபாலென் றெழும்புங் கொடிப்புலியைக் குத்திச்
சபாசென்றென் னையன்முன்பேர் தான்வாங்க வேணுமென்றும்
119

சீறி வருந்தறுகட் சிங்கத்தை வெட்டியையன்
ஏறிவரும் பாய்மா இனிவாங்க வேணுமென்றும் 120

களபமுலைப் பெண்களையே கைவசம தாக்கும்
குளிநரியின் கொம்புமினிக் கொண்டுவர வேணுமென்றும் 121

## வேட்டைக்கருவிகள்

வீரர்சிலர் சிந்தை விருப்பீயே தானடப்பக்
கூருஞ் சவளமுமே கொண்டுசிலர் மண்டிவர 122

---

113. குடக்கர் - மேற்கு திசையினர்.

115. பாய்திரையின் ஏழினொலி - ஏழுகடலின் அலையோசை.

116. ஐவாய்ப் பெரும்புலி - ஒருவகை விலங்கு.

120. பாய்மா - குதிரை.

122. சவளம் - ஈட்டி.

காலில் தொடுதோலுங் கட்டும் பெருவலையும்
மேலிற் கவசமுந்தோள் மேலிட்ட தூணியுமாய் 123

வில்லும் வளைத்தடியும் வேட்டைநெடுங் கத்திகளுஞ்
செல்லுமிறு மாப்புமிடை சேர்த்திட்ட கச்சையுமாய்க் 124

கங்குகரை யில்லாது கானவர்கள் கைப்பிடித்த
சங்கிலியு ஞாளிகளுந் தானுமாய் முன்னடக்க 125

## காட்டிற்குள் வேட்டை

மன்னனெங்கள் போதகுரு மன்மதரா சேந்திரக்கொடைக்
கர்னனுமே யந்தக் கடிவரையை வந்தணுகிப் 125 அ

போர்வளைந்து கொள்ளும் புயவீர ரைப்போல
வார்வளைந்து கட்டி வலைஞர்வலை கட்டிநிற்ப 126

வெற்றிவெடிக் காரரோடு வேற்கார ரும்வளைந்து
சுற்றிநிற்ப ஐயன் துரகமதை விட்டிறங்கி 127

மாரியொலி போல மணிமுரசு மேமுழங்கப்
பேரி யொலியும் பெருங்கடல்போ லேயொலிப்பக் 128

கானவருங் குத்தீட்டிக் காரர்களு மாய்ப்பரிந்து
கானமதை யெல்லாங் கலக்கி விடகலங்கிப் 129

## வேட்டையில் விழுந்த விலங்குகள்

புல்வாய் கரடி புலிகடமான் பன்றிமுயல்
எல்லாமுந் தட்டுண் டெழுந்து கலைந்தோட 130

ஓடி வளைப்பாரும் ஒருமித் தெழுந்துகும்பு
கூடி மறிப்பாருங் கொல்வாரு மாய்நெருங்க 131

மைமாவை யைவாய் வயமாவை வெங்கரடக்
கைமாவைத் தங்கள்தங்கள் கைவேற் கிரையாக்கி 132

---

123. தொடுதோல் - செருப்பு; தூணி - அம்புக்கூடு.

125. ஞாளி - நாய்.

127. துரகம் - குதிரை.

130. புல்வாய் - கலைமான்; கடமான் - காட்டுப்பசு.

132. மைமா - பன்றி; கரடம் - யானை மதம்; கைமா - யானை.

வேட்டொன்றுக் கொன்றாய் வெடிக்காரர் சுட்டுவிழுத்
திட்டவிழும் பன்றிகளுக்கு ஆவி பதைபதைப்பப் 133

பரத்தையர்தம் கைக்குள்கப் பட்டு முழிப்பார்போல்
துரத்தியநாய்க் காலின்முயல் துள்ளிச் சுழன்றுவிழ 134

போர்கண் டொளிக்கும் புரவலர்போ லெண்கினங்கள்
வார்கண் டகன்றுமலை மூலையிலேயொளிப்ப 135

பற்றறுத்த யோகியரைப் பற்றிவிடா மாதரைப்போல்
சுற்றுவலைக் கட்டறுத்த நவ்வியைநாய் சூழ்ந்ததுவே 136

நேருஞ் சமரிலெதிர் நின்றுநிணச் சேறாடும்
வீரர்தனைப் போல்புலியும் வேல்முனையில் வீழ்ந்திறப்ப 137

மேலும் கொடாதவரை விட்டுவிட்டாற் போற்சினந்து
கோலமெதிர் பற்றக் குரைத்துநாய் கவ்விவிழ 138

வேற்குத்துங் கைக்குத்தும் மிக்ககதி கொண்டபெருங்
காற்குத்து மாகக் கரடிகளைக் கொன்றிழுப்ப 139

சிற்றிடையார் கண்வலைக்குள் சிக்கியுழல் வாலிபர்போல்
சுற்றியிடும் வலைக்குள் சுழன்றுசில மான்வீழ 140

பற்றுவிடும் யோகியரைப் பற்றுமின்னார் போல்வலையை
யற்றுவிடும் நவ்வியைநா யத்தனையுஞ் சூழ்ந்ததுவே. 141

பிடர்பிடித்துக் கவ்வியுநாய் பின்றுடரப் பன்றிக்
குடர்சரியக் குத்திக் கொடிப்புலியை வாய்கிழிப்ப 142

கண்டுபெருங் கங்கை கலந்தவர்தம் பாவமெனக்
கொண்டை மயிலின் குலமும் பறந்தோட 143

துன்றுமுலை வலைக்குட் சொக்குவார் போற்கவரி
சென்றுபெரு வலைக்குட் சிக்கியே தானுழல 144

---

134. 'செவ்வியோன் வேசிகையில் சிக்கி உழல்வதுபோல்' —கூளப்ப. ப. 26.

135. 'உற்றகவி வாணரைக்கண் டோடும் உலுத்தரைப்போல்'
—கூளப்ப. ப, 27.

எண்கினங்கள் - கரடிக் கூட்டங்கள்.

136. நவ்வி - மான்.

138. கோலம் - பன்றி.

142. பின்றுடர - பின் தொடர.

மகிதலமேற் கேழல்மணி வண்ணனும் வைகுந்தம்
புகுத வான்பார் புலியுமுரு மாறிநிற்பக் 145

கட்டாப் பிருக்கும்வெடிக் காரரொளிக் காரருக்குள்
தட்டாமலே வலையைத் தாண்டியே தான்குதித்து 146

மண்டலிகன் போதகுரு மன்னவனென் னையன்முகங்
கண்டோர் கலிபோல் கடமானு மேகலங்கி 147

## மானைத் தொடரும் மன்னன்

அன்றோடு மான்போ லகன்றுமலர்ச் சோலையின்வாய்ச்
சென்றோட வோடிச் சிலதூரஞ் சென்றதற்பின் 148

இவ்வேட்டை நல்வேட்டை யென்றெவருங் கொண்டாட
அவ்வேட்டை யையனுமே யாடும் பொழுதெழுந்து 149

கார்க்கடுமை காட்டினையென் கைக்கடுமை பாரெனவின்
மேற்கடுமை காட்டும் விசையம் பினுக்களித்தான் 150

## சோலையின் அழகு

சாரங்கம் வெட்டுழக்கித் தாவியெழுங் கொல்புலிபோல்
சாரங்க மேந்தியங்கோர் தண்டலையிற் சென்றணைந்தான் 151

குரும்பைமுலை காட்டிக் குவளைவிழி காட்டி
யரும்புநகை காட்டியிதழ் ஆம்பல் மலர்காட்டி 152

கஞ்சமலர் வதனங் காட்டித் தளர்ந்தொசியும்
வஞ்சி யிழைநுண் மருங்கி னெழில்காட்டி 153

கிள்ளைமொழி காட்டிவண்டர் கேசந் தனைக்காட்டிப்
பிள்ளையன நடையின் பெற்றியுமே தான்காட்டி 154

இளந்தளிர்மா மேனி யெழில்காட்டி நிற்கும்
வளந்திகழ்பூஞ் சோலையிள மானு மனமகிழ்ந்து 155

---

147. மண்டலிகன் - ஒரு குறிப்பிட்ட அளவு எல்லைக்குட்பட்ட பகுதிக்கு அரசன் (இருபது யோசனை விஸ்தாரமான தேசத்தை யாள்வோன்). கலி - செருக்கு (அ) வறுமை.

151. சாரங்கம் - மான், யானை; சாரங்கம் - வில்; தண்டலை - சோலை.

152. ஆம்பல் - அல்லி.

153. கஞ்சமலர் - தாமரை மலர்.

வரிசிலைவே ளையன் மனைவந்தான் என்றரளிச்
சொரிவனபோல் ஐயனெதிர் சோலைமலர் சொரிய 156

தாமரைப்பூங் கிண்ணமெல்லாந் தண்ணமுத மேந்திநிற்பக்
காமரிள வண்டினங்கள் கண்டின் னிசைபாட 157

வாவிபுகும் தென்றலையன் மாமுகத்தின் வேர்வகற்றக்
கூவி யழைப்பனபோற் கோகிலங்கள் தான்கூவ 158

தோகை மயிலுமிங்கோர் தோகைசுகங் காட்டுவனென்(று)
ஆகமகிழ்ந் தையன் அருகினின்று கூத்தாட 159

ஐயன் வதுவைக்கு அமைத்தமணப் பந்தரெனத்
துய்ய கமுகினிளஞ் சோலை புடைசிறப்ப 160

பூவைச்சா றுங்குணக்குப் பூவைசுகம் உண்டெனப்பூங்
காவின் உரைக்குமந்தக் காட்சியுங்கேட் டுண்மகிழ்ந்து 161

மன்னனெங்கள் போதகுரு மனம்தரா சேந்திரதுரை
இன்ன மதிசயமுன் டென்றுலா வும்பொழுதில் 162

## பூங்கா நோக்கிப் பூவையர்கள்

விரவுதரு மாதினுக்கும் வேள்ரதிக்கு மேலாஞ்
சரசகுண மாலையெனுந் தையலொரு பெண்பெருமாள் 163

அத்தினிக் குரூபசித்திரம் ஆனதொரு சங்கினிக்குஞ்
சித்தினிக்கு மேலாய்ச் சிறந்த பதுமினிப்பெண் 164

துன்னுஞ் சலாபத் துறையில்விலை பேசியதில்
சன்னங் குறுகலெனத் தள்ளிவிடா தாணிமுத்தம் 165

சேர்த்துருக்கித் தட்டித் தெளியவே தானுரைத்துப்
பார்த்து மெழுகிலொட்டிப் பாராப் பசுந்தங்கம் 166

மானாக மேருமந்த வானும் வருந்தாமல்
தானாக வேதான் சமைந்ததொரு தெள்ளமுர்தம் 167

மங்காது .. ணைதனில் வைத்துவிளக் காதுகட்டித்
தொங்காது காலைச் சுட்டெறிக்குஞ் சோதிரத்தினம் 168

---

163. சரசகுணமாலை - தலைவி.

164. காமசாத்திரத்தில் பெண்களை பதுமினி, அத்தினி, சித்தினி, சங்கினி என்று குணங்களின் அடிப்படையில் வரிசைப் படுத்திக் கூறப்பட்டுள்ளது.

165. சலாபத்துறை - முத்துக்குளிக்கும் துறை.

மேனி வெளிறாது வேதனைமேற் கொள்ளாது
வானி னடையாது மருவு மனப்பேடு 169

சிறைபெறா தோடித் திரியாது பச்சை
நிறமுறா தெங்கு நிலவுங் கிளிப்பேடு 170

கானமெல்லாஞ் சுற்றிக் கரியமுகில் வரக்கண்டு
ஆனபசுந் தோகைவிரித் தாடாக் குலமஞ்ஞை 171

மாரனுக்கு வில்லாய் வளைந்துரசங் குன்றாமல்
பாரினுக்குள் இன்பரசம் பாலிக்கும் செங்கரும்பு 172

ஏறுகட்டிச் செக்குரல்வாய் இட்டாட்டிக் கொள்கருப்பஞ்
சாறுவிட்டுக் காச்சிச் சமையாத் தனிப்பாகு 173

மையார் விழியார் வனத்துள் வகைவகையாய்க்
கையால் எடுத்துநிதங் கட்டா மலர்த்தாமம் 174

கருத்துணி னைக்கினுநேர் காண்கினுங் காதாரத்
திருத்தமுறக் கேட்பினுந்தான் தித்திக்குந் தேனரவம் 175

சீவிமெரு கிட்டுவன்னஞ் சேர்த்திருகைக் கணியாய்க்
காவிவிழி யார்கள்தினங் கட்டாக் கொடிப்பவழம் 176

காட்டிவிழி காட்டிநயங் காட்டியெழில் காட்டியின்பங்
காட்டிமொழி காட்டிநடை காட்டிவரு ரூபசித்திரம் 177

ஓரா தரவுக்கு உணவாகி மன்மதற்குந்
தேராகி நாளுந் திரியாச் செழுந்தென்றல் 178

இந்திரனார் நாளும் இருந்தரசு செய்யுமந்தப்
பைந்தருவிற் பின்னிப் படராத காமவல்லி 179

கனந்தந்த செம்பொற் கமலா சனத்தோன்
அனந்தந் தவஞ்செய்து அளித்துவிட்ட பொற்பாவை 180

அனங்க கலைக்கிஞானம் அனங்க வனுட்டானம்
அனங்க குருத்தானம் அனங்க தவத்தியானம் 181

---

172. மாரன் - மன்மதன்.

173, காச்சி - காய்ச்சி.

174. மலர்த்தாமம் - மலர்மாலை.

175. கருத்துணி னைக்கினு - கருத்தளவில் நினைத்துப் பார்த்தாலும்.

178. ஓராதரவுக்கு - ஆராயாமல் ஓர் பாம்பிற்கு.

180. கமலாசனத்தோன் - படைப்புக் கடவுள்; அனந்தம் - எண்ணற்ற.

மோக சுரதாணி மோகன கல்யாணி
மோக ரசசேணி மோகன கலாவாணி 182

மாதவர்க ணேத்திர மாதவர்செய் தோத்திர
மாதவர்சொல் சூத்திர மாதவர்கள் வாழ்சேத்திரம் 183

மன்மத சிங்காரி மன்மத வொய்யாரி
மன்மத காந்தாரி மன்மதநூல் விஸ்தாரி 184

தனிநின்ற ராமன் தளங்காக்கச் சென்ற
அனுமன்றன் னாலும் அகப்படாச் சஞ்சீவி 185

## பூப்பறிக்கப் புறப்படுதல்

சோதிரத்தினம் என்னுமுயிர்த் தோழிதனைப் பார்த்தெனக்கிப்
போதிடது கண்ணும் புயமுந் துடிக்குதென்றாள் 186

அப்போது சோதிரத்தினம் ஆனவுயிர்ப் பாங்கியுமே
இப்போது உனக்குநல்ல இன்பசுகங் கூடுமென்றாள் 187

அந்தவுரை கேட்டு அகமகிழ்ந்து மாதருடன்
கொந்துமலர்க் காவின்மலர் கொய்துவர வேணுமென்றாள் 188

## ஒப்பனைகள்

என்றுசொல்லு முன்னம் எழுந்துநல்ல பாங்கியருஞ்
சென்றுவரச் சென்றுமலர்ச் செம்பொற் றடம்படிந்து 189

வாசக் கலப்பின் வகைசேர்த் தரைத்தமஞ்சள்
பூசிக் குளித்துநல்ல பூம்பட் டிடைக்கணித்து 190

வாய்ந்த வரிவிழிக்கி மையெழுதி வெண்ணீற்றின்
காந்திதரு நுதலிற் கத்தூரிப் பொட்டுமிட்டு 191

சிந்தூரந் தீட்டிமயிர் சீவி வகுப்பெடுத்த
கொந்தார் குழல்ரெத்தினக் குப்பியுங்குச் சுந்தரித்து 192

வச்சிரமணிப் பாளை மணிச்சுட்டி கட்டியிந்த
முச்செகமு மெச்சுமுன்கை மூதா ரியுமணிந்து 193

---

191. காந்தி - ஒளி.

192. வகுப்பெடுத்த - வகிரெடுத்த.

193. வச்சிரமணி - ஓர் இரத்தினம்; மூதாரி - முதாரி, முன்கை வளையல், 'முன்கை முதாரியு' —குமர. பிர. முத்துச். பிள். 17.

மங்கைகுழைக் காதிலங்க மாணிக்க மிட்டிழைத்த
தங்கப்பொன் ஓலையுடன் சந்திரமுரு குந்தரித்து 194

சேர்க்கைதரு கொப்புச் சிமிக்கியுமேற் காதணிந்து
மூக்கில்நவ ரத்தினமுத்து மூக்குத் தியுமணிந்து 195

அட்டியலும் பொற்சரமும் ஆணிமுத்துத் தாவடமுங்
கட்டு வடமுடனுட் கட்டுங் கழுத்தணிந்து 196

திரளுமலைச் சந்தந் திமிர்ந்து தொயில்தீட்டும்
பருவமுலை மேற்கிணுக்காப் பட்டுரவுக் கைதொட்டு 197

சந்திரப் பிறையும் தருசூரி யப்பிறையும்
பைந்தரள நெற்றிப் பரிசையுமே தானணிந்து 198

தாரிலங்கக் கொத்துமுத்துத் தாவடமும் மேருமுலை
மார்பிலங்க வச்சிர மணிப்பதக்க னுந்தரித்து 199

தங்கவளை செங்கை தனக்கணிந்து கல்பதித்த
துங்கமணி மோதிரமுஞ் சோதி விரற்கணிந்து 200

மங்கை யிவள்தன் வடிவழகுக் கேற்கநல்ல
தங்கவொட்டி யானந் தளர்நுண் ணிடைக்கணிந்து 201

தண்டையொடு பாத சரமுமணிப் பாடகமுங்
கண்டுமொழி யாள்தனிரு காலுக்குமே யணிந்து 202

கஞ்சமலர் மேலணையாள் கால்விரற்கு மாடகப்பொன்
மிஞ்சி மயிலடியு பேற்பீலி யுந்தரித்த 203

மழைமதர்க் கணிந்த மயிலுக் கழகுக்கு
அழகுசெய் வார்போல் அலங்கரித்தார் பாங்கியர்கள் 204

எங்குமே சோதிபளீ றென்றெறிப்ப மங்கைநல்லாள்
அங்கமெல்லாந் தங்கமயம் ஆக்கினார் பாங்கியர்கள் 205

மற்றுமினிக் கண்ணேறு வாராமல் திட்டியுமே
சுற்றிவளைத் தார்மலர்க்குத் தோகையுமே செல்லலுற்றாள் 206

---

194. சந்திரமுருகு - பிறைவடிவாய் அமைந்த காதணி.

196. தாவடம் – கழுத்தணி மாலை.

202. தண்டை பாதசரம் - மாதர் காலணிகள்.

203. மிஞ்சி - கால்விரலணி; மயிலடி - மாதர்காலின் நடுவிரலணி. பீலி—மகளிரிடும் கால்விரல் அணி (சிலப். 6, 83, உரை).

206. கண்ணேறு - கண்திட்டி.

### தோழியர் கூட்டம்

மதனவல்லி இன்பரச வல்லிசந்திர வல்லி
சுதினமிகு மின்ப சுபமோ கனவல்லி 207

சரசவல்லி சித்திரவல்லி சம்போக வல்லி
வரிசை பெறுநளின வல்லி யமுதவல்லி 208

கற்பக வல்லி கனகாம் புசவல்லி
அற்புத சுகானந்த ஆனந்த வல்லியுடன் 209

மணமாலை செண்பகப்பூ மாலைதங்க மாலை
குணமாலை பொன்மாலை கோலா கலமாலை 210

வச்சிராங்கி ரத்தினாங்கி மாமோக னாங்கிசெக
மெச்சுரச புட்பாங்கி மின்னனையார் தானுமவள் 211

கன்னியிவள் சாயலுமே கண்டு மயிலினங்கள்
தன்னினமென் றாவலுடன் தாவிப் பறந்துவர 212

கோதைநடை கண்டனமுங் கொஞ்சியே பின்தொடரச்
சாதகமு மேகமெனத் தாழ்குழல்கண் டோடிவர 213

தாரகையி னாப்பணொரு சந்திரோ தயம்போலக்
கோ...கையார் நாப்பணிந்த கொம்பனையுஞ் செல்லலுற்றாள் 214

### பூங்காவில் பூவையர்கள்

இந்தநல்ல பாங்கியர்கள் யாவருமே தற்சூழ
வந்துமலர்ச் சோலை வனத்துட் டனிபுகுந்தாள் 215

புகுந்தாள் மணிமுறுவல் பூத்தாள் தன்னுள்ளம்
மகிழ்ந்தாள் வனநல் வளமென் றதிசயித்தாள் 216

---

212. 'மாமயில் ஆங்குள வந்துமுன் நிற்பன
சாயல்கற் பனகொலோ தையல் தன்னுடன்'
— மணிமே. மலர்வனம். வரி 154-155.

213. 'நல்லிள அன்னமும் நாணா தாங்குள
வல்லுந கொல்லோ மடந்தை தன்னடை'
—மணிமே. மலர்வனம். வரி. 151-152.

சாதகம் - வானம்பாடி.

### பூவெடுத்தல்

பூங்குழன்மேல் வண்டுமந்தப் பூங்காவின் வண்டுமெழுந்
தாங்குகலந் தூடுதல்கண் டாகம் மகிழ்தலுற்றாள் 217

அப்போது பாங்கியர்கள் யாவருங்கொண் டாடநல்ல
கைப்போது கொண்டுமல்லி கைப்போது மேயெடுத்தாள் 218

முத்துநகை முல்லை முகையென்றுங் கோங்கரும்பு
குத்துமுலை யென்றுங் கொழுகியே பூவெடுத்தாள் 219

வாய்ந்தவரி வண்டினங்கள் மங்கையிவள் செங்கைமலர்க்
காந்தளென அஞ்சிக் கலைந்தோடப் பூவெடுத்தாள் 220

மல்லிகை முல்லையிரு வாட்சிபிட்சிப் பூவுடனே
நல்லநல்ல பூவுமிந்த நங்கையுமே தானெடுத்தாள் 221

சிலதியரெல் லோருந் திரண்டுதிரண் டந்த
மலர்வனமெல் லாமும் மகிழ்ந்தோடிப் பூவெடுத்தார் 222

குன்றுமுலைப் பெண்களிந்தக் கொம்பனையா ளைப்பிரிந்தே
சென்றசென்ற வாகினிலே சென்றுமலர்ப் பூவெடுத்தார் 223

வாகாந்த பூங்கா வனத்துள் தனித்திவளும்
ஏகாந்த மாய்நின்று இனியமலர்ப் பூவெடுத்தாள் 224

### கோட்டுப்பூ கேட்டல்

மட்டார் குழலாள் மகிழ்ந்தெடுக்கும் பூவிலுங்கைக்
கெட்டாத கொம்பில் இருக்குமலர்க் கிச்சையுற்றாள் 225

பங்மையமு நீலோற் பலமுமலர்ச் செண்பகமுஞ்
செங்குமுத முந்தளவுஞ் செங்காந் தளுமுருக்கும் 226

கோலமிகு சேயிதழ்ப்பைங் கோங்கரும்பு தன்னுடனே
நாலுவகை மலரும் நங்கைக் கிசைந்திருப்ப 227

பொன்னைப் புதைத்திரப்பார் போலவந்த பூவைநல்லாள்
வன்னமலர்ப் பூங்கா வனத்துட் டனிநடந்து 228

---

218. 'கொய்யுமலர் வண்டெழுந்து கோகனப்பூ வெனச்செங்
கைம்மலரைச் சுற்றக் கடுகிமலர்ப் பூவெடுத்தாள்'—கூளப்ப. ப. 36.
226. தளவு - ஊசி மல்லிகை.
227. நாலுவகை மலர் - கோட்டுப்பூ, கயப்பூ, செடிப்பூ, கொடிப்பூ.

கேதகையே குங்குமமே கிஞ்சுகமே பஞ்சரமே
தாதகியே நீரெமக்குத் தக்கமலர் தாரீரோ 229

வெட்சியே வாச மிகுபாரி சாதகமே
மெச்சினேன் உங்களைநான் வேணமலர் தாரீரோ 230

பிண்டியே மாதுளையே பேசுமரிச் சந்தனமே
அண்டியே வேண்டுமெனக் கானமலர் தாரீரோ 231

தத்தையே சொல்லித் தவியாமல் நீங்களுந்தான்
தத்தையே கொய்தெனக்குத் தக்கமலர் தாரீரோ 232

**மாதவிப் பொதும்பரில்**

இவ்வித மாகநவின் றேந்திழையாள் தான்மயங்கி
மௌவலிளஞ் சோலையிலோர் மாதவியின் பாலணுகி 233

மாலைப் பிரிந்துவந்த மான்போல் மதப்பிடிபோல்
ஏலக் குழலாளு மேயொருத்தி யாகநின்றாள் 234

**காட்சி**

புத்தமுர்தம் போலயெங்கள் போதகுரு ராசேந்திர
கர்த்தனுமே தானெதிரே கண்டான்றன் கண்குளிர 235

**ஐயம்**

பூவையோ பூமயிலோ பூங்கமலத் துள்ளிருக்கும்
பாவையோ தெய்வமடப் பாவையோ தெள்ளமுதோ 236

கந்திருவர் காந்தருவக் கன்னிகையோ கார்மயிலோ
வந்தரதி யோபெண் ணரசோ வரமகளோ 237

---

229. கேதகை - தாழை; கிஞ்சுகம் - கிளி; பஞ்சரம்-செருந்திமரம்; தாதகி - ஆத்திமரம்.

231. பிண்டி - அசோகமரம்.

232. தத்தை - கிளி.

233. மௌவல் - முல்லை, வனமல்லிகை, தாமரை; மாதவி - குருக்கத்தி, வசந்தகால மல்லிகை.

237. வரமகள் – வரைமகள், மலைமகள்.

### துணிவு

காலுநிலந் தோய்ந்திடலால் கண்ணியுமே வாடுதலால்
வேலனைய கண்களும் மேன்மேல் இமைத்திடலால் 238

இம்மா நிலமானென் றெம்மான் மனந்தேறி
யம்மான் முகம்பார்த்து அரசனுமங் கேதுசொல்வான் 239

### குறிப்பறிதல்

பெருக்குந் தனமுடையீர் பேரேது நீரும்
இருக்குந் தலமே யியம்பினால் ஆகாதோ 240

யாவரு மெட்டாநல் யாழறிந்து செப்புமந்த
சீவகற்கு மாலையிட்ட சேயிழையு நீர்தாமோ 241

மெய்வருத்தப் பட்டிளைக்கும் வேளைபொரும் போரினிலே
கைகொடுத்துக் காத்தவந்தக் கார்குழலு நீர்தாமோ 242

வில்லாற் றெறிப்பவன்று வீழ்ந்திடுநெல் லிக்கனியைச்
சொல்லாற் பொருத்தவல்ல தோகையரு நீர்தாமோ 243

---

238. 'வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப' —தொல். கள. 92.

241. சீவகற்கு மாலையிட்ட சேயிழை - காந்தருவதத்தை. சீவகசிந்தாமணி; காந்தருவதத்தையார் இலம்பகம்.

242. கார்குழல் - கைகேயி - தேவர் உலகில் சம்பரனுடன் தயரதன் போர் நிகழ்த்தியபோது உதவியவள். அதற்குப் பரிசாக இரு வரங்களையும் பெற்றாள். 'தோடு இவர்ந்த தார்ச்சம்பரன் தொலைவுற்ற வேலை ஆடல் வென்றியான் அருளிய வரம் அவை இரண்டும்' —கம்ப. மந்தரை. 1576.

243. தோகையர் - துரோபதை. ஒரு முனிவருக்கு உணவாக வேண்டிய கனியைக் கொய்து விட்ட பழியிலிருந்தும் மீள வேண்டுமானால் பாண்டவரும் துரோபதையும் தம் மனதில் உள்ள மறைச் செய்திகளை எல்லோர் முன்பும் சொல்ல வேண்டும் என்று கண்ணன் கூற துரோபதை தனக்கு ஆறாவது கணவராகக் கன்னனும் வேண்டும் என்று மனதில் உள்ள மறைச் செய்தியைக் கூறினாள் என்பது இக்கண்ணியிலிருந்து தெரியவரும் கதையாகும். இதற்குப் பாரதத்தில் சான்றினைக் காணோம்.

மாட்சியாய் நாளு மணமுடிப்பார்க் கெல்லாமோர்
சாட்சியாய்த் தானிருக்குந் தார்குழலு நீர்தாமோ 244

ஒருகுன்றம் ஏந்திநிற் போனுக் கெதிராக
இருகுன்றம் ஏந்திநின்ற ஏந்திழையு நீர்தாமோ 245

கலையேறுஞ் சிற்றிடையீர் கார்பயுங் கொண்டோடி
மலையேறிச் செல்வதுங்கள் வார்குழலைக் கண்டலவோ 246

ஆரமுதே நின்முகத்துக் காற்றோமென் றோநளினம்
நீர்நிலையா யோர்தாண்மேல் நின்றுதவஞ் செய்வதுதான் 247

சந்தேக மில்லையர்த்த சந்திரனே நெற்றியென்றாற்
சிந்தூர ரேகையதில் சேர்ந்திருக்கக் காணோமே 248

சொற்சிலையீர் உங்கள் துணைப்புரு ரத்தைமதன்
நற்சிலை யென்றால் நடுவெளிக்கிங் கென்னசொல்வேன் 249

அன்றைவரைக் காத்தளிக்கும் வண்டுபோல் பிரமன்
இன்றெவரைக் காக்க வகுத்தான் இருநயனம் 250

---

244. தார்குழல் - அருந்ததி. ஏழு மகளிருள் (சப்தரிஷிகளின் மனைவிமார்கள்) ஒருத்தி, கற்புடைப் பெண்டிரின் வணக்கத்திற்கு உரியவள். வானத்தின் வடதிசையில் விண்மீனாகத் திகழ்பவள். சாலினி என்றும் அழைக்கப் படுகிறாள். மண நிகழ்ச்சியில் அருந்ததி பார்த்தல் ஒரு சடங்கு.

'வடவயின் விளங்கா லுறையெழு மகளிருள்
கடவுள் ஒருமீன் சாலினி' —பரிபா 5, வரி 43, 44.

245. ஏந்திழை - வள்ளி.

246. கலை - ஆடை, 'கலவிக் களியின் மயக்கத்தில் கலைபோய்அகலக் கலைமதியின்' —கலிங்க. கடைதிறப்பு - 33.

247. நளினம் - தாமரை; தாமரை நீரில் ஒரு காலில் நின்று தவம் செய்வதாகப் பாடியிருப்பது நயம்.

'அரும்பாம் அளவில் தனத்தொடவ் வாயல ராமளவில்
கரும்பா மொழிவத னத்தொடவ் வாய்களி யானைசெம்பொன்
தரும்பாரி வாணன் தமிழ்த்தஞ்சை யாஃதரி யாரின்முன்செய்
பெரும்பாவ மல்லது நீர்நின்ற பேறல்லி பெற்றிலையே'
—பொய்யாமொழிப் புலவர், த. வா. கோவை, இடந்தலைப்பாடு 37.

248. அர்த்த சந்திரன் - எட்டாம் நாள் வளர்பிறை நிலவு. பெண்களின் நெற்றிக்கு உவமை கூறுவர்.

250. வீமன் சிறுவனாக இருந்தபோதே ஆற்றலைக் கண்டு அஞ்சிய மாற்றலர்களாகிய துரியோதனன் முதலியோரின் சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று. ஆயிரம் கழுமரங்களை ஆற்றில் நட்டுக் குதிக்க வைத்தனர். வீமனும் சூழ்ச்சியறியாது, குதிக்கப் பாய்கின்றபோது கண்ணன் வண்டாகி அங்கே பறந்தான். அதைக் கண்டு அதனைத் தாண்டிக் குதித்துக் கரையேறினான் வீமன். இதனை;

கங்கண்இமை யாதுகயல் தானோடிச் செல்வதெல்லாம்
மங்கைநல்லீர் உங்களிரு வாள்விழிக்குத் தோற்றலவோ 251

அரக்கன்விடு வேலேற் றவனுமெதிர் நின்று
கருக்குழலீர் உங்களிரு கண்வேலுக் காற்றுவனோ 252

நங்கையீர் சண்பகத்தை நாசிக்கு உவமைசொன்னால்
தங்கமுத்து மூக்குத் தழுக்கதனிற் காணோமே 253

ஆர்ந்தமணிப் பொற்றோ டணியாத வள்ளைதனை
வார்ந்தகுழைக் காதென்றால் மானிலத்தோர்க் கொவ்வாதே 254

வார்மேற் குமுதமுமே வாடுதலால் உம்மிதழ்க்குப்
பார்மேற் பவழம் பழுக்கிலிணை சொல்வேனே 255

தேறியவெண் முத்தையிணை செப்பி லிடைக்கிடையங்
கேறியபற் காவி யினுக்குவமை யென்னசொல்வேன் 256

விமுகனக கொங்கைநல்லீர் வேதனுமே யந்தக்
கமுகைவகுத் துங்கள்மணிக் கந்தரத்தைச் செய்தானோ 257

பகைத்தமலர்க் கஞ்சமதைப் பார்த்திரண்டு கையும்
நகைத்த நகையோ நகமோ வெனவறியேன் 258

வாள்விழியீர் வேதனுங்கள் மாமேரு மாமுலைக்குத்
தோளமைய தாகவென்றோ தோழமைய தாய்ச்
சமைத்தான் 259

எண்ணிச் சராசரங்கள் ஈன்றோன் இருகரத்தால்
பண்ணிப் பதித்தசெப்போ பாரமுலை யோவறியேன் 260

---

'வேறொரு பகற்கழு நிரைத்து வீமனோ
டாறுபாய்ந் திருவரு மாடும் வேளையில்
தேறலான் வஞ்சகந் தேறி வண்டினால்
ஏறினான் கடந்தரி யேறுபோன் றுளான்'
—வில்லி. பாரதம், ஆதிபர்வம், வாரணவதச் சருக்கம். 10.

253. தழுக்கு - மிளிர்தல்.

254. 'காதென்றான்' - காதென்றால்.

255. பழுக்கில் - குற்றமில்லாத.

257. வேதன் - பிரமன், படைப்புக் கடவுள்; கமுகு-பாக்குமரம்; கந்தரம் - கழுத்து.

258. கஞ்சம் - தாமரை.

260. சராசரங்கள் ஈன்றோன் - இயக்கம் உள்ளதும், இல்லாததுமாகிய உலகங்களைப் படைத்த படைப்புக் கடவுள்.

கோலமிகு செம்பொற் குடமுகட்டி லேயமைத்த
நீலமணி யோமுலையி னீடுங் கறுப்பதுதான் 261

ஆலிலையை தான்வயிற தாக்கிவிட்ட தோவயிற்றை
யாலிலைய தாக்கியதோ யாதோ வினியறியேன் 262

சொற்றதிரு வுந்திச் சுனையிலெழு ஞாளமென
உற்றசிறு ரோமத்து ஒழுங்கையுமே யென்னசொல்வேன் 263

வைய மதிக்குமணி ரோமவல்லி யுங்கள்
துய்யதிரு வுந்திச் சுனையில் முளைத்ததுவோ 264

வடிவை வகுத்துவந்த மாமலரோ னுங்கள்
இடையை வகுக்க வினிமறந்து விட்டானோ 265

அரவபட மோவல்குல் ஆயிழையீர் அம்பொற்
றிருவிரத மோமதனன் தேடிவைத்த பொக்கிஷமோ 266

மதவேள் வசந்தமணி மண்டபத்துட் கட்டுங்
கதலியோ வுங்கள் கவானையுமே யென்னசொல்வேன் 267

அலவன்முழந் தாளென்றால் ஆயிழையீர் உங்கள்
இலகுகணைக் காலைவரா லென்பதுசந் தேகமுண்டோ 268

சித்திரமிகு மன்மதநூல் தீட்டுதற்காய்ச் சேர்த்துவைத்த
பொத்தகமோ வாமை முதுகோ புறவடிதான் 269

பங்கமுற்று நின்றுசலப் பட்டலர்செந் தாமரையை
உங்களிரு காலுக்கு உவமைசொன்னால் ஒப்பாமோ 270

தண்பணைசூழ் தேமாந் தளிரோ திருமேனி
சண்பகமோ தங்கந் தனையுருக்கி விட்டதுவோ 271

மஞ்சூட்டுங் கிள்ளை வனத்துட் புகுவதுஞ்செம்
பஞ்சூட்டுஞ் சீறடியீர் பான்மொழிக்குத் தோற்றலவோ 272

மைவைத்த கூந்தன்மட மாதரையெல் லாம்படைத்துக்
கைவந்த தற்பினயன் கற்பித்து விட்டானோ 273

---

262. ஆலிலை - பெண்களின் அடிவயிற்றுக்கு உவமை கூறுவர்.

263. ஞாளம் - படர்கொடி.

266. அரவபடமோ - அரவப்படமோ, பாம்பின்படமோ.

267. கதலி - வாழை; கவான் - துடை.

268. அலவன் - நண்டு; வரால் - இறால்; ஒருவகை மீன்.

மதிநுதலீர் உங்கள் வடிவுகண்டால் அந்த
ரதியை ஒருபொருட்டாய் நண்ணமதன் எண்ணுவனோ 274

பாங்கியரை விட்டுமலர்ப் பைந்தொடியீர் நீர்தனியே
ஈங்குவரப் பெற்றதுவும் யான்செய்த புண்ணியமோ 275

## வேட்கையால் வேண்டுதல்

வந்த வகையெனக்கு மங்கைநல்லீர் உங்களுட
சிந்தை மகிழ்ந்துரைத்தாற் சிந்துமோ தேனுமுத்தம் 276

எந்தன் மனமகிழ யேந்திழையீர் இவ்வனத்துள்
வந்த வகையுரைத்தால் வாய்முத்து உதிர்ந்திடுமோ 277

கற்பித்த வேதனுமே கண்டுவீறு மிக்கநல்ல
பொற்புற்ற வின்பமடப் பூவையே கண்பாரீர் 278

## பெண்வேட்டை

அல்குல்மணித் தேரையெனக் காயிழையீர் நீரளித்தால்
நல்குந் தனவரையை நான்வளைத்துக் கொள்ளேனோ 279

கான மலர்க்குழலீர் கண்வேல் எனக்களித்தால்
யானை மலைவரைபோய் யான்வேட்டை யாடேனோ 280

மானடியை நீங்கள் மறைத்துவிட்டால் எப்படித்தான்
யானடிகண் டேவேட்டை யாடத் துணிவதுதான் 281

தானைகொண்டு கண்வேல் தனைக்கொண்டு கும்பமுலை
யானைகொண்டு நல்ல வடுபோர்ச் சிலைகொண்டு 282

அல்குல்மணித் தேர்கொண்டு அடுத்தீர் கலந்துநம்மை
வெல்லும்சம் பிரதாய விதங்கொண்டா லோசரிதான் 283

## சொல்வலை வேட்டுவன்

மின்கொடியீர் மோகவிடாய் தீரவுங் களபமுலை
இன்பவிள நீரை யினியளிக்கப் போகாதோ 284

---

278. வேதன் - படைப்புக் கடவுள்.

279-283. இரட்டுற மொழிதலாக அமைந்துள்ளது.

279. தனவ்ரை - கொங்கை.

280. யானைமலை - கொங்கை.

281. மானடி - 1. மானின் அடி; 2. அல்குல். அடிகண்டே. 1. சுவடு 2. கீழே

282. தானை - படை; பொற்சிலை கொண்டு என்றும் இருக்கலாம்.

வேய்னைய தோளீர் விரகப் பசிக்குமது
வாயமுதம் ஈந்து மருவினால் ஆகாதோ 285

விழிக்குங் களபமுலை மங்கைநல்லீர் உங்கள்
விழிக்கணையால் நொந்தேனே மேவினா லாகாதோ 286

முலையழுந்தக் கட்டியொரு முத்தமிட்டால் உங்கள்
கலையுரிந்து மெல்ல கலவிவிதங் காட்டேனோ 287

கோதைநல்லீர் சங்குமுகங் கோடிக்கரை யிரண்டு
மோதுந் தனுக்கோடிக் குள்ளடக்க மோவலவோ 288

மனுக்கோடி யோதி வருந்தினுங் கிட்டாத
தனுக்கோடி கிட்டுவர்க்குத் தானதுதா னும்பெரிதோ 289

செய்யமத வேளின் திருவிளையாட் டுக்கினிய
தையனல்லீர் என்னைவரத் தானழைத்தீ ராமாகில் 290

நீலமுந் தாமரையும் நீண்டமலர் சண்பகமும்
கோலமும் பூந்தளவுங் கூந்தல் இளங்கமுகும் 291

மடந்தைநல்லீர் உங்கள் வடமலை சென்றுந்தித்
தடந்தோய தனந் ... ... மினிக் காணப் 292

பைம்பொற் சுளிகைமணிப் பட்டாடை யும்பவளக்
கொம்பு... ...ருங் கொடியு மொழிக்கரும்பும் 293

வாழையுந் தானு...வுங்கள் வரன்மணித் தேரையிந்த
ஏழுலகும் மெச்ச இனிநடத்திக் கொள்ளேனோ 294

மண்மலைக்க மூடும் வலைவீசிக் கொண்டவெனைக்
கண்வலைக்கு ளாக்கிவிட்ட காயக்க மென்னசொல்வேன் 295

அடுத்திதுநே ரந்தனியே யானுரைக்குஞ் சொல்லுக்
கடுத்ததொரு சொல்லேனு முங்களாலுரைக் கக்கூடாதோ 296

---

285. வேய் - மூங்கில்; விரகப்பசி - காமப்பசி.

287. கலை - உடை.

288. கோடிக்கரை - திருமறைக்காடு எனும் வேதாரணியத்திற்கு அண்மையில் உள்ள ஒரு கடற்கரை ஊர்; தனுக்கோடி - இராமர் சிவபூசை செய்வதற்காகத் தமது வில்லின் நுனியால் கண்ட தீர்த்தத்தை உடைய ஊர், ''கோசலேசன் குனிசிலைக் கோடிநீர்''.

—சேது. கோடி தீர்த்தச் சருக்கம். 2.

295. கொண்டவெனை - கொண்ட என்னை; காயக்கம் - மோகமயக்கு. 'கருத்ததொரு சொல்லேனு முரையாவகை நீரென்ன சொல்வீர்' இந்த வரியும் அருகில் உள்ளது.

TAMIL NADU STATE ... OF ARCHIVES
LIBRARY,
Acc No. ....
Date ....
MADRAS-8

என்னத்தை நீர்மனத்துள் எண்ணியிருந் தாலுமுமைச்
சன்னத்தில் யானும்விடத் தக்கதொரு போதுமுண்டோ 297

பேசா திருப்பது பெண்கட் கழகென்றோ
பேசா திருந்த பெருமையையிங் கேதுசொல்வீர் 298

தேடும் பொருள்காலிற் சிக்குவபோல் வந்துநம்மை
நாடும் பொருளையுமே நான்விட் டகல்வேனோ 299

சொன்னமதை யள்ளிச் சொரிந்தாலும் கிட்டாத
கன்னிதனைக் கூடிக் கலவாமற் போவேனோ 300

தன்னந் தனியேபி தற்றலின்வாய் வந்தவிந்த
அன்னந் தனைவிட் டகல்வதொரு போதுமுண்டோ 301

கோவை யிதழ்பவளக் கொம்பனையீர் நல்லநல்ல
பூவதனைக் கண்டாற் புனையா தொருவருண்டோ 302

வாய்ந்தவிரு வோரும் மனமொத் தணைவதுதான்
காந்தருவ மன்றலெனக் கன்னியே கேட்டிலையோ 303

விள்ளற் கரியவடி வேலவனார் தானுமந்த
வள்ளிக் கொடியை மணந்த தறியீரோ 304

சித்த மகிழ்வால் சீவகன்முன் காந்தருவ
தத்தைதனைக் கூடித் தழுவியதுங் கேட்டிலையோ 305

அனுருத்திரன் அந்த அரக்கர்கோன் ஈன்ற
கனியை மணந்ததுவுங் கன்னியே கேட்டிலையோ 306

---

300. சொன்னம் - பொன்.

303. மனமொத்து சேருவதுதான், இப்படியும் அருகிலேயே எழுதப்பட்டுள்ளது. காந்தருவ மன்றல் - திருமணங்களை, எண் வகைப்படுத்தி பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் காந்தருவம் ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்று வேத நூலில் கூறப்பட்டுள்ளது. தமிழில் காந்தருவ மணம் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. 'ஒரு நான்கு வேதத்து இருநான்கு மன்றல்' -நம்பி அகப்பொருள் களவியல்; நூற்பா 1. காந்தருவமணம் - கொடுப்பாரும் கேட்பாருமின்றி தலைமகனும், தலைமகளும் தனியிடத்து எதிர்பட்டுத் தாமே கூடுவது.

304. விள்ளற்கரிய - பேசுதற்கரிய, கூறுதலுக்கு அரிய

306. அனுருத்திரன் - கண்ணனின் மகனாகிய பிரத்யும்நனின் மகன். இவன் கண்ணனின் பகைவனாகிய சோணாபுரியை ஆண்டு வந்த பாணாசுரனின் மகள் 'உஷா'வைக் காந்தருவ மணம் புரிந்து கொண்டவன்.

அன்று சுபத்திரையை யாருஞ் சிலைவிசையன்
சென்றணைந்து கொண்டதுவுந் தேசமறியாதோ 307

பெற்றார் பிறந்தார் பெரியா ருரியார்மற்று
உற்றார் தனில்யார் உடனிருந்து கொண்டதுதான் 308

இந்த படிவீணி லேகாலம் போக்கிவிட்டால்
எந்தப் படியாம் இணங்கிச் சுகிப்பதுதான் 309

## தான் தற்புகழ்தல்

மின்னணங்குக் காகமுன்னம் வில்வளைத்த போதகுரு
மன்னவ னென்றென்னை மடமயிலே கேட்டிலையோ 310

வேலைவாட்டுங் கண்மட மெல்லிநல்லீர் வேந்தர்புகழ்
நாலுகோட் டைக்கரச னாமென் றுணர்ந்திலையோ 311

ஏடவிழ்த்து வாசித்து இருந்து மருங்கறியா
தோடளியீர் கொந்தளமிட் டுற்றீர் உமக்கழகோ 312

## மல்லிகைப் பூம்பந்தலின்கீழ்

என்னவுரைத் தையனுமே யேந்திழையாள் கூந்தல்தொடத்
தன்னைமறந் தாள்மோகச் சலதிதனிற் படிந்தாள் 313

தேசம் பரவுமந்தச் செண்பகப்பூங் காவனத்துள்
வாசம் கமழ்ந்தமுல்லை மல்லிகைப்பூம் பந்தரின்வாய் 314

போந்தமலர் அமளிப் பூம்பாயன் மீதுமலர்க்
காந்தலங்கை மாதுமலர்க் கண்ணுமொப் பாயிருந்து 315

---

307. அருச்சுனன் சுபத்திரைக்காக முனிவன் வேடம் கொண்டு, துவாரகை சென்று களவு மணம் செய்து கொண்டான். 'கானாரும் வள்ளிதனைக் கந்தனார் கூடியதும், மானாள் சுபத்திரையை வாள் விசயன் கூடியதும்'-கூளப்ப. 212 (கன்னி).

308. ஊரியார் – உரியவர்கள், ஊரினர்.(?)

309. மின்னணங்கு - சீதை; மன்னவன்-இராமன்.

311. நாலு கோட்டை - சிவகங்கையில் உள்ள கோட்டையின் பெயர். சசிவர்ணப்பெரிய உடைய தேவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது.

313. சலதி - கடல்.

315. மலர் அமளி-மலர் மெத்தை; பூம்பாயல்-படுக்கை; காந்தளங்கை-காந்தள்+அம்+கை.

பேசிக் கலந்து பிரியமுடன் இருந்து
வாசப் பிளவும் வரிசையுடன் அருந்தி 316

முகத்தின்முகம் வைத்தணைத்து முத்தமிட்டுச் செங்கை
நகக்குறியும் பற்குறியும் நங்கை முலைக்கணிந்து 317

தித்திக்குந் தெள்ளமிர்தச் செங்கனிவாய்த் தேனருந்தி
எத்திக்கும் போற்றும் இவளின்ப முலைநெருடி 318

வன்னத் துகில்நெகிழ்த்து மானடிகண் டேத்திநல்ல
சொன்ன காதலித் துடையின் துடைபிணைந்து 319

கரணவகை யாலிங் கனவகையோ டெல்லாச்
சரச வகையுந் தவிராம லேநடத்தி 320

எண்புள் ளிசைகொஞ்ச இருகை வளைகலிப்ப
வெண்பிறை வாணெற்றி வெயர்முகத்து இனிதரும்ப 321

கெண்டை விழிபுரளக் கிள்ளை மொழிபதறக்
கொண்டை பிடர்ச்சரிய கொங்கை வடுஞ்சிதர 322

காலிலிரு தண்டை கலின்கலினென் றோலமிட
மேலிலகு மஞ்சளையன் மேனி துவட்சிதர 323

செங்குமுத வாயின் சிவப்பைவிழி வாங்கவுடல்
எங்கும் மயிற்கூச் செறியவிடை துவழ 324

விரகவிடாய் தீரமதன் வீறடங்க இன்பச்
சுரத நிலையறிந்து தோய்ந்து மிகச்சேர்ந்து 325

சல்லாப மீறுமத சம்போகந் தானடத்தி
உல்லாச மாக வந்து தடம்படிந்து 326

மோகந் தெளிந்துபுனல் மொண்டிறைக்குந் தென்றலினால்
தேகங் குளிர்ந்து சிறந்திருக்கும் வேளைதனில் 327

---

316. வாசப் பிளவு-வெற்றிலைப் பாக்கு; 'சீவு பிளவருந்திச் செங்கைச் சுருள் பகிர்ந்து' -கூளப்ப. கண்ணி. 224.

317. 'முலைமீது கொழுநர்கை நகமேவு குறியை' -கலிங்க. கடை திறப்பு, 30.

319. மானடி - பாதம், அவையல்கிளவி (அல்குல்); சொன்னம் - பொன்.

320. கரணம்-கை. ஆலிங்கனம் - தழுவுதல்.

322. சிதர - சிதற.

324. துவழ - துவள.

## மன்னனைத் தேடி

மானைத் துடர்ந்துசென்ற மன்னன் அடிவழியே
சேனைக் கடல்கள் திரண்டு வழிக்கூடி 328

மன்னன் இருக்குமந்த மாமலர்ப்பூங் காவணுகும்
முன்ன மறிந்துதுயில் மொய்குழலைத் தானகன்று 329

வந்துதளந் தற்சூழ வச்சிரமணித் தண்டிகைமேற்
சிந்தைமகிழ்ந் தேறியயன் சென்று நகர்புகுந்தான் 330

## நினைந்தவள் புலம்பல்

மாமாது மோக மயக்கந் தெளிந்தணைந்த
கோமானைக் காணாமல் கூறத் தொடங்கலுற்றாள் 331

தாவு மலரமளித் தந்துசுகந் தந்தசெழுங்
காவினங்கா ளென்னாசைக் காவலனைக் காணீரோ 332

மாமருவுஞ் சோலைவனக் கிளிகாள் வண்டினங்காள்
பூமயில்காள் என்னாசைப் பூமானைக் காணீரோ 333

மற்றென் மதியை மயக்கிமணந் தந்தவனிங்கு
உற்றமொழி யொன்றும் உரையாமற் போவானோ 334

---

328. துடர்ந்து - தொடர்ந்து.

330. தண்டிகை - சிவிகை;

332-333. மனம் கலங்கிய நிலையில் அவள் கேட்பதாக் அமைக்கப்படுவது தமிழ் இலக்கிய மரபு,

'நோயு மின்பமு மிருவகை நிலையிற்
காமங் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க, வொட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோ னெஞ்சொடு புணர்த்துஞ்
சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்
அவரவ ருறுபிணி தமபோற் சேர்த்தியு
மறிவும் புலனும் வேறுபட நிறீஇ
யிருபெயர் மூன்று முரிய வாக
வுவம வாயிற் படுத்தலு முவமமோ
டொன்றிடத் திருவர்க்கு முரியபாற் கிளவி'

-தொல். பொருளியல் நூ. 2.

செல்லும் வகையுமுண்டோ சீமான் உரைமொழிக்குக்
கல்லுங் கரையுமிவன் கற்றவித்தை யென்னசொல்வேன் 335

மயக்காமல் என்னை மயக்கி மயல்தந்த
நயக்காரன் செய்யு நயத்தையுமே யென்னசொல்வேன் 336

இன்பமொழி பேசியெனக் கின்பசுகம் தந்ததுரை
தெம்புமொழி யொன்றுமினிச் செப்பாமற் போவதுண்டோ 337

சின்ன வயதினமைச் சேர்ந்தணைந்து கொண்டவள்தான்
என்னசெய்வா ளென்றுமனத் தெண்ணாமற் போவோனோ 338

போதாருஞ் சோலைப் புறத்திலெனைக் கலந்திங்கு
ஏதேனுஞ் சொல்லா தினிச்சென்ற காதலன்றான் 339

சீதரனோ காந்தருவ தேவனோ அலால்ரதிக்
காதலனோ வள்ளியைமுன் கைகலந்து கொண்டவனோ 340

கைவளையுந் தானிமையாக் கண்ணு மலர்க்கணையும்
வைவடிவே லுங்குலிச வாளுமினிக் காணோமே 341

மாவிசையன் போதகுரு மன்மதரா சேந்திரநங்
காவலனே யென்னைக் கலந்ததல்லால் வேறுமுண்டோ 342

இம்மோசஞ் செய்வானென் றெள்ளளவு தானறிந்தாற்
சும்மா விடுவேனோ சொல்லுறுதி கொள்ளாமல் 343

மைவனப்பொன் கூந்தல்மட மாதர்தமக் கிச்சைசொல்லி
யெவ்வனத்தைக் கொள்ளைகொள்ள விவ்வனத்தில் வந்தானோ 344

---

335. 'இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே' -புறம். 252

337. தெம்புமொழி-ஆறுதல்.

339. போதாரும் - அரும்பு நிறைந்த, மலர் நிறைந்த.

340. சீதரன் - திருமால், ஸ்ரீதரன்; ஸ்ரீ - திருமகள்; தரன்-மார்பில் தரித்தவன்; காந்தருவதேவன் - தேவர்களின் தலைவன்; இரதிக்காதலன் - காமன்; வள்ளியை முன் கைகலந்து கொண்டவன்-முருகன்.

341. மேலே குறிப்பிட்டவர்களுக்குரிய பண்புகள் இந்த கண்ணியில் கூறப்படுகின்றன. கைவளை - சங்கு, (திருமால்). இமையாக் கண்-(காந்தருவ தேவன்); மலர்க்கணை (காமன்); வடிவேல் (முருகன்); குலிசம்-வச்சிராயுதம்.

344. யெவ்வனம்-யௌவனம், அழகு, இளமை.

கோணாமல் இன்பங் கொடுத்தணைந்த வஞ்சிநம்மைக்
காணாமல் தேடிக் கலங்குவளென் றெண்ணானோ 345

நின்னை யொருபொழுது நீங்கேனென் றிச்சைமொழி
சொன்னவன் தான் சென்ற துணிவையுந்தான் என்னசொல்வேன் 346

சென்றோன் கெடிஸ்தலத்தைச் சென்றணைவோ மென்றாலுங்
குன்றுமுலை யாய்நாலு கோட்டையென்று சொன்னானே 347

வேலைப் பொருந்தும் விழியாள் வனத்திலந்த
மாலைப் பிரிந்த மயில்போல் உளந்தளர்ந்தாள் 348

யென்ன நெடுமூச் செறிந்துமலர்ப் பாயலின்மேல்
தன்னை மறந்து கிடந்தாள் தனிவனத்துள் 349

## மொய்குழலைத் தேடி

ஆனபொழுது அங்கங்கு அகன்று தனித்தனியே
கானின் மலரெடுத்த கன்னியர்கள் எல்லோரும் 350

வந்து திரண்டோர் வழிக்கூடி யவ்வனத்தில்
முந்தி மலரெடுத்த மொய்குழலைக் காணாமல் 351

தேடினார் நெஞ்சம் திகைத்தார் நெடுந்தூரம்
வாடினார் அங்கோர் மலரணையில் வந்துகண்டார் 352

## பார்த்துப் பதைபதைத்தார்

சோர்ந்துகலை சோர்ந்துவிழி சோர்ந்துவளை சோர்ந்துகுழல்
சோர்ந்துமதி சோர்ந்துமலர் சோர்ந்துகிடக் குங்குறியும் 353

---

346. 'பெண்கொடியே பிரியேன் தரியேனிற் பிரியினுமே'
பொய்யா மொழிப்புலவர், த. வா. கோவை. பா. எ 23

347. கெடிதலம்-அதிகார விசாரணைக்கு அடுத்த இடம்; மக்கள் கூடுமிடம்.

'பேரூர் வழியேநாம் பின்தொடர்வோம் என்றாலும்
ஓர் ஊர் என்றானிலையே ஒன்பதூர் என்றானே'

ஒன்பதூர் - நவபுரி.

'ஆடுமயில் வாகனமே ஆரணங்கே பூவைகன்னி
வாடியென்று சொன்னானே வாழூர் சொல்லலையே'

-அழகிய சொக்கநாதர் காதல், சிறுபிரபந்த வகைகள் ப. 42

353. கலை - உடை.

பாவையிவள் முலைமேற் பட்ட நகக்குறியும்
கோவை யிதழ்பற் குறியும் விழிக்குறியும் 354

பார்த்துடலங் கைகால் பதறி மொழிபதறி
வேர்த்துமனம் பதறி மெல்லியரும் ஏதுசொல்வார் 355

சோபமோ நித்திரையோ தூதியர் மீதுவைத்த
கோபமோ தெய்வக் குறையோ விதிவசமோ 356

யென்ன விதமென் றியம்புவோங் காய...
கன்னி யிவள்தங் கபடமறிந் தோமிலமே 357

வந்தவிடத் திந்த மதிமோசஞ் செய்வதற்கோ
கொந்துகுழ லாளையிங்கு கூட்டிவந்து விட்டோமே 358

மானனையாள் இந்த வகைசெய்வா ளென்றறிந்தாற்
கானில் ஒருபொழுதுங் கைவிட் டகலோமே 359

பொன்னனையா ளேத்தும் புனைசுருட்டும் பாவனையும்
என்னசொல்வோ நம்மையொழித் தின்றுமணங்
கொண்டாளே 360

## வீட்டிலே

யென்றிவளை மார்போ டெடுத்தணைத்து கொண்டுநுதல்
துன்றும் வெயர்வை துடைத்துக் கலைதிருத்தி 361

தடஞ்சுனைநீர் கொண்டுமுகந் தான்குளிர்ப்பித் தந்த
மடந்தைதனைக் கூட்டிமெள்ள மாதர்மனை போய்ப்
புகுந்தார் 362

ஆங்கவளைக் கையால் அணைத்துமேன் மாடமதில்
தூங்குசப்பிர மஞ்சத் துணரணைக்கு ளேவிடுத்தார் 363

வீசினார் பொற்சிவிறி மெல்லிநல்லார் தன்முலைமேற்
பூசினார் பொற்கலவை பொற்சுண்ண மும்அணிந்தார் 364

## தலைவியின் புலம்பல்

பன்னீரால் மேனிகுளிர்ப் பாட்டினார் அன்னீரும்
வென்னீராய் மேனி வெதும்பவுமங் கேதுசொல்வாள் 365

---

356. சோபம்-சோம்பல், சோர்வு.

363. சப்பிரமஞ்சம் - அலங்கரித்த கட்டில்; துணரணை-பூம்படுக்கை.

365. குளிர்ப்பாட்டினார் - குளிப்பாட்டினார்.

அனற்குழம்பை வாரியென தங்கமெல்லாந் தான்சந்
தனக்குழம்பென் றிட்டீர் சதிகாரர் ஆனீரே 366

ஓமாக் கினியினெய்யை யூற்றுவர்போல் வீசிமெள்ளக்
காமாக் கினியைக் கரையெழுப்பி விட்டீரே 367

உற்ற துணையென் றுடனிருத்திக் கொண்டதெலாம்
இற்றைப் பொழுதி லினியறிந்து விட்டேனே 368

பாலனமென் றிட்டீர் பால்கசப்போ கற்றயிந்திர
சாலவித்தை யென்னிடத்திற் சாதிக்க வந்தீரே 369

### தாயின் புலம்பல்

வாய்ப்புலர்ந்து நொந்து மகள்தான் படுத்துயரம்
தாயறிந்து வாடிநெஞ்சம் தாங்காமல் ஓடிவந்து 370

இருகையால் வாரி எடுத்துமடி மேல்வைத்து
ஒருகையால் உச்சிமுதல் உள்ளங்கால் தானளவும் 371

தடவி யணைத்துமெள்ளத் தாய்க்கிழவி தானும்
மடமயிலே வந்தவகை யிங்குரைத்தி யென்றாள் 372

ஏதும்அறி யாள்போல் இருந்தாள் அதுகேட்ட
தாதியரும் அங்குமனந் தாங்காமல் ஏதுசொல்வார் 373

### தோழியர் கூற்று

கானகத்துள் யாங்களெல்லாம் கன்னியுடன் பூவெடுக்கப்
போனதல்லால் அங்கையொரு பொல்லாப்புத் தானறியோம்
374

ஆதாளியா லதுவும் அன்னையே யாங்களுமே
காதாரக் கேட்டதல்லால் கண்ணாரக் கண்டதில்லை 375

---

366. 'செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென் றாரோ தடவினார்' - நந்திக். 108

369. பாலனம் - பாற்சோறு; அனமுந்தான் கசப்போ - பாடவேறுபாடு; இந்திரசாலவித்தை - அற்புதங்களைக் காட்டும் வித்தை.

370. வாய்புலர்ந்து.

374. அங்கையொரு - அங்கேயொரு

375. ஆதளியால் - ஆதலால்.

ஆனால் ஒருவசனம் அந்தமலைச் சாரலின்வாய்
மான்பான போதகுரு மன்னவரா சேந்திரதுரை 376

மான்வேட்டை பன்றி வரியுளுவை வேட்டைமுதல்
தான்வேட்டை யாடத் தலைக்கொண்டா ரென்பதுவும் 377

கொம்புத் தொனியாற் குழல்தொனியால் வார்சிலையின்
அம்புத் தொனியால் அடும்வீர ரின்தொனியால் 378

தாரைசொல்லும் சூட்சியினாற் றானறிந்து கொண்டவல்லால்
நேரே யொருவர் நிகழ்த்தவுந்தான் கேட்டதில்லை 379

**தாயின் மகிழ்ச்சியும் ஏசலும்**

இங்கிவர்சொல் வார்த்தை இவள்கேட்டு உளம்மகிழ்ந்து
மங்கைநல் லீரென் வயிற்றில்பால் வார்த்தீரே 380

மண்டலிகன் போதகுரு மன்னவனை யிந்தநங்கை
கண்டால் மகிழ்ந்து கலவாமல் மீள்வாளோ 381

தேடக் கிடைக்காத திரவியத்தைத் தெள்ளமுதை
மாடப் புறாவை மயிலை வனக்கிளியை 382

கன்னியை நானீன்ற கரும்பைக் கருங்குயிலை
அன்னவன்றான் கண்டால் அணையாமல் போவானோ 383

ஆசைக்கண் ணாளனைநல் லாணழக னைமதனைத்
தேசிற்றிகழ் வால சீவகரா சேந்திரனை 384

ஒண்ணுதலும் எப்படித்தான் ஒப்புவாள் நம்மையல்லாது
அண்ணலுமே யெப்படித்தான் ஆங்கவளைச் சேர்ந்தணைவான்
385

குற்றமொரு வர்செய்தால் கொற்றவனார் கேள்வியுண்டு
மற்றவனே யிந்த வகைசெய்தா லார்க்குரைப்போம் 386

---

376. மான்பான - மாண்பான.

377. வரியுளுவை - வரியுழுவை, வரிப்புலி.

381. மண்டலிகன்-குறிப்பிட்ட பரப்புடைய நாட்டை ஆள்பவன் (இருபது யோசனை)

382. மாடப் பிறாவை-சுவடியில் இவ்வாறு உள்ளது.

386. 'கன்னம் ஒருவரிட்டாற் காவலனோ டேயுரைப்போம்;
மன்னவனே இந்தவலு மைசெய்தால் ஆர்க்குரைப்போம்'
கூளப்ப. 313.

குத்திரமே பேசியினக் கூட்டங் கலைக்குமந்தச்
சித்திவித்தைக் காரச் சிறிக்கியளுக் கேச்சாச்சே 387

நான்செய்த மாதவமோ நம்முன்னோர் செய்தவமோ
மான்செய்த புண்ணியமோ வந்தணையப் பெற்றோமே 388

கண்ணுக்கு இமைபோலக் காரிகையீர் காவல்உமைப்
பெண்ணுக்கு வைத்த பிழைமோசங் கண்டேனே 389

யாரைக்குறை சொல்வே னவ்வனத்துட் போவதுதான்
மேரையல்ல வென்றேனே மெய்யென்று கேட்டாளோ 390

துரும்பத் தனைநமது சொற்கேட்ப துண்டோ
கரும்புக் கொருமொழிதான் கன்னிவைத்துப்
பார்த்தாளோ 391

பூவையுமே பூவெடுக்கப் போனதுதான் உண்மையென்றால்
மேவுமுயிர்ப் பாங்கியரை விட்டுப் பிரிவாளோ 392

வீரியமாய்த் தன்வார்த்தை மேலிட்டா ளேயலது
காரியமென் றெண்ணியென்சொற் கன்னியுமே
கேட்டாளோ 393

செம்மலுமே வேட்டையின்மேற் சென்றவனே யாமாகிற்
கம்முபடை வீரர்களைக் கைவிட்டு அகல்வானோ 394

இருவருமே வந்தவரை யிந்த வகைக்கல்லால்
விரவிவர வந்தவகை வேறென்று உரைப்பேனோ 395

வாடுமிடை யார்களந்த மன்னனுக்குத் தன்னைப்போல்
கோடிபேர் உண்டெனவே கொம்பனையுங் கேளாளோ 396

மைக்குழலார் தன்னை மயக்குகலா வித்தையிலே
முக்கியவான் என்பதெந்தன் மொய்குழலுங் கேளாளோ 397

காவிலுடன் போனதுணைக் கன்னியரெல் லாமிருக்க
ஆவலுடன் நானீன்ற ஆயிழையைச் சேர்வானேன் 398

---

387. குத்திரம்-வஞ்சகம், ஏளனம்.

389. பிணைமோசம் - என்று சுவடியில் உள்ளது.

390. மேரை - மரியாதை, முறை, அடக்கம்.

396. 'ஐயனே உங்க ளரமனையில் ஐந்நூறு
தையலருண் டாமழகில் தன்னிகரில் லாதவராம்'
- பாரதியார், குயில்பாட்டு. பக. 30

கஞ்சமலர் வேதன் கருவில் அமைத்தபடி
வஞ்சியரே நேருமல்லால் மற்றொன் றினியாமோ 399

செகராச போசனையே சேர்ந்த சனுக்காற்
மகராசியைச் சின்நதோர்வார்த் தைசொல்லக் கூடாதே 400

பாருலகாள் மன்னனுக்குப் பாரியா யாகவுந்தான்
கார்குழலாள் என்னதவம் காசினியில் செய்தாளோ 401

தித்திக்கும் பாலினறுந் தேன்கலந்தாற் போல்மகட்குச்
சித்திக்குந் தெய்வச் செயலையுமே யென்னசொல்வேன் 402

இவ்வா றுரைத்துமகிழ்ந் தீன்றே வளர்த்தெடுத்த
மைவார் குழலியைத்தன் மார்போ டினிதணைத்து 403

**வாழ்த்துரை**

கன்னியே கண்மணியே கற்பகமே நானீன்ற
அன்னமே பெண்கட் கரசே நவரசமே 404

உந்தனைப்போல் ராசாங்க யோகம்வரப் பெற்றவரார்
பைந்தொடியே சிந்தனையென் பாக்கியமுன் பங்காச்சே 405

வில்விசையன் போதகுரு வேந்தன்தனை நாளும்
புல்கியின்ப மெய்திப் பொருந்தமிகச் சுகித்து 406

சகலசவு பாக்கியமுந் தான்பெற் றுலகம்
புகழ்மிக வாழ்ந்துநல்ல புத்திரரைப் பெற்றிரென்றாள் 407

**சித்திரமணிப் பல்லக்கில்**

பேசிவாய் மூடுமுன்னம் பெண்கள்சிலர் தற்சூழ
வாசல்மணிப் பல்லக்கு வந்திறங்கத் தான்மகிழ்ந்து 408

தேற்றி மகளைநல்ல சித்திரமணிப் பல்லக்கில்
ஏற்றி வரிசைசில வேந்திழைமார் கொண்டுசெல்ல 409

---

400. செரிந்த சனுக்காற் - பாடவேறுபாடு; சனு- சரசம்.

401. பாரியா - மனைவி.

406. புல்கல்-புல்லல், அணிதல், சேர்தல்; சுகித்து-இன்பம் அனுபவித்து.

407. சகல சவுபாக்கியமும் - எல்லா நலன்களும்.

சோதிரத்தின மென்னுமுயிர்த் தோழியுமே பின்புசெல்ல
மாதுசெல்லக் கண்டகண்ணும் மனமுமிகத் தான்களித்
தாள் 410

### மகனுக்குத் தாயனாள்

இவ்வாறு இவள்மகிழ்ச்சி யெய்தச் செகம்புரக்கும்
அவ்வால சிவக்னை ஆதவ குலோதையனை 411

வரதனைநம் போதகுரு மன்னவரா சேந்திர
துருவனைச்சென் றின்ப சுகம்பெற்ற தோகைநல்லாள் 412

தாலமதில் நல்ல சரசகுண மாலையெனும்
வாலரதியாள் இனிய மைந்தர்தனைப் பெற்றெடுத்தாள் 413

### வாழ்த்து

வாழிமறை யானினமும் வாழிமனு நீதிசெங்கோல்
வாழிசது ரங்கதளம் வாழிதமிழ் வாழியதே 414

ஓங்குபுகழ்க் குழந்தை யூர்வாழி யெத்திசையுந்
தாங்குசிவ கங்கைச் சமஸ்தானம் வாழியதே 415

சிவகங்கை இராசேந்திரபூபதிக் காதல் முற்றும்.

---

413. தாலம் - உலகம்.

414, சதுர ங்க தளம் - நால்வகைப்படை.

## பின்னிணைப்பு

வந்தவரைக் காக்கு மகாராசன் போதகுரு
தந்திரவான் வாசல் தளந்திரிய தாகவேதான்
அன்புமிகும் பழனி யாண்டியா பிள்ளையுமே
இன்ப முடனே யினிதாக வேயிருப்ப
மன்னர் புகழும் வடுகநம்பி யோகனுமே
யின்னில மதனன் இயல்பாக முன்னடப்ப
அதுலன் குழந்தைக் கதிபன் மகிழுஞ்
சதுரன் அருணா சலஞ்சேர்வை முன்னடப்ப. 1

செயமுற்ற கும்பினித் துரைமார் திரேதிடத்
தேசாதிதே சர்பரவச்
சிவகங்கை யாதிக்க மதனில்நவ ரத்தினச்
சிம்மா சனத்திருக்கும்
நயமுற்ற சதுரங்க வகளங்க மனுதுங்க
ராசாங்க யோகசாலி
நண்ணும்மத யானை யம்பாரி மேற்பவனி
நாளும்வரு தேவேந்திரர்
சுயமுற்ற செந்தமிழ்ப் பாண்டியனெனவந்த
சுமுககல் யாணராமர்
துருவனென வருகெவுரி வல்லவ நரேந்திரன்
சொல்லருட் பேறுபுத்திரர்
புயமுற்ற லட்சுமி விலாசவுல் லாசவர
புண்ணியகெண் ணியமதனா
போசவ சகாயபெல வீமமனு நீதமிகு
போதகுரு மகராசனே. 2

தேவர்முதற் சித்தர்வித் தியாதரர்முனி
வரிறைஞ்சும் வடதிசைமே ரொப்பாய்
மூவர்பணி தென்றிசைமே ரெனவுதித்தாய்
அதனாலே முன்னீர் நேமிக்
காவலர்போற் றியபோத குருராச
ராசேந்திரன் கருணை கூர்ந்து
பாவலர்பூ வலர்சகல தேவருமுன்
னிடஞ்சூழ்ந்து பலம்பெற் றாரே. 3

சுயம்பெற்றாய்த் தமிழ்க்கூடற் சுந்தரருங்
கயற்கணுமை துணைத்தாள் போற்றும்
நயம்பெற்றாய்ச் சிவகங்கை சமத்தானந்
தனைச்செங்கோல் நடத்தித் தாங்கும்
புயம்பெற்றாய் கும்பினியார் திரேசுபெற்றாய்
எதிர்த்தவரைப் பொராமல் வென்றே
செயம்பெற்றாய் போதகுரு மகாராச
ராசேந்திரா சீர்பெற் றாயே. 4

தேர்வேந்தர் வந்திரைஞ்சுந் தீரர் சிவகங்கைப்
பார்வேந்த ரானதமிழ்ப் பாண்டியர் - சீர்வேந்தர்
கோதண்ட போத குருமனுநீ தாதென்றல்
வேதண்ட ராசசிங்க மே. 5

குடிகளெல்லாங் காக்குஞ்செங் கோல்வேந்தாய் வந்தாய்
மிடிகளெல்லாந் தீர்க்கமழை மீறி - விடியமட்டும்
பேய்ந்ததுபார் போதகுரு பெம்மானே மாமகுடம்
வேய்ந்ததுரை ராசசிங்க மே. 6

சீருலவு பூமண் டலத்திலம் பத்தாறு
தேசமுதல் அட்டதிசையுந்
திறைதந்து நின்றடி வணங்கத் திகாந்தமுஞ்
செங்கோல் நடாத்தியரசு
செய்யுமக ராசாதி ராசன் தமிழ்க்கருள
தியாகமார்க் கண்டனாருஞ்
செல்வநய குணவமுர்த துல்லியமது ரிதவசன
தயிரியமிகு தயாளன்
பாருலவு செயமாது புவிமாது அகலாத
பாஸ்கரந் தென்குழந்தைப்
பதியில்வரு போதகுரு மகராச சாமியுன்
பண்புதெரி சட்டதிட்டப்

பான்மையுங் கண்டுமதி யூகிஅப் பாச்சியுயர்
பட்டிமந்திரி சுமுந்திரி
பாரில் உனக்குநிகர் அலவென்று கண்டுளம்
பரிவோடு மகிழ்ந்துவந்து
பேருலவு கனசென்னப் பட்டண மனுப்பவெகு
பிரியமுடன் சென்றுகெவுணர்
பேட்டிசெய் தங்கு போர்டினுத் தரவுமே
பெற்றுவந் ததிகவரிசை
பெற்றுநர் வாகனமு முற்றநின் மகிமையைப்
பேசுதற் கெளிதாகுமோ
பிரசமிகு தெரியல்புனை விப்பிற்குல மாதவா
பிறபல சபாரஞ்சிதா
வாருலவுங் கனதன மடந்தையர்கள் அதிமோக
மதனயிங் கிதசொரூபா
வட்டமிட் டிடசாரி வலசாரி பாய்ந்து
வருவாம்பரி நடத்துநகுலா
மண்டலமே லெட்சும நரசிம்ம ஆசாரியார்
மைந்தனென வந்தயோகா
மனுநீத தயாளகுணராசபிர வுடீகர
மனோகரமதி தேசிக மணியே. 7

வண்மைதரு நவமணி சிறந்தபொற் கொட்டகை
வகுத்தரு கெலாஞ்சிறப்ப
வற்த்திபெறு நித்திலப் பந்தர்கள் அமைத்துநெடு
வான்முக டளாவுசெம்பொன்
மகமேரு வுஞ்சமைத் திலகவே தெருவெலா
மகரதோ ரணம்நிரைத்து
மஞ்சுலவு மணிமாடப் பந்தியின் முகப்பெலா
மலிகவே தான்பதுக்கித்
திண்மைதரு பதினெண் வாத்தியமு மணமுரசுந்
தியாகமுர சுங்கலிப்ப

தேசுதரு சங்கீத மேளவாத் தியமுஉடன்
செயபேரி யுந்தொனிப்ப
செப்பரிய வேதமுறை தப்பாது திருமணம்
செய்துமறை யோர்களுக்குஞ்
செந்தமிழ்க் கவிநாவ லர்க்கும்வறி யோர்க்கும்
வஸ்திரபூ ஷணங்களுடனே
ஒண்மைதரு நிதியமும் அளித்தலங் காரமுடன்
உவகையிலெழுந் துகடல்சூழ்
உலகெலாங் கொண்டாட நவரத்தின வம்பாரி
யுற்றமத யானைமீது
ஒளிகள் பளபளெனச் சிறந்தசொர் ணச்சிவிகை
யூடுமா ணிக்கமயமாய்
ஓங்குரத மீதுஉயர் வாம்பரி யின்மீதுஅழ
கொழுகுசா மரையிரட்ட
வெண்மைதரு சந்திரவட் டக்குடை நிழற்றயிம்
மேதினியெல் லாஞ்சிறப்ப
மிக்கான பவனிவரு சக்கிரா திபாவிசை
யமிஞ்சுர மணீகதுல்லியா
வெண்தரள மாலைபுனை திண்புய வரோதயா
வித்துவபரி பாலநிபுணா
மேன்மைதிகழ் போதகுரு சாமிமக ராசனே
விசையலெட் சுமிவாசனே. 8

# கந்தர் காதல்

# கந்தர் காதல்

## உள்ளடக்கம்

(எண்கள்—கண்ணிகளின் எண்கள்)


| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | ... |
| தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல் | 1 |
| முன்னம் ஒரு நாள் | 5 |
| ஆடையும் அணிகலனும் | 7 |
| விளையாடல்கள் | 14 |
| தனியே புலம்பல் | 18 |
| காட்சியும் கேள்வியும் | 21 |
| நலம் புனைந்துரைத்தல் | 29 |
| வேண்டுதல் | 41 |
| வேட்கை உணர்த்தல் | 45 |
| சொல்வலை வேட்டுவர் | 56 |
| உடன்படல் | 59 |
| காதலும் நாணமும் | 64 |
| அகமும் முகமும் | 67 |
| ஐயம் தீர்த்தல் | 74 |
| தான் தற்புகழ்தல் | 81 |
| சாதியும் சொத்தும் | 84 |
| பெற்றோரும் சுற்றமும் | 90 |
| கைவேல் ஆற்றலும் கைகலந்தவகையும் | 93 |
| கூடல் | 95 |
| பிரிவும் ஆறுதலும் | 103 |
| பணிதலும் வேண்டலும் | 107 |
| வேலவர் புறப்பாடு | 112 |
| நூற்பயன் | 114 |

# கந்தர் காதல்

## காப்பு

*கற்றுணர்ந்தோர் போற்றுங் கருணைதிரு வல்லையில்வாழ்
கொற்றளந்தார் நேரிழையைக் கூடியே-பெற்றவொரு
மைந்தன் கணபதியே மாமயி லேறிவருங்
கந்தனுடன் காதலுக்குக் காப்பு.* 1

*சீரார் கருணை சிவனார் திருமகனே
வாராத செல்வமெல்லாம் மகிழ்ந்து தருவோனே
வித்தைக்கு நாயகனே விண்ணோர் பெருமானே
மத்த கரிமுகனே மாயோன் மருகோனே* 2

*சித்தக் கவலையெல்லாந் தீர்க்கும் விநாயகனே
நித்த முனைத்துதித்து நிற்கும் அடியார்கள்
நெஞ்சுதனி லென்று[ம்] நிலையா யிருப்போனே
அஞ்சு கரத்தோனே யானை முகத்தோனே* 3

---

*1, திருவல்லை. திருவல்லம் என்றும், திருவலம் என்றும் வழங்கப்படுகிறது. திருஞான சம்பந்தரின் முதல் திருமுறையின் பதிகப் பாடல்களில், 'திருவல்லம்' என்றே காணப்படுகிறது. அருணகிரிநாதரின் திருப்புகழில், 'திருவல மேவும் பெருமாளே' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது (பாடல் எண். 669. ஏழாம் திருமுறை). இங்குள்ள நந்தி கிழக்குப் பக்கம் பார்த்திருக்கிறது. இவ்வூர் வடஆற்காடு மாவட்டத்தில் சித்தூருக்கு அருகில் உள்ளது. இக்கோவிலில், கோப்பரகேசரியான ராசேந்திர சோழன் (கி. பி. 1050-62) இராசமகேந்திரன், கோராச ராசகேசரிவர்மன் சோழபூபன் மகனான வீரசம்பன் ஆகியோர் காலத்துக் கல்வெட்டுகளும் உள்ளன.*

*2. மத்தகரி - மதயானை.*

*3. அஞ்சு-ஐந்து; மலையாளத்தில் அஞ்சு என்றே வழங்குகின்றனர் கம்பரும். 'அஞ்சுவணத்தின் ஆடையுடுத்தார்' என்கிறார், —சுந்தர - ஊர்தேடு படலம்,*

சாற்றரிய பாரதத்தைத் தப்பாமல் எப்பொழுதும்
யேற்றரிய கொம்பால் எழுதவல்ல பிள்ளையாரே
அப்ப மெழுநூறா மரியதரந் தொண்ணூறாம்
செப்பரிய வெள்ளுண்டை சேரநூ றாயிரமாம் 4

மாங்கனிகள் நூறாம் மாதுளங்காய் முன்னூறாம்
பூங்கரும்பு லட்சம் பொரியா யிரக்கலமா[ம்]
சீனி யறுகலமாந் தேன்பாகு முக்கலமாம்
ஆவின்றும் பாலும் அரிய பலாச்சுளையும் 5

பாகு கலந்தவவல் பதினாயிரக் கலமாம்
வாகுசிறு வெள்ளரிக்காய் மலைபோலே நான்குவிப்பேன்
உடைக்கநல்ல தேங்காய் ஒன்பதுநூ றாயிரமாம்
படைக்கநல்ல பக்சரிசி பதினாயிரக் கலமாம் 6

கக்கரிக்காய் நூறாங் கடலை பதிங்கலமாம்
மிக்க துவரை விளாங்கனியாங் கற்கண்டாம்
மொந்தம் பழமாம் முளைப்பயறாஞ் சக்கரையாந்
தொந்தி வயிற்றோனே சுகமாக நான்படைப்பேன் 7

---

4. வடமொழியில் பாரதத்தை வியாசர் கூற விக்னேச்வரர் எழுதியதாகக் கதை. 'பண்டு பாரத மெனுங்கதை பராச ரன்மகன் பகர வெங்கரி முகன்பரு மருப்பை யொருகைக் கொண்டுமேருசிக ரத்தொரு புறத்தி லெழுதக் குவலயம்பெறு தவப்பய னுரைப்ப வரிதால்' —கலிங்க. இராசபாரம். 3.

'வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக வங்கூரெ ழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு கூர்வாமரோ'
—கடவுள் வாழ்த்து-1. வில்லிபுத்தூரார், மகாபாரதம். ப. 2.

5, அரி - நெல். மலையாள வழக்கு.

6. வெள்ளுண்டை - எள்ளுண்டை.

7. கக்கரிக்காய் - நாட்டு வெள்ளரிக்காய்; மொந்தம் பழம் - வாழைப்பழத்தில் ஒருவகை.

வெள்ளிக் கிழமையிலே வேண்டியது நான்படைப்பேன்
அள்ளி யமுதுசெய்யும் ஆனைமுகப் பிள்ளையாரே
கூட்டி யமுதுசெய்யும் குளக்கரையிற் பிள்ளையாரே
வாரி யமுதுசெய்யும் வழிக்கரையிற் பிள்ளையாரே 8

பொன்னின் கணபதியே பொன்னின் கணபதியே
போரானை மாமுகத்துப் பொன்னின் கணபதியே
கங்கை நதியாடி கரிகாலன் கொண்டுவந்த
பொங்கு மதக்களிறே பொன்னின் கணபதியே 9

**சக்தி வணக்கம்**

சண்டப் பிடாரி சரசுவதி சாமுண்டி
செண்டிக்கா தேவி திருவல்லி யேகவல்லி
உந்தன் மகன்மேல் உகந்துநான் காதல்சொல்ல
எந்தன் வினையகற்றி யீடேற்றிக் கொள்வாயே 10

## நூல்

**தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல்**

தோழியே கேளாய்நான் சொல்லும் புதுமைதன்னை
ஊழிநாள் சொன்னாலும் உள்ளம் குளிராது 1

ஆயிர நாவால் அடங்கா விசேடங்காண்
போயொருவ ரோடே புகலா விசேடங்காண் 2

ஊரார் அறிந்தாலும் உற்றார் அறிந்தாலும்
ஆரா ரறிந்தாலும் ஆறலைத்துத் தூற்றுவர்காண் 3

சற்றே கலகஞ் சதிரத்திற் போகாது
நீயறிந்த காரியமென் னெஞ்சறிந்த காரியங்காண் 4

---

8. கணபதிக்குரிய விரதங்கள் மூன்று. அவை ஒவ்வொரு வாரத்திலும் வரும் வெள்ளிக்கிழமை, ஒவ்வொரு மாதத்திலும் வரும் வளர்பிறைச் சதுர்த்தி, சிறப்பாக ஆவணிமாத வளர்பிறைச் சதுர்த்தி.

9. வரலாற்றில் இல்லாத செய்தி.

10. சாமுண்டி - ஏழு கன்னியர்கள் எனப்படும் சப்த கன்னியரில் தலைவி. சாமுண்டனைக் கொன்றதால் இப்பெயர் பெற்றாள். இவள் சக்தியின் அம்சம்.

4. பழமொழி.

### முன்னம் ஒருநாள்

ஆகையினால் சொல்லுகிறேன் அன்னமே நீகேளாய்
முன்னை யொருநாள் முடிக்கோதி யெண்ணையிட்டு 5

செண்பகப் பூப்பறித்து சேரவரைப் பரைத்து
பொன்னின் குடத்துப் புதுப்பனிநீர் தானாடி 6

### ஆடையும் அணிகலனும்

பாவாடை யுள்ளுடுத்திப் பட்டாடை மேல்சாத்தி
கூடத்தே நின்று குளிர மயிராற்றி 7

சாந்துஞ் சவ்வாதுந் தடவி சிணுக்கறுத்துச்
சந்தனமுங் குங்குமமுஞ் சாந்தும் பனிநீரும் 8

கந்தப் பொடிதூளுங் கலந்து மிகப்பூசிக்
கொப்பிட்டு வாளியிட்டு கொந்தளப்பொன் னோலையிட்டு 9

கட்டாணி முத்தின் கனத்தமூக் குத்தியிட்டு
கண்டசரம் பூண்டு கனப்பதக்கந் தான்பூண்டு 10

தோளி லுருட்டுவளை தோள்வந்தி கட்டுவடம்
முன்கை முதாரி முழுக்கடைய மோதிரங்கள் 11

பொன்னி னுடுதாரம் பொற்சிலம்பு பொற்சதங்கை
காலாழி பீலி கனத்த மயிலடியும் 12

---

6. சேர அரப்பு அரைத்து.

9. கொப்பு வாளி-மாதர் காதணிகள்; கொந்தளம்-குந்தளம், மயிர்ச்சுருள்.

10. கண்டசரம்-கழுத்தில் அணியும் அணி.

11. கட்டுவடம் – மணிமாலை, இரத்தினவடம்; கடையம்-கடகம், வளையல். தோள்வந்தி-தோளில் அணியும் வளை வகை.

'அத்தோள்கள் தோறும் தோள்வந்தியை
உடையரா யிராநின்றார்.' -(திவ். பெரியதி. 9, 2, 4வியாக்.)

முதாரி - முன்கை வளையல், 'முன்கை முதாரியு மொளிகால'
(குமர. பிர. முத்துக். பிள். 17.)

12. காலாழி - கால் விரல் மோதிரம்.

'கண்டிய தேசத்தில் பண்டு நான் பெற்ற காலாழி'
(குற்றாலக் குறவஞ்சி 123. 14)

பீலி-மகளிரிடும் கால் விரலணி. (சிலப். 6, 83 உரை.)

இன்ன பணிகள் இலக்கமறப் பூண்டுகொண்டு
ஆன பணிகள் அடைவுடனே பூண்டுகொண்டு 13

## விளையாடல்கள்

வெண்டாழைக் குள்ளிதழ்போல் வெள்ளிலையுஞ் செம்பிளவுங்
கற்பூரச் சுண்ணாம்புங் காச்சுண்டை யுங்கொண்டு 14

வேடிக்கை யாகவேநான் விளையாடுஞ் சோலையிலே
நாடித் தனிவழியே நான்வந்து புக்கேன்காண் 15

சுத்தி யுலாவிவந்தேன் தோழியரை நான்காணேன்
பத்தி யுலாவிவந்தேன் பாங்கியரை நான்காணேன் 16

கழலாடும் பெண்காளோ கைகோக்கும் பெண்காளோ
எங்கே யொளித்திருந்தீ ரென்றே யெடுத்துரைத்து 17

## தனியே புலம்பல்

அங்கும் ஒருவர் அருகில்வர நான்காணேன்
சோலைக் கிளியோடே தோகை மயிலோடே 18

வாலக் குயிலோடே வண்டின் திரளோடே
தோழிமார் செய்துவித்த சூதாட்டங் கண்டீரோ 19

பாங்கிமார் செய்துவித்த பங்கத்தைக் கண்டீரோ
என்றே புலம்பி யினித்திரும்பும் வேளையிலே 20

---

13. பணிகள் - அணிகள்.

14. வெள்ளிலையும் செம்பிளவும்-வெற்றிலையும் வெட்டுப்பாக்கும்.
'நறிய பிளவு வெள்ளிலை இவையுதவி' என்றார் பிறரும்
(பிரமோத். 9, 25)

காச்சுண்டை : புகையிலை போன்ற ஒரு செடி வகை?

16. சுத்தி - சுற்றி.

17. கழலாடும் பெண்கள் - பெண்கள் விளையாட்டு வகைகளில் ஒன்று. கழற்காய் அல்லது கழற்சிக்காய் என வழங்கப்படும் (இன்று கெச்சிக்காய் என மருவி வழங்குகிறது) காய்களைக் கொண்டு விளையாடுவார்கள்.

'செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்' (புறம்-36)
'மகளிர்...முத்தவார்மணற்
பொற்கழங் காடும்' [பெரும்பாண். 327-35)

என்றார் பிறரும்.

கைகோக்கும் பெண்கள் - பெண்களின் விளையாடல்களில் ஒன்று.

## காட்சியும் கேள்வியும்

நின்றேயென் கண்ணெதிரே நேரிட் டதுகேளாய்
கோல முடியழகுங் குண்டலத்தின் காதழகும் 21

மாலை யழகு(ம்) மணிமார்பின் கட்டழகும்
ஒராறு தாமரைபோல் ஒராறு மாமுகமும் 22

ஈராறு மாமலைபோல் ஈராறு திண்புயமும்
பன்னிரண்டு கண்ணும் பவளக் கனிவாயும் 23

பொன்னின் அரைஞாணும் பொற்சிலம்பு பொற்சதங்கை
பூவிண் டலருமந்த பூஞ்சோலைக் குள்ளொருவன் 24

ஒளித்திருந்து வந்தாப்போ லொன்றியொன்றி தோன்றிடுவான்
பார்த்திருந்து வந்தாற்போற் பலகாலுந் தோன்றிடுவான் 25

நிற்பன் இருப்பன் நிழல்போல் உலாவிடுவன்
செல்வ னகல்வன் செண்பகப்பூப் பறிப்பன் 26

பாராது போலென்னைப் பார்த்து நகைத்திடுவன்
சேராது போலென்னைச் சேர்ந்து சிரித்திடுவன் 27

ஊரென்பன் பேரென்பன் உற்றார் எவரென்பன்
ஆரென்பன் என்னை யறியீரோ சொல்லுமென்பன் 28

## நலம் புனைந்துரைத்தல்

இந்த வழகுபோல் எங்குமில்லை யில்லையென்பன்
எந்த வுலகில் இருந்துவந்தீர் சொல்லுமென்பன் 29

கூந்தலைக் கண்டாற் கொண்டல் ஒளிக்குமென்பன்
கொங்கைப் பொறையாலே கோலவிடை நோகுதென்பன் 30

அண்டையிலே பாங்கியர்கள் ஆருமில்லை யோவென்பன்
கண்ணுக்குத் தோற்குமந்த காமன் கொடியென்பன் 31

பவளக் கருணையோ பத்து விரலுமென்பன்
பத்து விரல்நகமும் பத்துகிளி மூக்கென்பன் 32

செம்பொன் குடங்கள் சிறிது மணவாதே
செவ்விள நீர்கள் சிலபோது இளகாதே 33

---

24. பூ விண்டு அலரும் - அரும்புகள் கட்டவிழ்ந்து மலரும்.
27. 'ஏதிலார் போல பொதுநோக்கு நோக்குதல்
காதலர் கண்ணே உள' —குறள். குறிப்பறிதல், 9

தாளங்கள் என்றால் தரளவடம் பூணாதே
நீளும் கிரிகளென்றால் நின்று குலுங்காதே 34

ஆரையுந்தான் கொல்வதற்கு ஆனைக்கோ டாகுமென்பன்
ஆர முலைகள் அதிபாரம் பாரமென்பன் 35

தோளிலே சற்று சுமக்கவோ கொங்கையென்பன்
இல்லையிடை யில்லையுமக் கென்னாணை
யில்லையென்பன் 36

ஆளில்லா வுங்களுக்கு ஆளலவோ நானென்பன்
கொல்லவரும் பாம்பலவோ கூடக் குலாவுதென்பன் 37

கந்தமலர்க் கூந்தல்பதக் கமலங்க ணோகுமென்பன்
இந்தநடைக்கு அன்னம் இணையல்ல வல்லவென்பன் 38

பல்லக்கில் வராமல் பாதத்தால் நீர்நடந்தீர்
பாதங்கள் கொப்பளமாய்ப் பக்குவிடா தோவென்பன் 39

பக்குவிட்டா லென்னாவி நெக்குவிடா தோவென்பன்
கொண்டையிலே வண்டிருந்தால் கோலவிடை நோகுமென்பன்
40

அண்டையிலே பாங்கிமார் ஆருமில்லை யோவென்பன்
போதவே நானுமென்ன புண்ணியஞ்செய் தேனென்பன் 41

பூங்காவில் நீர்வரனான் புண்ணியஞ்செய் தேனென்பன்
துளிரைக் குவிப்பன் துளிர்மேல் இருமென்பன் 42

மலரைக் குவிப்பன் மலர்மேல் இருமென்பன்
ஏது பிரியமுமக் கென்னாணை சொல்லுமென்பன் 43

---

36. 'நூலினும் நுண்ணிடை சிறிதே' - மே. வீ. பதிப்பு; காரிகை, பக். 159. இரண்டாம் பதிப்பு, 1971.

37. கொல்லவரும் பாம்பு - அல்குல்.

39. 'வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்'
(சிலம்பு. அடைக்காலக்காதை - 138)
'பஞ்சிகொண் டூட்டினும் பைய பையவென்று
அஞ்சிப்பின் வாங்கும் அடி' (நாலடியார் - 396)

40. 'மல்லார் குழலில் அமர்ந்திருந்தால் அமராரை வெல்ல
வல்லான் வரோதயன் வாணன்றென் மாறை மதுகரங்காள்
நில்லா திடையுமக் கோபழி சால நிலைநிற்குமே'
பொய்யாமொழிப்புலவர், த.வா.கோவை, பா.எ. 8

ஆழித் திரைக்கடலில் அமிர்தோ பிரியமென்பன்
வாளரவ னுச்சி மணியோ பிரியமென்பன் 44

### வேட்கை உணர்த்தல்

தென்றல்வந் திங்கென்றன் திருமேனி தீண்டுதென்பன்
திருமேனி தீண்டவது செய்ததவம் ஏதென்பன் 45

கட்டழகைக் கண்டெனக்குக் காயஞ் சிலிர்க்குதென்பன்
வட்டமுலைக் கண்டெனக்கு மார்பைத் துடிக்குதென்பன் 46

வாயிதழைக் கண்டெனக்கு வாய்நீர்வந் தூறுதென்பன்
பேசா விரதம் பிடித்தீரோ சொல்லுமென்பன் 47

பேசினால் பெண்மை பிழையாமோ சொல்லுமென்பன்
வாய்திறந்தால் பெண்ணரசே வாய்முத்து உதிர்ந்திடுமோ 48

வாய்முத்து உதிர்ந்ததென்றால் வாரேனோ நானென்பன்
எத்தனைநாள் வேகுவிட்டு இருந்தேன்நான் காவிலென்பன் 49

வேகுவிட்டு இருந்தபலன் மெய்யாச்சு எனக்கென்பன்
ஆசை வளருதென்பன் ஆசை கொடிதென்பன் 50

ஆசை பெரிதோ மலைபெரிதோ சொல்லுமென்பன்
பாயில் படுத்திடவே பள்ளிகொள்ளீர் நீயென்பன் 51

பள்ளிகொள்ளீர் நானுமக்குப் பாதம் பிடிக்கவென்பன்
பாதம் பிடிக்கவந்த பையல்கண்டீர் நானென்பன் 52

பையலென்றா லுன்கடைக்கண் பாரீரோ நீரென்பன்
ஆசைகொண்டார் கோடிபேர் ஆவிவிட்டா ருண்டென்பன் 53

ஆவிவிட்டால் பெண்ணரசே யார்மேல் பழியென்பன்
நீரில் விழுவார் நெடுமலையின் மேல்விழுவார் 54

மேரு கிரியின் மேல்விழுவார் சிலரென்பன்
இப்படியே யந்த இளையோன் எடுத்துரைத்து 55

---

46. காயம் - உடம்பு.

49. உதிர்ந்து தென்றால் - பா. வே.

50. வேகுவிட்டு - வேவு விட்டு, ஒற்றுவிட்டு.

52. பையல் - பயல், சிறுவன்.

## சொல்வலை வேட்டுவன்

செப்பிய வார்த்தையினால் செவிகள் குளிர்ந்ததுகாண்
ஓதிய வார்த்தையினால் உள்ளம் குளிர்ந்ததுகாண் 56

வார்த்தைக்குச் சொல்லு மறுவார்த்தை நானறியேன்
தோழி யவனடிக்கும் தோதகத்தை யென்சொல்வேன் 57

பாங்கி யவனடிக்கும் பங்கத்தை யென்சொல்வேன்
கல்லும் உருகுங்காண் கட்டை துளிர்க்குங்காண் 58

மனமும் உருகுங்காண் வார்த்தையவன் பேசினக்கால்
வன்னெஞ்சுக் குள்ளெல்லாம் வன்னெஞ்சு வென்னெஞ்சு 59

என்னெஞ்சு தானும் இளகிக் கரைந்ததுகாண்
கண்ணுமவன் சிங்காரம் காணக் கடுகுதுகாண் 60

காதுமவன் வார்த்தைதன்னைக் கேட்கக் கருதுதுகாண்
ஒருவற்கும் பற்றாத வுள்ளமிகப் பற்றிவிட்டேன் 61

இருதலைக் கொள்ளி யெறும்பா யுழன்றுவிட்டேன்
அக்கினியைக் கண்ட அரக்காய் உருகிவிட்டேன் 62

வெய்யிலைக் கண்ட மெழுகாய் உருகிவிட்டேன்
பேசவேணு மென்றெணுவேன் பார்க்கப் பயப்படுவேன் 63

## காதலும் நாணமும்

பார்க்கவேணு மென்றெணுவேன் பார்க்கப் பயப்படுவேன்
பொருந்தியவன் அண்டையிட்டுப் போகவுங்கால் வாராது 64

திரும்பியவன் மேல்விழவுஞ் சிந்தைமிக நாணுங்காண்
நான்வலியச் சென்றால் நமக்கீனம் என்றெணுவேன் 65

---

57. தோதகம் - வஞ்சகம்.

58. பங்கம் - எத்து, ஏமாற்று.

60. காணுக் கடுகுதுகாண் - பா. வே.

61. 'கண்ணவனைக் காண்கவிரு காதவனைக் கேட்க'
—ஐயனாரிதனார், பு. வெ. மாலை, கடவுள் வாழ்த்து.

62-63. பழமொழிகள்.

63. மெழுக்காய் - பா. வே.

64. காமத்தால் விரும்புதலும் நாணத்தால் ஒதுங்குதலும்
'காமம் விடுவொன்றோ நாண்விடு நல்நெஞ்சே'
—(குறள், நெஞ்சொடு கிளத்தல், 7.)

தான்வலியச் சேரானோ தன்மார்பில் என்றெணுவேன்
என்னவகை செய்வோம் என்றே மனமுருகி 66

## அகமும்முகமும்

சொன்னதற்கு நானுமொன்று சொல்லத் துணிந்துவிட்டேன்
வாரீர் குமரரே வம்போ வுரைப்பதெல்லாம் 67

வாரீர் முருகரே வல்லடியோ சொல்வ தெல்லாம்
ஆரென்றும் பார்க்கவில்லை யாரென்று அறியவில்லை 68

ஊரென்றாற் பொல்லாது வூரென்று அறியவில்லை
தாயார் அறிந்தால் தரணியுள்ளோர் தாமறிவார் 69

சற்றே கலகஞ் சதிரத்தில் போகாது
கன்னியர்கள் சோலையிலே கழலாட வாராரோ 70

பாவையர்கள் சோலையிலே பந்தாட வாராரோ
மெல்லிநல்லார் எங்கும் விளையாட வாராரோ 71

தையனல்லார் எங்கும் தனித்துவழி நில்லாரோ
நின்றநின்ற பேரையெல்லாம் நீர்பிடிக்க வாரீரோ 72

ஒன்றுமிது நன்றலவே யும்மாணை வேலவரே
என்றுசில வார்த்தை எதிரே வெகுண்டுரைத்தேன் 73

## ஐயம்தீர்த்தல்

அவ்வளவில் தோழி அவன்முடுகி யோடிவந்து
போகாதே போகாதே பொற்கொடியே போகாதே 74

---

70. சதிரத்தில் - விரைவில்,

72-73. 'சோர மிழைத்திடையர் பெண்களுடனே-அவன்
சூழ்ச்சித் திறமைபல காட்டுவதெல்லாம்
வீர மறக்குலத்து மாதரிடத்தே
வேண்டிய தில்லையென்று சொல்லிவிடடி' —பாரதியார்.

73. எதிரே வெகுண்டுரைத்தல் ;- ஊடுதல் இல்லாத கடுஞ்சொல்லும், அயலாரைப் போலப் பார்க்கும் பார்வையும் காமம் மிக்க நாயகியின் குணம்.
பரிதியார் - குறள் உரைக்கொத்து - ப. 26.

'செறாஅச் சிறுசொல்லும் சொற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன் றுற்றார் குறிப்பு. —குறள் - 1097.

பூமேல் வளரும் பூந்திருவே போகாதே
பொன்னே மணிவிளக்கே பொற்கொடியே போகாதே 75

மின்னே யென்கண்ணே விளக்கொளியே போகாதே
நில்லீர் பசுங்கிளியே நில்லீர் பசுந்தேனே 76

கேளீரென் விண்ணப்பம் கேட்டபின்பு தள்ளிவிடீர்
இந்த விளமை யினிமேல் வருவதில்லை 77

இந்தப் பருவம் இனிமேல் வருவதில்லை
இந்த நலமும் இனியொருக்கால் வாராது 78

பெண்பிறந்தார் எல்லாம் பேராசை கொள்ளாரோ
ஒருவர்க்கோ வின்பம் ஒருவர்க்கோ உல்லாசம் 79

இருவருக்கும் ஒவ்வாதோ வின்பநலம் என்றக்கால்
வாருமென்ற போதே வரவல்லேன் போகவல்லேன் 80

ஆரும்அறியாமல் அடக்கமாய்க் கூடவல்லேன்
உங்கள் மனையில் உகந்திருந்தி ரானாலும் 81

அங்கும் ஒருவர் அறியாமல் கூடவல்லேன்
தோழியர்க்குச் சம்மதியாய்ச் சொல்லவென்றாற் சொல்ல
வல்லேன் 82

ஊரறியக் கொள்ளவென்றால் ஊரறியக் கொள்ளவல்லேன்
பாரறியக் கொள்ளவென்றால் பாரறியக் கொள்ளவல்லேன் 83

**சாதியும் சொத்தும்**

சாதிக்குக் குற்றமில்லை சம்பந்தக் குற்றமில்லை
சோதிக்க வேண்டுமென்றாற் சொல்லுகிறேன்
கேளுமென்றான் 84

வண்ணக் கொடிமுடிசேர் வள்ளிமலை தன்மலையாம்
கண்ணுக்குக் காட்சிதரும் கஞ்சன்மலை தன்மலையாம் 85

---

85. வள்ளிமலை - திருவல்லத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் மலைமேல் உள்ளது. வள்ளியை மணம் புரிந்த தலம் என்பர். வள்ளி ஆயலோட்டிய மண்டபம், சுனைகள் ஆகியவை உள்ளன. இம்மலை பற்றி அருணகிரியார் பாடிய பதினோரு திருப்புகழ்கள் உண்டு. ஐந்தாவது திருமுறையில் அமைந்துள்ள பாடல்களில், 'வள்ளிமலை மேவும்' என்றும், 'வள்ளிக்கல் மீது' என்றும் சொல்லாட்சிகள் உள்ளன. கஞ்சன் மலை-வள்ளி மலைக்கு அருகில் உள்ளது.

பாரொக்க வெள்ளமிடும் பாலாறு தன்னாறாம்
நித்தம் பெருகிவரு நிலையாறு தன்னாறாம் 86

பேரான நாடு பெருந்தொண்டை மண்டலமாம்
சீரான வூரு திருவல்லை மாநகராம் 87

மாலைக் கடம்பர் மயிலைப் பெரும்பதியாம்
கோலமுடன் ஏறிவருங் குஞ்சர மொன்றுளதாம் 88

கோழிக் கொடியாம் குளிர்வாகு வல்லையமாம்
ஆழியுல கெல்லாந்தம் ஆணை சென்றிடுமாம் 89

## பெற்றோரும் சுற்றமும்

தந்தையோ கொற்றளந்தார் தாயார்பேர் நேரிழையாம்
புந்திமகிழ்அண்ணன்பேர் பொன்னின் கணபதியாம் 90

மாமன்பேர் மாயவனாம் மாமிபேர் பூந்திருவாம்
காமனொரு மைத்துனனாங் கஞ்சனொரு மைத்துனனாம் 91

வருத்தமாய்க் கொண்ட மடவார் இருவருண்டாம்
ஒருத்திதெய்வ யானையாம் ஒருத்திவள்ளி நாயகியாம் 92

## கைவேல் ஆற்றலும் கைகலந்த வகையும்

வாரி சுவற வடிவேல் எறிந்தவராம்
சூரன் உடலைத் துணித்தெறிந்து போட்டவராம் 93

தம்முடைய நாமமது சண்முகவே லாயுதராம்
கோவைக் கனியைவந்து கோதுங் கிளியதுபோல் 94

---

86. பாலாறு மைசூரில் கோலார் மாவட்டத்தில் நந்தி துர்க்கம் என்னுமிடத்தில் உற்பத்தியாகி, செங்கற்பட்டு மாவட்டத்தில் சதுரங்கப்பட்டினத்திற்கு அருகில் வங்காள விரிகுடாக் கடலில் கலக்கிறது.

88. குஞ்சரம் - யானை. கல்லால் அமைந்த யானை ஒன்று இன்றும் வள்ளி மலையில் உள்ளது.

89. வல்லையம் - எறியீட்டி, வேல்.

90. புந்திமகிழணன - பா. வே. காமன் - மன்மதன்; கஞ்சன் - பிரமன்; இருவரும் திருமாலின் மக்கள்.

93. துணித்தெரிந்து - பா. வே. வாரி - கடல். சுவற - வற்றும்படி. சூரன் உடலைத் துணித்ததாவது - மகேந்திரபுரியை ஆண்டு வந்த சூரபன்மன் எனும் கொடுங்கோல் அரசனை, தேவர்களின் வேண்டுகோளிற்கேற்ப போரிட்டு வென்றகதை இதைக் கந்தபுராணத்தில் காணலாம்.

## கூடல்

கோவைக் கனியைவந்து கோதினான் முத்தமிட்டான்
நாணத்தை மெள்ளவந்து நன்றாகத் தீர்த்துவிட்டான் 95
வெட்கத்தை நீக்கியென்னை வேசிபோல் ஆக்கிவிட்டான்
நாணம் பாராமல் நான்மயங்கித் தேறிவிட்டேன் 96
தானே யென்கூறை சரிந்து குலைந்ததுகாண்
எந்த விதத்தாலே யென்னையவன் கைகலந்தான் 97
அந்த விதத்தாலே யவனை நான் கைகலந்தேன்
பன்னிரண்டு தோளும் பரிபூ ரணமாக 98
என்னிரண்டு கையால் இறுகத் தழுவுதலுந்
தோளோடு தோளுறுத்தித் தொண்டையிதழ் ஊறலுண்டு 99
தாளொடு தாளிறுகத் தானணைக்க நானணைக்க
கொங்கை குலுங்கக் குமரர் புயங்குலுங்க 100
செங்கை வளைகள் சிலம்பு கலகலென
கொண்டை புறஞ்சரியக் கூர்நகங்கள் தைத்துருக 101
கெண்டை விழிகள் கெறுவிச் சிவப்பெழும்ப
தந்தக் குறிகள்பல் தானழுத்த நானழுத்த 102

... ... ... ...

## பிரிவும் ஆறுதலும்

கூடி யிருந்த கொடிப்பந்தல் கண்டமட்டில்
வாடிமனந் தளர்ந்தேன் மற்றொருவ ரைக்காணேன் 103
சொல்லாய் வகையெனக்குத் தோழி யுயிர்பிழைக்க
நீலமயில் வாகனரை நீபோய் அழைத்துவந்து 104
சோலையிலே கூட்டிவிட்டால் தோழி யுயிர்பிழைக்கும்
உந்தன் விசேடமெல்லாம் ஒன்றுநூ றாயுரைத்தேன் 105
அஞ்சாதே தோழி அழைத்து வருவேன் நான்
என்றுசொல்லிப் பாங்கி எழுந்திருந்து தான்நடந்தாள் 106
கண்டாள் மயிலையிலே கானமயில் வாகனனை
வந்து பணிந்தாள் மலர்ப்பாதம் தெண்டனிட்டாள் 107

---

97. கூறை - சீலை.

வஞ்சியர்தான் சொன்ன மறுமொழிகள் அத்தனையும்
இன்சொல்லி னாலே இதமுடனே தானுரைத்தாள் 108

கோழிக் கொடியோனே கோதையுமை யாள்மகனே
பாதி மதிசூடும் பரமன் திருமகனே 109

கானமயில் வாகனனே கதிர்வேல் முருகோனே
வந்தருள வேணும் மலைக்குறத்தி நாயகனே 110

என்றென்றே போற்றி யிணையடிகள் தான்வணங்க
நன்றென்று வேலவரும் நகைத்தங்கு எழுந்திருந்து 111

**வேலவர் புறப்பாடு**

போந்தார் மயிலேறி பொற்காளம் தான்முழங்க
கின்னரர் கிம்புருடர் கெந்தருவர் பாடிவர 112

வந்தார் இளையோன் வனம்புகுந்தான் மங்கையுடன்
சிந்தா குலம்தெளிய சேர்ந்திருந்தார் வேலவரும் 113

கந்தனார் காதறன்னைக் கற்றவரும் கேட்டவரும்
இந்திரனைப் போலே இருந்துமிக வாழ்ந்திருப்பார் 114

சந்ததமுஞ் செல்வமுண்டாய் தழைத்தோங்கி வாழ்ந்திருப்பார்
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி 115

...... ...... ......

மூங்கில்போல் சுற்ற முசியாமல் வாழ்ந்திருப்பார். 116

கந்தர் காதல் முற்றிற்று.

பொன்னுங்கணபதி எழுதி நிறைவேறினது.
*அசய ௵ ஆவணி மீ 10ல் நிறைவேறினது
பொய்கைப்பாக்கம் சிங்காரவேலு படிக்கின்ற
'பொன்னுங்கணபதி'

---

112. காளம் - சிறுசின்னம்; கின்னரர், கிம்புருடர், கெந்தருவர் - தேவ சாதியினர்.

113. சிந்தாகுலம் - மனக்கவலை.

115. சந்ததமும் - எப்பொழுதும்; வேறோடி - பாடம்.

116. முசியாமல் - மெலியாமல்.

* சரசுவதி மகால் நூலகத் தமிழ்ச் சுவடியில் 'பிரசோற்பதி ௵ மாசிமீ 14உ ஞாயிறு ஆதித்தவார நாள் பொன்னிக்கணபதி 'மாசிலாமணி எழுதி முகிந்தது' என்று உள்ளது.

# துணை நூற்பட்டியல்


1. அருணாசலம், மு. , 'இலக்கிய வரலாறு' 10, 11, 15 ஆம் நூற்றாண்டுகள்.
2. அருணாசலம், மு., (பதி), 'பிரபந்தமரபியல்', அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக மலர், xxi, 1976.
3. ஆறுமுக நாவலர், (பதி), 'சேதுபுராணம்', இரண்டாம் பதிப்பு.
4. இராகவையங்கார், ரா., 'சேதுநாடும் தமிழும்', தமிழ்ச் சங்க முத்திரசாலைப்பதிப்பு, 1915.
5. கண்ணப்ப முதலியார், பாலூர்., 'தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற சிவத்தலங்கள்' பாரிநிலையம், முதல் பதிப்பு 1969.
6. கந்தையா பிள்ளை, ந. சி., 'தமிழ்ப்புலவர் அகராதி' நூற்பதிப்புக் கழகம், சென்னை - 1, 1952.
7. 'கலைக்களஞ்சியம்', தொகுதி - 4 தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு, முதற்பதிப்பு, 1956.
8. குப்புசாமி ஆழ்வார், டி. கே., 'காதல்', சிறுபிரபந்த வகைகள், சென்னை - 17.
9. கோபாலகிருட்டிணன், வை. மு. கோ., (பதி), 'மகா பாரதம், ஆதிபருவம்' 1939.
10. கோபாலையன், அ., (பதி) கலிங்கத்துப்பரணி.
11. சாமிநாத ஐயர், உ.வே., டாக்டர்.,(பதி),'புறநானூறு' இரண்டாம் பதிப்பு, 1923.
12. சுப்பிரமணியம், ச. வே., மணவாளன், அ. அ., பதிப்பாசிரியர்கள், 'இலக்கியக் கொள்கை' தொகுதி - 2 உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு.
13. செயராமன், ந. வீ., 'சிற்றிலக்கியச் செல்வங்கள்' மணிவாசகர் நூலகம், சிதம்பரம், முதற்பதிப்பு, 1967.
14. சோமசுந்தரனார், பொ. வே., உரை., 'புறப்பொருள் வெண்பாமாலை' கழக வெளியீடு, முதற்பதிப்பு, 1955.

15. சோமலெ, 'செட்டிநாடும் தமிழும்' பாரி நிலையம், சென்னை - 1, இரண்டாம் பதிப்பு, 1960.
16. 'தஞ்சை வாணன் கோவை', கழக வெளியீடு, முதல் பதிப்பு, 1952.
17. 'நந்திக்கலம்பகம்' கழக வெளியீடு, முதற்பதிப்பு, 1955.
18. நாகசாமி, இரா. டாக்டர்., 'கல்வெட்டு-6', தொல் பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை - 28.
19. பாண்டித்துரை, (பதி), 'நாற்கவிராசநம்பி யகப் பொருள், விளக்கம்', 1913.
20. பாரதியார், 'குயில்பாட்டு' பாரதி பிரசுராலயம், பத்தாம் பதிப்பு, 1956.
21. பாரதியார், 'பாரதியார் கவிதைகள்', ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை - 1, இரண்டாம் பதிப்பு, 1950.
22. மீனாட்சி சுந்தரம், தெ. பொ. ., 'தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்', கிறித்தவ இலக் கியச் சங்க வெளியீடு, முதற்பதிப்பு.
23. முத்துச்சண்முகம், டாக்டர்; நிர்மலா மோகன், 'சிற் றிலக்கியங்களின் தோற்றமும் வகையும்', முதற் பதிப்பு, மதுரை, 1979.
24. வீரமாமுனிவர், 'சதுரகாரதி' Public Instruction Press 1860.
25. வேங்கடசாமி நாட்டார், ந. மு., உரை., சிலப்பதி காரம்' கழக வெளியீடு, முதற்பதிப்பு, 1942.
26. வேணுகோபாலப் பிள்ளை, மே. வீ., 'யாப்பருங்கலக் காரிகை', பாரி நிலையம், சென்னை-7, இரண்டாம் பதிப்பு, 1971.
27. வையாபுரிப் பிள்ளை, (பதி), 'தொல். பொருள். நச்சி னார்க்கினியர் உரை,' 1934.
28. Arunachalam, M., '*An Introduction to the history of Tamil Literature*'.
29. Ramasamy, A., Dr. (Ed), *Gazetteer of India*, Ramanathapuram, 1972.
30. '*Tamil Lexicon*' University of Madras, 1927.

# உட்தலைப்புகளின் அகரவரிசை

கு—குமாரலிங்கவேந்தன் காதல்
சி—சிவகங்கை ராசேந்திரபூபதி காதல்
க—கந்தர் காதல்

(எண்கள் - கண்ணிகளின் எண்கள்)


| | |
|---|---|
| அகமும் முகமும் | க. 67 |
| அடையாமல் போவேனோ | கு. 277 |
| அரசனைத் தேடி | கு. 302 |
| அரசுச் சுற்றமும் அமைச்சும் | சி. 82 |
| அவையடக்கம் | கு. 4, சி. 28 |
| அறக்கட்டளைகள் | சி. 70 |
| அறிமுகம் | கு. 281 |
| ஆடையும் அணிகலனும் | க. 7 |
| ஆற்றலும் அருளும் | சி. 55 |
| இயற்கையின் வரவேற்பு | கு. 103 |
| உடன் படல் | க, 59 |
| உடன் வருவோரும் உரைக்கும் வஞ்சினமும் | கு. 64 |
| உலகாளும்நாளில் ஒருநாள் | கு. 34 |
| ஐயம் | சி. 236, கு. 187 |
| ஐயம் தீர்த்தல் | க. 74 |
| ஒப்பனைகள் | கு. 139, சி. 90, சி. 189 |
| கண்டோர் நிலை | கு. 59 |
| கருடக் கொடிகண்டு கலங்கும் நாட்டவர்கள் | கு. 76 |
| கன்னிமான் வேட்டை | கு. 253 |
| காட்சி | கு. 186, சி. 235 |
| காட்சியும் கேள்வியும் | க. 21 |
| காட்டிற்குள் வேட்டை | சி. 125 அ |
| காதலும் நாணமும் | க. 64 |

காப்பு குு. 1, சி. 1
காப்பு (கடவுள் வாழ்த்து) க. 1
காம சதுரங்கம் கு. 270
காமப் பயிர் கு. 248
காலைக் கடமைகள் சி. 88
கானவர்களும் கருவிகளும் கு. 75
குறிப்பறிதல் கு. 191, சி. 240
கூடல் க. 95
கூடல் அதிகாரம் கு. 257
கைவேல் ஆற்றலும் கைகலந்த வகையும் க. 93
கொடிகளும் பகைவர்களும் சி. 110
கொலுவிருத்தல் சி. 96
கோட்டுப்பூ கேட்டல் சி. 225
கோட்டையும் கொடியும் சி. 40
சக்தி வணக்கம் க. 10
சகுனமும் சகுனியும் கு. 78
சாதியும் சொத்தும் க. 84
சித்திரமணிப் பல்லக்கில் சி. 408
சொல்வலை வேட்டுவர் க. 56, சி. 284
சோலையின் அழகு சி. 151
தலைவி அறிமுகம் கு. 112
தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல் க. 1
தலைவியின் புலம்பல் சி. 365
தனியே புலம்பல் க. 18
தாய் வினாதல் கு. 372
தாயின் புலம்பல் கு. 383, சி. 370
தாயின் மகிழ்ச்சியும் ஏசலும் சி. 380
தான் தற்புகழ்தல் சி. 310, க. 81
துணிவு சி. 238, கு. 188
தும்பிக்கு அழைப்பு ஏன் கு. 274

| | |
|---|---|
| தேடிவந்த பாங்கியர்கள் | கு. 348 |
| தோழியர் கூட்டம் | சி. 207 |
| தோழியர் கூற்று | சி. 374 |
| தோழியரின் பதில் | கு. 377 |
| தோழியரின் புலம்பல் | கு. 362 |
| நலம்புனைந்துரைத்தல் | க. 29 |
| நினைந்தவள் புலம்பல் | சி. 331 |
| நூற்பயன் | க. 114 |
| நெஞ்சோடு புலம்பல் | கு. 336 |
| பட்டணம் நோக்கிப் பல்லக்கில் அரசன் | கு. 307 |
| பணிதலும் வேண்டலும் | க. 107 |
| பாங்கியரோடு மலர்பறிக்கத் திட்டம் | கு. 135 |
| பாட்டுடைத் தலைவன் | சி. 32, கு. 10 |
| பார்த்துப் பதைபதைத்தாள் | சி. 353 |
| பிரிவும் ஆறுதலும் | க.103 |
| பூங்கா நோக்கிப் பூவையர்கள் | சி.163 |
| பூங்காவில் சிற்றிடையாள் | கு.328 |
| பூங்காவில் பாங்கியர்களுடன் | கு.157 |
| பூங்காவில் பூவையர்கள் | சி.215 |
| பூப்பறிக்கப் புறப்படுதல் | சி.186 |
| பூவெடுத்தல் | சி.217 |
| பூவைத்தேடும் பூந்தோட்டம் | கு.170 |
| பூவையர் பறித்த பூக்கள் | கு.164 |
| பெண் வேட்டை | சி.279 |
| பெற்றோரும் சுற்றமும் | க.90 |
| மகனுக்குத் தாயானாள் | சி.411 |
| மல்லிகைப் பூப்பந்தலின் கீழ் | சி.313 |
| மலர்த் தவிசின் மேலே மன்மதவிழா | கு.282 |
| மன்னனைத் தேடி | சி.328 |
| மாதவிப் பந்தலில் | கு.183 |
| மாதவிப் பொதும்பரில் | சி.233 |

| | |
|---|---|
| மான் வேட்டை | கு.97 |
| மானைத் தொடரும் மன்னன் | சி.148 |
| முன்னம் ஒருநாள் | க.5 |
| மொய் குழலைத்தேடி | சி.350 |
| வரிசை வரல் | கு.405 |
| வாழ்த்து | கு.410, சி.414 |
| வாழ்த்துரை | கு.402, சி.404 |
| விளையாடல்கள் | க.14 |
| வினாதலும் புகழ்தலும் | கு.192 |
| வீட்டிலே | கு.358 சி.361 |
| வீரர்களின் விருப்பம் | சி.116 |
| வேட்கை உணர்த்தல் | க.45 |
| வேட்கையில் வேண்டுதல் | சி.276 |
| வேட்டைக் கருவிகள் | சி.122 |
| வேட்டைக்குச் செல்லும் காட்சி | கு.73 |
| வேட்டைக்குப் புறப்படுதல் | சி.103, கு.48 |
| வேட்டையாடல் | கு.82 |
| வேட்டையில் நாட்டம் | சி.98 |
| வேட்டையில் விழுந்த விலங்குகள் | சி.130 |
| வேண்டுகோள் விடுத்தல் | கு.24 |
| வேண்டுதல் | க.411 |
| வேலவர் புறப்பாடு | க.112 |

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY. LIBRARY. MADRAS-

# அருஞ்சொல் அகரவரிசை

## குமாரலிங்கவேந்தன் காதல்

(எண்—கண்ணி எண்)


| | | | |
|---|---|---|---|
| அக்குவடம் | 3 | அளகாபுரியார் | 267 |
| அங்ககன் | 185 | அளவிட்டெறிந்தான் | 223 |
| அங்கசன் | 132 | அன்னம் இறங்காது | 238 |
| அஞ்சுகம் | 180 | அன்ன மலைகளுக்கு | 239 |
| அஞ்செழுத்து | 35 | அனங்கன் | 62 |
| அட்டத்திலே ஒதுக்கி | 267 | அஸ்தம் | 43 |
| அட்டதேசம் | 17 | ஆக்கினையான் | 21 |
| அட்டமின்னார் | 269 | ஆகத்துணை | 227 |
| அடையோலை | 260 | ஆசனம் | 70 |
| அண்ணுவள்ளை யூரார் | 260 | ஆசை | 85 |
| அதிதியர்கள் | 36 | ஆசைவலை | 254 |
| அதிய குரல் எழுப்பல் | 255 | ஆதிபத்தியம் | 315 |
| அதிருப ரேகை | 287 | ஆயிழைமார் | 63 |
| அந்தமான் | 101 | ஆரும் | 99 |
| அந்திவண்ணன் | 4 | ஆலிங்கனம் ஐந்து | 291 |
| அநேகம் | 402 | ஆழி | 150 |
| அம்பாரி | 311 | ஆறெழுத்து | 35 |
| அமரரும் | 118 | ஆனினங்கள் | 410 |
| அரனார் | 132 | ஆஸ்தான போகன் | 50 |
| அரிவரி | 212 | இக்கணத்தில் | 49 |
| அருந்தாது | 383 | இடையப்பட்டியார் | 262 |
| அருள்வழி | 382 | இந்தரதிகேளி | 299 |
| அரைக்காணியாட்சி | 245 | இரதி | 194 |
| அரை மாநிலம் | 252 | இரவி | 94 |
| அலவன் | 229 | இராகவனார் அம்பு | 95 |
| அவசம் | 241 | இராசகன்னி | 81 |
| | | உகிர் | 236 |

| | |
|---|---|
| உபரி | 266 |
| உருவிலி | 332, 361 |
| உள்ளியத்தார் | 332, 45 |
| உற்பலம் | 297 |
| ஊடாடுதல் | 255 |
| ஊழியத்தார் | 64 |
| எக்காளம் | 230 |
| எட்டுத்திகை | 95 |
| என்னீர்மை | 177 |
| ஏகாந்தமாக | 288 |
| ஒட்டலர் | 17 |
| ஒட்டார் | 54 |
| ஒட்டில் | 89 |
| ஓத்தை விரல் | 236 |
| கஞ்சனம் | 142 |
| கஞ்சுகியார் | 318 |
| கட்டமான | 87 |
| கட்டாப்பு | 83 |
| கட்டியத்தார் | 46, 313 |
| கடமை | 260 |
| கடையம் | 43, 146 |
| கண்ட | 316 |
| கண்டகநான் | 175 |
| கண்டகம் | 175 |
| கண்டகன் | 70 |
| கண்டசரி | 40 |
| கண்டம் | 40 |
| கண்டன் | 40, 408 |
| கண்டனூர் | 261 |
| கண்ணங்குடியர் | 260 |
| கண்ணி | 125 |
| கணிசம் | 285 |
| கணை | 100 |
| கத்தம் | 56 |
| கபோலம் | 206 |
| கரவீரபத்திரம் | 211 |
| கரிகரம் | 265 |
| கருணீகர் | 45 |
| கல்லாரம் | 389 |
| கலவை | 254 |
| கலாபம் | 278 |
| கலி | 18 |
| கலை | 351 |
| கலைய நல்லூர் | 263 |
| களபமதயானை | 267 |
| களி வண்டு | 162 |
| கற்பனை | 381 |
| கறடி | 87 |
| கறன்ன | 304 |
| கன்னா | 304 |
| கனகம் | 26, 353 |
| கனதந்தி | 210 |
| கனபணி | 354 |
| காகளம் | 312 |
| காட்டாமல் | 119 |
| காட்டில் | 259 |
| காண்டாவனதகன்ன | 186 |
| காண்டாவனம் | 186 |
| காணி | 285 |
| காதல் இராணி கணவன் | 61 |
| காந்தை மலை | 82 |
| காபாலிமாற்றான் | 335 |
| காமாக்கினி | 362 |
| காயத்ரிமந்திரம் | 241 |
| காயம் ரெட்சை | 276 |
| காரியப் பேர் கருத்தர் | 45 |
| காரூடம் | 381 |
| காலகண்டம் | 197 |
| காலாழ் | 86 |
| காலாள் பதித்தமைத்தல் | 255 |
| காலை அரவிந்தம் | 406 |
| காவியக் கணவன் | 385 |

காளம் 128, 304
காற்பெலம் 264
கானவர் 92
கானவர்கள் 75 அ
குஞ்சரம் 17
குண்டு வைய்து 88
குப்பென்று 90
குரவர் 387
குரும்படக்க 202
குலைசெயிவிழி 202
குவலயம் 42
குளத்தி 249
குறங்கு 227
குறிக்கார ரொண்டிருப்பு 65
குறுகலார் 25
குனித்த சிலை 184
கூடல் 262
கெசம் முழங்கும் 27
கெடி முரசம் 85
கெதி 16
கெருடத்துவசம் 76
கேகையங்கள் 94
கேகயம் 317
கேசரில 317
கேசவராமென்னும் கெருடக் கிருட்டிணர் பாதமதில் நேசன் 3
கைகலக்கும் 261
கைகலந்தாள் 399
கைச்சிலை 100
கைத்தாயர் 349
கைநெறித்து 357
கைகட்டி 80
கையாகில் 358
கையாலழைப்பனபோல் 189
கொங்கை 262
கொடி 335
கொண்டல் 262
கொப்பு 147
கொளுந்து 120
கோகனக மாது 26
கோகுலத்தை 42
கோட்டு மலர் 138, 356
கோளரி 65
சகோரம் 276
சங்கநிதி 403
சட்டநவ சட்டம் 269
சதிமானம் 363
சதுரங்கன் 316
சதுரங்கம் 270
சதுரன் 282
சந்ததிகள் 412
சந்திரகிரி 1
சமயநீதி 266
சய்யயிலே 358
சரகதி 55
சரப்பணி 66
சலாம் 180
சவடி 152
சாமந்தம் 57
சாமந்தர் 57
சாயரெட்சை 276
சாலி 13
சிகாமணி 31
சிங்கார 111
சில்லவார் குலம் 410
சிலைகாரர் 72
சிவிகை 404
சின்னம் 58
சீதசரவணம் 60
சுகித்து 408
சுகிந்து 403

| | | | |
|---|---|---|---|
| சுமுகன் | 78, 403 | தறுகாமல் | 101 |
| சுரதானை | 314 | தனுக்கோடி | 242 |
| சுரிகை | 51 | தாகச் சாந்தி | 259 |
| சுருதி | 39 | தாடனங்கள் | 291 |
| சுருள் | 290 | தாதகி | 178 |
| சுற்றும் | 56 | தாமன் | 382 |
| சூடகம் | 145 | தார் | 412 |
| செச்சைமயில் | 38 | தாரை | 13 |
| செந்துணி | 75 | தானாபதி | 268 |
| செப்புறா | 333 | தியக்கம் | 352 |
| செவ்வோன் | 62 | தியானம் | 310 |
| சேருவைகள் | 64 | திரிகரணம் | 241 |
| சையோகம் | 134 | தீர்த்தம் | 401 |
| சொல்லும் | 218 | துங்கன் | 78, 403 |
| சொற்கோட்டை | 24 | துடந்து | 325 |
| சொறிகுரும்பை | 250 | துடி | 75 |
| சோப விதனம் | 281 | துடி முழங்கு | 380 |
| சோபனம் | 280 | துய்யமல்லி | 246 |
| சோர்ந்துவிட | 59 | துரகதம் | 55 |
| ஞாளி | 72 | துரங்கன் | 316 |
| தட்டுண்டு | 87 | துணி | 230 |
| தட்டுருவி | 102 | தூணியேன் | 230 |
| தண்டிகை | 408 | தூதன் | 229 |
| தண்டை | 294 | தூறினாள் | 375 |
| தத்தை | 362 | தூறுதலை | 74 அ |
| தந்தம் | 291 | தெப்பம் | 227 |
| தந்திதனை | 272 | தெள்ளுதரு ஐந்து | 32 |
| தந்தி மருப்பு | 71 | தேறல் | 123 |
| தந்தி முகத்தோன் | 2 | தொடை | 282 |
| தமயந்தி | 195 | தோதகத்தி | 338 |
| தரு | 74 | தோமரம் | 88 |
| தருத் தோறும் | 107 | நத்தம் | 5, 347 |
| தவிள்ந்து | 138 | நரசிம்ம அவதாரம் | 53 |
| தளகர்த்தர் | 45, 307 | நவநிதி | 32 |
| தளபம்பர் | 15 | நன்னூலார் | 388 |
| தளம் | 308 | நாந்தக்வாள் | 282 |

| | | | |
|---|---|---|---|
| நாமாது | 29 | பாதசாலம் | 265 |
| நாராசம் | 221 | பார்வழி | 412 |
| நிசான் | 50 | பாளையம் | 107, 257 |
| நித்திரை | 352 | பிறந்தநாள் | 232 |
| நித்திலம் | 153 | பிடித்து | 262 |
| நிதி | 18 | பித்தசுரம் | 374 |
| நிமித்திகன் | 80 | பிரசம் | 383 |
| நிருபர் | 31 | பிரதாபாவி | 307 |
| நிரூபன் | 3 | பிரதானி | 57, 307 |
| நெறிக்கி | 272 | பிரம் | 352 |
| நெட்டுயிர்த்து | 355 | புட்டில் | 51 |
| நெட்டோட்டம் | 102 | புட்பமாரி | 74 |
| நெஷ்ட்டூரம் | 369 | புட்பராசு | 400 |
| பங்கேருகம் | 275 | புதிய மணம் | 392 |
| பச்சையோள் | 39 | புருஷர் | 385 |
| பஞ்சபாணதுங்கன் | 298 | புல்வாய் | 87 |
| பஞ்சவர்ணம் | 319 | பூங்கரணை | 382 |
| பண்ணை | 245 | பூசாபலன் | 399 |
| பண்குரி | 319 | பூரிகை | 304 |
| பத்திரகேசம் | 311, 326 | பேரி | 74 |
| பத்துமதி | 236 | பொங்கரவு | 124 |
| பதுமினி | 112 | பொருந்தார் | 24 |
| பரிசனம் | 56 | பொற்பணி | 243 |
| பரிபுரம் | 265 | பொஷ்த்தகத்தை | 235 |
| பழமொழி | 390 | போகம் | 251 |
| பவழக்காடு | 259 | போகவாரி | 992 |
| பற்மராகம் | 149 | போதிகை | 327 |
| பறந்துவர | 332 | மகராலயம் | 300 |
| பன்னகர் | 187 | மகரிகாபத்திரம் | 144 |
| பாகண்டன் | 302 | மண்டலீகர் | 316, 408 |
| பாகு | 122 | மணிப்பணிகள் | 407 |
| பாசிப்பல் | 75 அ | மதங்கதேவர் | 257 |
| பாடகம் | 145 | மதயானை | 219 |
| பாடலம் | 177 | மயில்க்கு | 121 |
| பாத்துவரும் | 280 | மறையினம் | 336 |
| பாதசரம் | 145 | மல்லல்புய | 323 |

| | | | |
|---|---|---|---|
| மல்லாரி | 380 | யிந்தரதி | 299 |
| மலர்த்தவிசு | 286 | யோகம் | 402 |
| மன்னியவார் | 308 | ரஞ்சித விலாசா வளிதர | 318 |
| மனு | 30 | ரணமார்த்தாண்டன் | 316 |
| மாகனகத்தண்டிகை | 405 | ரத்திமேளம் | 312 |
| மாதரசர் | 58 | ரத்தினம் | 160 |
| மாதவன் | 60 | ராசதடம் | 378 |
| மாதுவல்லிபாகம் | 342 | ராசரெத்தினம் | 400 |
| மாபாலர் ஆயுதம் | 335 | ராவுத்தமிண்டர் | 314 |
| மாமணி | 335 | ரேக்கு | 152 |
| மாரர்க்கு | 128 | லாடசிங்கி | 390 |
| மாரீசமான் | 97 | வங்கை | 132 |
| மால் | 47 | வசிஷ்டன் | 409 |
| மாலான | 59 | வரவழை | 245 |
| மாலும் திருவுமென | 300 | வள்ளம் | 133 |
| மாலைஅரவிந்தம் | 406 | வள்ளைக் கொடி | 247 |
| மாலையுறு | 322 | வளவில் | 358 |
| மானபரன் | 329, 410 | வளையாழி | 61 |
| மீமிசை | 76 | வன்னிப்பரி | 33 |
| முண்டன் | 40 | வனசமிதை | 362 |
| முண்டகம் | 175 | வாகுவலையம் | 42 |
| முந்திபரி | 272 | வாசி | 85 |
| முலைமுகட்டில் | | வாதசுரம் | 374 |
| முத்துதிர்த்தாள் | 380 | வாமகரம் | 284 |
| முழந்தாள் | 229 | வாயெறிந்தும் | 390 |
| முளரித்திருவரசு | 349 | வாளி | 147 |
| முன்னே வைத்து | 66 | வானிரவி | 198 |
| முனிக்குரும்பர் | 220 | விசையம் | 22 |
| மூன்றுவகைப்பூ | 170 | விஞ்சையர்கோன் | 339 |
| மேவார் | 108 | விடஅரவு | 9 |
| மேவி | 341 | வித்தியா வினோதம் | 47 |
| மேற்பலம் | 264 | வித்துவசனங்கள் | 43 |
| மோகவிடாய் | 243 | வித்துவசனர் | 5 |
| மோடி | 330 | விந்தி | 210 |
| யப்புறாத்தாணி | 51 | விராடம் | 317 |
| யாளி | 68 | விறுதாவில் | 396 |

## சிவகங்கை இராசேந்திரபூபதி காதல்


| | | | |
|---|---|---|---|
| அங்கையொரு | 374 | கடமான் | 130 |
| அட்டதிக்கு பாலகர் | 26 | கண்ணேறு | 206 |
| அடிகண்டே | 281 | கதலி | 267 |
| அண்டர் | 23 | கந்தரம் | 257 |
| அத்தினி | 164 | கமலாசனத்தோன் | 180 |
| அதுலன் | 67 | கமுகு | 257 |
| அந்திமதிவேணி அரனார் | 4 | கரணம் | 320 |
| அர்த்தசந்திரன் | 248 | கல்லியாண முரசு | 47 |
| அரத்துவசன் | 56 | கல்லியாணர் | 50 |
| அரவப்படம் | 266 | கலி | 147 |
| அருணகிரி | 72 | கலை | 246, 287, 353 |
| அலவன் | 268 | கலைவாணி | 25 |
| அனந்தம் | 180 | கவான் | 267 |
| அனுருத்திரன் | 306 | காந்தருவமன்றல் | 303 |
| ஆம்பல் | 152 | காந்தளங்கை | 315 |
| ஆலிங்கனம் | 320 | காந்தி | 191 |
| ஆலிலை | 262 | காய்ச்சி | 173 |
| ஆவணம் | 21 | காயக்கம் | 295 |
| இந்திரசால வித்தை | 365 | கார்குழல் | 242 |
| இமையாக்கண் | 341 | காளைலிங்கர் | 6 |
| இரவிகுலன் | 22 | கானை | 6 |
| உத்தரீகம் | 96 | கிஞ்சுகம் | 229 |
| உதாரகரனன் | 67 | குஞ்சரன் | 2 |
| ஊரியன் | 308 | குடக்கர் | 113 |
| எண்கினங்கள் | 135 | குத்திரம் | 387 |
| ஏந்திழை | 245 | குருபுங்கவன் | 9 |
| ஐவாய்ப்பெரும்புலி | 116 | குலிசம் | 341 |
| ஓராதரவுக்கு | 178 | குழந்தைக்கு அதிபன் | 67 |
| கங்கைசுதன் | 1 | கெடிஸ்தலம் | 347 |
| கஞ்சம் | 258 | கெவுரி வல்லவன் | 73 |
| கஞ்சமலர் | 153 | கெவுரி | 100 |

| | | | |
|---|---|---|---|
| கேதகை | 229 | சிவகங்கை | 20 |
| கைமா | 132 | சீவகற்கு மாலையிட்ட சேயிழை | 241 |
| கைவளை | 341 | சீதரன் | 340 |
| கொச்சியர் | 52 | சுகித்து | 406 |
| கொட்டிபுரம் | 74 | சூழ்ச்சியுடையோர் | 101 |
| கொடுங்குன்று | 73 | சேனாபதிகள் | 82 |
| கொண்டவெனை | 295 | சொல்மாறாதான் | 59 |
| கோகனகப்போது | 10 | சொன்னம் | 300, 319 |
| கோட்டிபுரக் கண்ணன் | 7 | சோபம் | 356 |
| கோடிக்கரை | 288 | ஞாளம் | 263 |
| கோலம் | 138 | ஞாளி | 125 |
| சகல சவுபாக்கியம் | 407 | தண்டலை | 151 |
| சங்கினி | 164 | தண்டிகை | 330 |
| சத்த கன்னியர் | 25 | தண்டை | 202 |
| சத்த முனிவர்கள் | 26 | தத்தை | 232 |
| சதுரங்கதளம் | 414 | தளகர்த்தருடன் | 83 |
| சதுரன் | 22, 67 | தளநெறுங்கும் | 48 |
| சந்திர முருகு | 194 | தளவு | 226 |
| சப்பிரமஞ்சம் | 363 | தழுக்கு | 253 |
| சம்பிரம் | 86 | தனவரை | 279 |
| சமையம் | 45 | தனுக்கோடி | 288 |
| சரசகுணமாலை | 163 | தாதகி | 229 |
| சராசரங்கள் ஈன்றோன் | 260 | தாமோதரப் பெருமாள் | 60 |
| சல்லாபத் துறை | 165 | தார்குழல் | 244 |
| சலதி | 313 | தாலம் | 413 |
| சலாஞ்செய்து | 50 | தாவடம் | 196 |
| சவளம் | 122 | தானை | 282 |
| சவுமிய நாராயணர் | 9 | துணரணை | 363 |
| சவுனம் | 101 | துயில் கணமா | 102 |
| சனு | 400 | துரகம் | 127 |
| சாதகம் | 213 | துவள | 324 |
| சாரங்கம் | 151 | தூணி | 123 |
| சித்தினி | 164 | தெம்புமொழி | 337 |
| சிந்தாமணி | 57 | தொடுதோள் | 123 |
| சிரகிரி | 72 | தோகையர் | 243 |
| சின்னம் | 106 | | |

நவ்வி 136
நளினம் 247
நாகை 73
நாலுகோட்டை 311
நாலுவகை மலர் 227
நித்திய அனுஷான நியம தொழில் 88
பஞ்சரம் 229
பதாகை 40
பதுமினி 164
பந்துசனம் 89
பரிசனம் 89
பழுக்கில் 255
பாதசரம் 202
பாய்திரையான் எழினொலி 115
பாய்மா 49, 120
பாரியா 401
பாலனம் 369
பானு 59
பிண்டி 231
பிழைமோசம் 389
பீலி 203
புத்தூர் 15
புல்கல் 406
புல்வாய் 130
பூம்பாயல் 315
பூவணம் 21
பொற்சிலைகொண்டு 282
போதாரும் 339
மகம் 80
மண்டலிகர் 83
மண்டலிகன் 3, 147, 381
மந்தரபுயன் 64
மயிலடி 203
மலயமுனி 13
மலர்க்கணை 341
மலர்த்தாமம் 174
மலரமளி 375
மாடப்புறா 382
மாதவி 233
மாரன் 172
மாலிகை 39
மானடி 281, 319
மானபரன் 376
மிஞ்சி 203
மின்னணங்கு 310
மூதாரி 193
மேரை 390
மேவலர் 68
மைமா 132
மௌவல் 233
யானைமலை 280
யௌவனம் 344
ரணபேரி 106
ரமணீகன் 58
வங்கிஷதுரந்தரிகன் 56
வகுப்பெடுத்த 192
வச்சிரதன் 71
வச்சிரமணி 71, 193
வடிவேல் 341
வரமகள் 237
வரால் 268
வரியுளுவை 377
வருமடையார் 111
வள்ளம் 39
வற்கத்து 89
வாசப்பிள்வு 316
வாய்புலர்ந்து 370
வாரணப்போர் 87
வாலகிஷண் 56
வாள்வீமன் 5

# கந்தர் காதல்


அஞ்சு (கடவுள் வாழ்த்து) 3
அரி ,, 4
எள்ளுண்டை ,, 4
கத்தரிக்காய் 7
கஞ்சன் 90
கஞ்சன் மலை 85
கட்டுவடம் 11
கடையம் 11
கண்டசரம் 10
கழலாடும் பெண்கள் 17
காச்சுண்டை 16
காமன் 90
காயம் 46
காலாழி 12
காளம் 112
கின்னரர் 112
குஞ்சரம் 88
கூறை 97
கைகோக்கும் பெண்கள் 17
கொந்தளம் 9
கொப்பு 9
சதிரத்தில் 70
சந்தமும் 115
சாமுண்டி (கடவுள் வாழ்த்து) 10
சிந்தாகுலம் 113
சுத்தி 16
சுவற 93
சேர அரப்பரைத்து 6
திருவல்லை (கடவுள் வாழ்த்து) 1
தோதகம் 57
தோள்வந்தி 11
பங்கம் 58
பணிகள் 13
பாலாறு 86
பீலி 12
பூவிண்டு அலரும் 24
பையல் 52
மத்தகரி 2
முசியாமல் 116
முதாரி 11
மெழுகாய் 63
மொந்தம் பழம் (கடவுள் வாழத்து) 7
வல்லையம் 89
வள்ளிமலை 85
வாரி 93
வாளி 9
வெள்ளிலையும் செம்பிளவும் 14
வேகுவிட்டு 50